

531

# வரலாறு

பாகம் - 01

தரம் 10

புதிய பாடத்திட்டம் 2015

சிறுகுறிப்பேடு

பூபாலசிங்கம் புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No: 900
Acc No 531

Arasady Public Library
Municipal Council
Batticaloa

LENDING
ARASADY PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

## புதிய பாடத்திட்டம் 2015

## (பாகம் – 01)

Class No: 900
Acc No 531

# தரம் – 10

## வினாவிடைகள்

## கணிப்பீடுகள்

## வரலாற்று விளக்கப்படங்கள்

Arasady Public Library
Municipal Council
Batticaloa

பூபாலசிங்கம் புத்தகசாலை
202, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே.எண் : 0112422321, 0112435713
மின்னஞ்சல் :
Poobalasingham202@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | அலகு 01 / வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்கள் | 01 - 19 |
| 02. | அலகு 02 / இலங்கையின் குடியேற்றங்கள். | 2[illegible] - [illegible] |
| 03. | அலகு 03 / இலங்கையின் அரசியல் அதிகார வளர்ச்சி | 37 - 55 |
| 04. | அலகு 04 / பண்டைய சமூகம் | 56 - 76 |
| 05. | அலகு 05 / இலங்கையின் புராதன விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | 77 - 95 |

**கணிப்பீட்டுப் பயிற்சிகள்.**

| | | |
|---|---|---|
| 06. | அலகு 01 / வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்கள் | 96 - 107 |
| 07 | அலகு 02 / இலங்கையின் குடியேற்றங்கள் | 108 - 112 |
| 08. | அலகு 03 / இலங்கையின் அரசியல் அதிகார வளர்ச்சி | 113 - 118 |
| 09. | அலகு 04 / பண்டைய சமூகம் | 119 - 127 |
| 10. | அலகு 05 / இலங்கையின் புராதன விஞ்ஞானமும் தொழிநுட்பமும் | 128 - 134 |
| 11. | கணிப்பீட்டுப் பயிற்சிகளுக்கான விடைகள். | 135 - 137 |
| 12. | வரலாற்று விளக்கப்படங்களும் குறிப்புக்களும். | 138 - 157 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 01
## வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்கள்

01. **வரலாறு என்றால் என்ன?**

வரலாறு என்பது இறந்த காலத்தில் வாழ்ந்த மனித செயற்பாடுகள் பற்றிக் கற்கும் பாடமாகும். வரலாறு என்பது மானிட நாகரீகத்தின் விருத்தியாகும். ஆரம்பம் முதற்கொண்டு தொடர்ந்து வரும் பழக்க வழக்கங்கள், பண்புகள், நடத்தைகள் மானிடத் தொடர்புகள் என்பன பற்றிய கற்றல் ஆகும்.

(அ) **ஹெரடோரஸ் (வரலாற்றின் பிதா)**

ஆராய்ச்சியின் விளைவாகப் பெறப்பட்டிருக்கும் தகவல்களை உள்ளடக்கியதே வரலாறு ஆகும்.

(ஆ) **ஜி.எம். திரவிலியனின் கருத்து**

வரலாறு என்பது தனிப்பட்ட ஒரு பாடம் அல்ல, எல்லாப்பாடத்தினதும் சேர்க்கையே ஆகும்.

(இ) **ஸ்டுவர்ட் பீ கோட்**

புராதன காலம் தொடக்கம் இன்றைய காலம் வரையில் மனித குலத்தின் கடந்த காலத்தை கற்பது தான் வரலாறு ஆகும்.

(ஈ) **பேர்க்ஹாட்**

ஒரு யுகத்தில் எழுதிப் பாதுகாத்து வைக்கும் அளவிற்கு பெறுமதிமிக்க விடயங்களை அதற்கு முன்னைய யுகம் ஒன்றிலிருந்து தேடிக் கண்டுபிடித்துக் கொள்வதே வரலாறு ஆகும்.

(உ) **E.H. கார்**

இறந்தகாலத்திற்கும், நிகழ்காலத்திற்கும் இடையில் இடம்பெறும் உரையாடல் வரலாறு ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஊ) பிராட்லி

வேறுபட்ட சூழ்நிலைகளில் வேறுபட்டு செயற்படுகின்ற மனித இனத்தின் கதையே வரலாறு எனப்படும்.

(எ) ஜவஹர்லால் நேரு

நிகழ்காலமும், எதிர்காலமும் நிச்சயமாக இறந்த காலத்திலிருந்தே கட்டி எழுப்பப்படுகின்றன. அதன் அடையாளங்களிலிருந்து கண்டுகொள்ள முடியும். அதனை மறந்து செயல்படுவது என்பது அத்திவாரமின்றி கட்டடம் ஒன்றை எழுப்புவது போன்றதாகும்.

**02. வரலாற்று மூலாதாரங்கள் என்றால் என்ன?**

குறிப்பிட்டதொரு காலத்தின் அல்லது தேசத்தின் வரலாற்றை மிகச்சரியாக அறிந்து கொள்வதற்கு அப்போது எஞ்சியுள்ளவற்றையே வரலாற்று மூலாதாரங்கள் என்பர். முற்கால மனிதர்களின் செயற்பாடுகள் பற்றிய தகவல்களைத் தரும் அம்சங்களே வரலாற்று மூலாதாரங்கள் எனப்படுகின்றன.

**அல்லது**

கடந்த கால வரலாற்றையும், மனித செயற்பாடு - களையும் அறிந்து கொள்வதற்கான எழுத்தாவணங்கள், ஆக்கங்கள் என்பனவற்றை உள்ளடக்கியதே மூலாதாரங்கள் எனப்படும.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. வரலாற்று மூலாதாரங்கள் பற்றிய பாய்ச்சற் கோட்டுப்படம் ஒன்றினைத் தருக.

- வரலாற்று மூலாதாரங்கள்
  - இலக்கிய மூலாதாரங்கள்
    - உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்கள்
      - செய்யுள் இலக்கியம்
        உ + ம் :
        மகாகாவியம்
        தூது காவியம்
        போர்க் கவிதை
        நாட்டார் பாடல்
      - உரை நடை இலக்கியம்
        உ + ம் :
        அட்டுவாக்கள்
        நிகண்டுகள்
        பரம்பரைக் கதைகள்
    - வெளிநாட்டு இலக்கிய மூலாதாரங்கள்
      உ + ம் :
      நூல்கள்
      தேச சஞ்சார அறிக்கைகள்
      நாட்டுக் குறிப்புக்கள்
  - தொல்பொருள் மூலாதாரங்கள்
    - கல்வெட்டுக்கள
      உ + ம் :
      குகைக் கல்வெட்டு
      குன்றுக் கல்வெட்டு
      தூண் கல்வெட்டு
      சுவர்க் கல்வெட்டு
    - நாணயங்கள்
      உ + ம் :
      தங்கம்
      வெள்ளி
      செம்பு
    - சிதைவுகள்
      உ + ம் :
      விகாரைகள்
      போதிமனைகள
      அரசமாளிகைகள்
      பொய்கைகள்
      நந்தவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. வரலாற்று மூலாதாரங்களின் இரு பிரிவுகளைத் தருக.

1) **இலக்கிய மூலாதாரங்கள் :**
முற்காலத்தில் வாழ்ந்த முன்னோர் பல்வேறு கால கட்டங்களில் எழுதிவைத்த நூல்களும், அறிக்கைகளும் இலக்கிய மூலாதாரங்கள் ஆகும். நூல்கள் கற்பனைக் கதைகள், தேசஞ்சாரிகளின் குறிப்புக்கள், வம்சக்கதைகள் என்பன இலக்கிய மூலாதாரங்களாகக் கருதப்படுகின்றன.

2) **தொல்பொருள் மூலாதரங்கள் :**
அகழ்வாராய்ச்சியின்போது கண்டெடுக்கப் பட்டவையே தொல்பொருள் மூலாதாரங்கள் ஆகும். (தொல்பொருட்கள் எந்த எந்தக் காலத்துக் - குரியவை என்பதைத் தீர்மானிப்பதற்கு காபன் 14($C_{14}$) எனும் கால நிர்ணய சோதனை முறை பிரயோகிக்கப்படுகின்றது.) தொல்பொருள்கள், சித்திரங்கள், சிலைகள், நாணயங்கள், கல்வெட்டுக்கள், சிதைவுகள், கட்டிட இடிபாடுகள் என்பனவற்றை தொல்பொருள் மூலாதாரங்களாகக் கொள்ளலாம்.

05. இலக்கிய மூலாதாரங்களை வகைப்படுத்துக.

1) **உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்கள :**
இலங்கையரால் காலத்திற்குக் காலம் எழுதிய நூல்கள், கவிதைகள், உரைநடை இலக்கியம், செய்யுள் இலக்கியம், காவியங்கள் என்பன உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்கள் ஆகும்.

2) **வெளிநாட்டு இலக்கிய மூலாதாரங்கள :**
இலங்கைக்கு அவ்வவ் காலங்களில் வருகை தந்தும் இலங்கைக்கு வருகை தராது இருந்தும் எமது நாட்டைப்பற்றி அக்கறை செலுத்திய வெளிநாட்டவர்களினால் எழுதப்பட்ட குறிப்புக்கள், நூல்கள் என்பன வெளிநாட்டு இலக்கிய மூலாதாரங்கள் எனப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. பின்வரும் உள்நாட்டு இலக்கிய மூலாதாரங்கள் பற்றிய குறிப்புக்களைத் தருக.

| | | | |
|---|---|---|---|
| I. | தீபவம்சம் | II. | மகாவம்சம் |
| III. | சூளவம்சம் | IV. | சமந்தபாசதிகாவ |
| V. | மகாபோதி வம்சம் | VI. | தாட வம்சம் |
| VII. | தலதா சிரித | VIII. | பூஜாவலிய |
| IX. | நிகாயசங்கிரஹாய. | | |

## I. தீபவம்சம்

- ☞. இது ஒரு பாளி நூல் ஆகும். கி.பி. 4ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டது.
- ☞. புராதன காலம் முதல் மகாசேனன் வரையான வரலாற்றைக் கூறுகின்றது.
- ☞. தீவகத்தின் வம்சாவழிப் பட்டியலைத் தருகின்றது.
- ☞. இந்நூலின் ஆசிரியர் யார் என்பது அறியப்படாத விடயம் ஒன்றாகும்.
- ☞. நம்பகமற்ற ஒழுங்கமைக்கப்படாத நூலாக உள்ளமை இதன் குறைபாடாகும்.

## II. மகாவம்சம் (பாளிநூல்)

- ☞. இலங்கை வரலாற்றைக் கூறும் பிரதான நூல்
- ☞. கி.பி. 6ம் நூற்றாண்டு காலத்துக்குரியது.
- ☞. தீக்சந்த சேனவியா பிரிவெனாவில் வாழ்ந்த மகாநாமதேரரால் எழுதப்பட்டது.
- ☞. மகாநாமதேரர் ஒரு தேரவாத பௌத்த பிக்குவாவார்.
- ☞. 1ம் பாகம் புராதன காலம் முதல் மகாசேனன் வரையான வரலாற்றைக் கூறுகின்றது.
- ☞. மகாவம்சத்தின் முதற்பாகமும், தீபவம்சத்தின் சில அத்தியாயங்களும் சமமானவையாகும். ஏனெனில் இவ்விரு நூல்களுமே முன்னரே எழுதப்பட்ட சிஹல அட்டகதா, உத்தர விஹார அட்டகதா, வினய அட்டகதா முதலிய நூல்களின் செல்வாக்கின் தாக்கமாகும்.
- ☞. மகாவம்சத்தின் விளக்க உரை நூலான "வம்சத்த காசினி" அல்லது "மகாவம்ச டிகாவ" நான்கு நூற்றாண்டுகளின் பின் எழுதப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞. 'மகாவிகாரையின் எழுச்சிக்காகச் செயற்பட்ட மன்னர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டதால் இதனை மகாவிகாரையின் புராணம்' என அழைப்பர்.

**மகாவம்சத்தின் சிறப்பம்சங்கள்.**

☞. தீபவம்சத்தில் காணப்பட்ட பல குறைபாடுகளை நீக்கி இலங்கையின் 2500 வருட காலத்திற்குரிய தொடர்ச்சியான வரலாற்றை அறிய முடிகின்றது.

☞. மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் அதிகமான விடயங்கள் கல்வெட்டுக்களிலும் காணப்படுவ - தனால் இது நம்பத்தகுந்த மூலாதாரமாக சிறப்பு பெறுகின்றது.

☞. இலங்கையின் அரசியல் வரலாற்றை கால ஒழுங்கில் அறிய உதவுகின்றது.

**மகாவம்சத்தின் குறைபாடுகள்.**

☞. நூலாசிரியர் பௌத்த சமய வரலாற்றைக் கூறுவதிலேயே அக்கறை காட்டியமை. எடுத்துக் காட்டாக தேரவாத பௌத்தத்தைப் புகழ்வதால் சிலர் தேரவாத காவியம் எனவும் கூறுவர்.

☞. பழைய அரசியல் மற்றும் பொருளாதாரம் என்பன பற்றி விரிவாகக் கூறப்படவில்லை.

## III. சூளவசம்சம்

☞. நூலாசிரியர் தர்மகீர்த்திதேரர் ஆவார்.

☞. மகாவம்சத்தின் இரண்டாம் பகுதியாக அமைந்துள்ளது.

☞. மகாவம்சம் எழுதி முடிக்கப்பட்ட பின்னர் பல நூற்றாண்டுகளின் பின்னர் எழுதப்பட்டமையால் இதனை மகாவம்சத்தின் இரண்டாம் பாகமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்ற வாதமும் உள்ளது.

☞. கி.பி. 4ம் நுற்றாண்டு முதல் 18 நூற்றாண்டு காலம் வரையான வரலாற்றைத் தருகின்றது.

☞. சூளவம்சத்தின் 3ம், 4ம் பாகங்கள் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலத்தில் சித்தார்ந்த புத்திரரக்ஷித தேரரால் எழுதப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**IV. சமந்தபாச திகாவ**

- வினயபிடகம் எனும் பாளி நூலின் விளக்கமாகும்.
- இந்தியத் துறவியான புத்த கோசரினால் எழுதப் பட்டது.
- இந்தியாவில் நிலவிய பௌத்த சமயம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டமை தொடர்பான விபரங்கள் அடங்கியுள்ளது.

**V. மகாபோதி வம்சம்**

- ஜய ஸ்ரீமகா போதி பிக்குணிகளின் வரலாற்றைக் கூறுகின்றது.
- அநுராதபுரத்தில் உள்ள புனித வெள்ளரசு மரத்தின் வரலாற்றைக் கூறுகின்றது.
- உபதீஸ தேரரால் எழுதப்பட்டது.

**VI. தாட வம்சம்**

- புனித தந்த தாதுவின் வரலாற்றைக் கூறும் பாளி நூல் ஆகும்.
- ராஜகுரு தம்பகீர்ததி தேரரால் எழுதப்பட்டது.

**VII. தலதா சிரித**

- கருங்கல்லில அமைக்கப்பட்ட தலதா மாளிகையில் பிரதிட்டை செயயப்பட்ட புனித பற்சின்ன வழிபாட்டை நடாத்தும் விதத்தை விளக்கும் நூலாகும்.
- 4ம் பராககிரமபாகுவினால் சிங்கள மொழியில் எழுதப்பட்டது.

**VIII. தாது வம்சம்**

- பௌத்த தூபி அமைப்பு முறை பற்றிக் கூறும் சிங்கள மொழியிலான நூலாகும்.

**IX. பூஜாவலிய**

- தம்பதெனிய கால வரலாற்றைக் கூறும் சிங்கள மொழியிலான நூலாகும்.
- தம்பதெனிய மன்னன் 2ம் பராக்கிரமபாகு காலத்தில் மயூரபாத தேரரால் எழுதப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**X.** நிகாய சங்கிரஹாய

☞. நிக்காயாக்கள் எனக் குறிப்பிடப்படும் சங்கப்பிரிவுகளிடையே ஏற்பட்ட வளர்ச்சி பற்றிக் கூறும் சிங்கள மொழியிலான நூலாகும்.

☞. ஜெயபாகு தேவரக்ஷிதர் என்ற தேரரால் எழுதப்பட்டது.

**07. பின்வரும வெளிநாட்டு மூலாதாரங்கள் பற்றிய குறிப்புக்களைத் தருக.**

I. டிமுண்டோ
II. இண்டிகா
III. நெச்சுரலிஸ் ஹிஸ்டோரியா
IV. பூகோள சாஸ்திரப் பிரவேசம்
V. பாரசீக யுத்தம்
VI. அர்த்த சாஸ்திரம்
VII. இராஜதரங்கினி
VIII. பாகியன் குறிப்புக்கள்
IX. இபன்பதூதாவின் குறிப்புக்கள்
X. ஹயுங்சாங்கின குறிப்புக்கள்.

**I. டிமுண்டோ**

☞. இலங்கைக்கும் வடமேல் இந்தியாவுக்குமிடையில் நடைபெற்ற வர்த்தகத் தொடர்புகள் பற்றிக் கூறுகின்றது.

☞. கிரேக்க நாட்டவரான அரிஸ்ரோட்டல் என்பவரால் எழுதப்பட்டது.

**II. இன்டிகா**

☞. சந்திரகுப்த மௌரிய மன்னனின் அரச சபையில் கிரேக்க தூதுவனாகப் பணியாற்றிய மெகஸ்தனீஸ் என்பவரால் எழுதப்பட்டது.

☞. இலங்கை பற்றிய விபரங்களும் இதில் உள்ளடங்கியுள்ளன.

**III. நேச்சுரலிஸ் ஹிஸ்டோரியா**

☞. இலங்கை பற்றிய பொருளாதார விடயங்கள் அடங்கியுள்ள நூலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞. உரோம நாட்டவரான பிளினி என்பவரால் எழுதப் பட்டது.

☞. இயற்கை வரலாறு எனவும் அழைக்கப்படுகின்றது.

**IV. பூகோள சாஸ்திரப் பிரதேசம்**

☞. இலங்கை பற்றி சரியான குறிப்புக்களைத் தரும் ஒரு நூலாகும்.

☞. குறிப்பாக நாட்டின் அமைவிடம், இலங்கையின் வடிவம் என்பன பற்றிய சரியான விபரங்கள் அடங்கியுள்ளன.

☞. கி.பி. 2ம் நூற்றாண்டளவில் அலெக்சாந்திரியாவில் வாழ்ந்த தொலமி (கிரேக்கர்) என்பவரால் எழுதப்பட்டது. புவியியல் வரலாறு எனவும் குறிப்பிடப்படும் இந்நூலில் எமது நாடு தப்ரபேன் என அழைக்கப்பட்டது.

**V. பாரசீக யுத்தம்**

☞. ஆதிகாலத்தில் இலங்கை வர்த்தக மத்திய நிலையமாகத் திகழ்ந்ததாக குறிப்பிடப்படுகின்றது.

☞. கி.பி. 6ம் நூற்றாண்டில் வாழ்ந்த உரோம நாட்டரான புரோகோபிய பஸ் என்பவரால் எழுதப்பட்டது.

**VI. அர்த்த சாஸ்திரம்**

☞. இலங்கையின் வரலாற்றைக் கூறும் இந்திய நூல்களில் ஒன்றாகும்.

☞. கௌடில்யன் (சாணக்கியன்) என்ற பிராமண ஆலோசகரால் எழுதப்பட்டது.

☞. இந்நூலில் எமது நாடு தாமிரபரணி மற்றும் பாரசமுத்திரம் என்னும் பெயர்களால் குறிப்பிடப்பட்டது.

**VII. இராஜதரங்கனி**

☞. இந்தியாவின் காஷ்மீர் வரலாற்றைக் கூறும் இந்நூலில் இலங்கையின் புராதன நீர்ப்பாசன முறை தொடர்பான தகவல்கள் காணப்படுகின்றது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞. கி.பி. 11ம் நூற்றாண்டளவில் கல்கனர் என்பவரால் இந்நூல் எழுதப்பட்டது.

## VIII. பாகியன் குறிப்புக்கள்
(கி.பி. 399 – 414)

☞. கி.பி. 5ம் நூற்றாண்டளவில் இலங்கை விஜயம் செய்த சீன யாத்திரிகரான இவரின் குறிப்புக்களில் எமது வரலாற்றுத் தகவல்கள் காணப்படுகின்றன.

☞. இலங்கையின் மகாயான பௌத்தத்தின் செல்வாக்கு, மகாவிகாரை, அபயகிரி விகாரைகளின் விபரங்கள் இவரது குறிப்புக்களில் காணப்படுகின்றது.

## IX. இபன்பதூதா குறிப்புக்கள்

☞. அரோபியாவின் மொரக்கோ தேசத்தைச் சேர்ந்த முஸ்லீம் தேச சஞ்சரியான இவர் கி.பி. 1344 இல் இலங்கை வந்த போது அவதானித்த விடயங்களை தனது குறிப்பேட்டில் கூறியுள்ளார்.

## X. ஹியுங்சாங் அறிக்கை (கி.பி. 602 – 664)

☞. சீனதேசத்தைச் சேர்ந்த பௌத்தபிக்கு ஆவார்.

☞. பத்து வருடங்களாக தலயாத்திரையில் ஈடுபட்ட இவர் இலங்கை வராமலேயே இந்தியாவிலிருக்கும் போது இலங்கை பற்றிய விடயங்களை தனது அறிக்கையில் எழுதியுள்ளார்.

☞. இலங்கையில் 7ம் நூற்றாண்டு பற்றிய தகவல்களை அறியப் பெரிதும் உதவின.

**08. 17ம் நூற்றாண்டில் இலங்கையின் வரலாறு பற்றி அறியப் பெரிதும் உதவிய வெளிநாட்டு மூலாதாரங்கள பற்றிக் குறிப்பிடுக**

1) ஜோவாவே ரிபைரோ நூல்கள்

☞. போர்த்துக்கேய இராணுவத்தளபதியான இவர் தமது முதுமைப்பருவத்தில் போர்த்துக்கலின் தலைநகரான லிஸ்பனில் இருந்து எழுதிய நூல்கள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2) பிலிப்பஸ் பொல்தவுஸ் (கி.பி. 1632 – 1672)

- ☞. இவர் ஒல்லாந்த கல்வினிஸ்த மதகுரு ஆவார்.
- ☞. இவர் அன்றைய இலங்கையின் சமூக வாழ்க்கை, மொழி, கலாச்சாரம் பற்றிய குறிப்புக்களை எழுதினார்.
- ☞. 17ம் நூற்றாண்டு இலங்கை பற்றியும், சிறப்பாக வடபகுதியில் வாழ்ந்த மக்களின் மொழி, பண்பாடு பற்றியும் அறிந்து கொள்ள முடிகின்றது.

3) றொபர்ட் நொக்ஸ் (கி.பி. 1641 – 1720)

- ☞. கப்பல் மாலுமியின் மகனான இவர் 14ம் வயதில் பாரசீகத்துக்கு பயணித்த வேளை கப்பல் விபத்துக்குள்ளாகி, இலங்கைக்கரையை அடைந்தது.
- ☞. இரண்டாம் இராஜசிங்கனால் 19 ஆண்டுகள் சிறைவைக்கப்பட்ட இவர் அரிப்பினூடாக தப்பிச் சென்றார்.
- ☞. தனது தாயகமான இங்கிலாந்தில் தனது இலங்கை அனுபவங்களை வைத்து (An Historical Relation of the Island Ceylon ) "இலங்கையுடனான வரலாற்றுத் தொடர்பு" என்னும் நூலை எழுதினார.
- ☞. 17ம் ஆண்டு இலங்கை சமூக அமைப்பைச் சித்தரிக்கும் ஓவியங்களும், விபரங்களும் இந்நூலில் அடங்கியுள்ளன.

09. **வெளிநாட்டு இலக்கியங்களை நாடுகள் ரீதியாக வகைப்படுத்துக.**

- ☞. **சீன இலக்கியம் :**
  பாகியன், ஹியுங்சாங் ஆகியோரது தேசசஞ்சார அறிக்கை.
- ☞. **அரபு இலக்கியம் :**
  இபன் பதுதாவின் தேச சஞ்சார அறிக்கை.
- ☞. **போர்த்துக்கேய இலக்கியம்**
  ரிபைரோவின் இலங்கை வரலாறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ. ஒல்லாந்து இலக்கியம் :
பிலிப்போல்டியசின் இலங்கை வரலாறு.

ஊ. ஆங்கில இலக்கியம் :
றொபர்ட் நொக்ஸின் அன்றைய இலங்கை.

ஊ. தென்னிந்திய இலக்கியம் :
சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு.

10. பின்வரும் இலக்கிய மூலாதாரங்களுக்கான உதாரணங்களைத் தருக.
(i) கிரேக்க மூலாதாரங்கள்
(ii) உரோம மூலாதாரங்கள்
(iii) சீன மூலாதாரங்கள்
(iv) போர்த்துக்கேய மூலாதாரங்கள்

(i) **கிரேக்க மூலாதாரங்கள் :**
அரிஸ்ரோட்டலின் டிமுண்டோ, மெகஸ்தனிசின் இன்டிகா, ஒனசி கிரிட்டசின் அறிக்கை.

(ii) **உரோம மூலாதாரங்கள :**
பிளினியின் நெச்சுரலிஸ்ட் ஹிஸ்டோரியா, தொலமியின் பூகோள சாஸ்திரப் பிரதேசம்.

(iii) **சீன மூலாதாரங்கள் :**
பாகியன், ஹியூங்சாங் பிக்குகளின் தேசசஞ்சார அறிக்கைகள்.

(iv) **போர்த்துக்கேய மூலாதாரங்கள :**
அருட் தந்தை பர்னாவோ டி குவாரோஸின் இலங்கை பற்றிய அறிகை.

11. **இலங்கையின் முக்கிய வரலாற்றுக்காலம் / யுகங்களையும் அக்கால கட்டங்களில் எழுந்த நூல்களைக் குறிப்பிடுக.**

I. **அநுராதபுரக் காலம் :**
தீபவம்சம், மகாவம்சம், சமந்த பாசாதிக, விசுத்திமார்க்கய, தம்பியா அட்டுவா.

II. **பொலனறுவைக் காலம் :**
சூளவம்சம், சசந்தாவத, தர்ம பிரதீ பிகாவ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III. தம்பதெனியா காலம் :
சத்தர்மரத்னாவலிய, பூஜாவலிய, கவிசிலுமின

IV. குருணாகல் காலம் :
பன்சிய பணஸ் ஜாதகஸ், சிங்கள போதி வம்சம், நிகாயசங்கிரஹாய

V. கோட்டைக்காலம் :
குத்தில காவியம், காவிய சேகர, பரகும்பாசிரித, கோகிய சந்தேஸய, செலலிஹினிசந்தேஸய.

12. உளநாட்டு இலக்கிய மூலாதாரங்களில் தூது இலக்கியங்கள், புகழ்மிகு காவியம், போர்க்காவியம் என்பனவற்றிற்கு உதாரணம் தருக.
☞. தூது இலக்கியங்கள் - மயூரசந்தேஸய, திசர சந்தேஸய, கோகுல சந்தேஸய.
☞. புகழ்மிகு காவியம் - பரகும்பாசிரித.
☞. போர்க் காவியம் - சீதாவாக்க கட்டன, கொன்ஸ்தாந்தனு கட்டன, இங்கிரி கட்டன.

13. இராசரட்டை நாகரிக கால சமய வரலாற்றை அறியக் கிடைக்கும் மூலாதாரங்களை எழுதுக.
☞. போதிவம்சம் ☞. பூஜாவலிய
☞. தூபவம்சம் ☞. சத்தர்மலங்காரய

14. பின்வரும் தொல்பொருள் மூலாதாரங்களின் வகைகளைத் தருக.
1. எழுத்தாவணங்கள் 2. நாணயங்கள்
3. சிதைவுகள் 4. சித்திரங்கள்
5. சிற்பங்கள் 6. செதுக்கல்கள்

15. எழுத்தாவணங்கள் எழுதப்பட்ட தொல்பொருட் சான்றுகளையும், உதாரணங்களையும் தருக.
(i) கல்வெட்டுக்கள் - நிஸங்கமல்லனின் கல்பொத்த கல்வெட்டு
(ii) சுவர்கள் - சீகிரிய கிறுக்கல் கவிதைகள்
(iii) செப்புத் தகடு - பணாகடுவ செப்பேடு (1ம் விஜயபாகு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| (iv) பொன் தகடு | - | வல்லிபுர பொற்சாசனம் (வசபன்) |
| (v) மரப்பலகை | - | எம்பக்க தேவாலய மரத்தூண் எழுத்துக்கள் |
| (vi) பாத்திரம் | - | மட்பாண்டம் மற்றும் உலோகப் பாத்திரங்களில் எழுதப்பட்ட எழுத்துக்கள். |

16. கல்வெட்டுக்களின் வகைகளைத் தருக. அவற்றின் உதாரணங்களையும் தருக.

(i) குகைக் கல்வெட்டு

☞ பௌத்த பிக்குகள் வசித்த கற்குகைகளின் கற்பீலிக்குச் சற்று கீழே பொறிக்கப்பட்டிருக்கும்.

☞ மதகுருமாருக்குத் தானம் செய்யப்பட்டவை பிராமிய எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருக்கும்.

உ + ம் : மிகிந்தலை, வெஸ்ஸகிரிய, சிதுல்பவ்வ, ரிட்டிகல

(iii) குன்றுக் கல்வெட்டு

☞ கற்பாறைகளின்மேல் பொறிக்கப்பட்டிருக்கும். பொலன்னறுவை யுகத்தின் நிஸங்க மல்லன் Iம் பராக்கிரமபாகு போன்றோர் விகாரை. குளம் ஆகியவற்றை நிர்மாணித்து அதனருகில் இருக்கும் குன்றில் கல்வெட்டுக்களைப பொறித்தனர்.

உ + ம் : தம்புள்ள கல்வெட்டு. கடலாதெனிய இருமொழிக் கல்வெட்டுக்கள்

(iv) தூண் கல்வெட்டுக்கள்

☞ புனித தலத்திற்கு எதிரில் கற்றூண் வடிவில் எழுதிய ஆவணம் ஆகும்.

உ + ம் : பதுளைத் தூண் கல்வெட்டு கட்டுஹுகங்கே கல்வெட்டு

☞ பதுளைத் தூண் கல்வெட்டில் சில சட்டதிட்டங்களின் ஒரு தொகுதி பொறிக்கப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-பட்டுள்ளது. குறிப்பாக வியாபார நகர் ஒன்றின் பொது நிர்வாக அமைப்பு முறையினைக் குறிக்கின்றது.

(v) **சுவர்க் கல்வெட்டுக்கள்:**

☞. கல்லினால் உருவாக்கப்பட்ட தட்டையான ஒரு பலகையில் பொறிப்பது சுவாககல - -வெட்டாகும்.

உ + ம் : கல்பொத்த, மிகிந்தலை, தோணிகல

(vi) **இருக்கைக் கல்வெட்டு**

உ + ம் : மலர் ஆசனங்கள் போன்ற பீடங்களில் எழுதப்பட்டவை.

17. **கல்வெட்டுக்களின் முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக.**

☞. இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடபபட்டுள்ள விடயங்கள் பெரும்பாலும் கல்வெட்டுக்கள மூலம் உறுதிப்படுத்தப்படுகின்றன.

உ + ம் : துட்டகைமுனுவின் 10 தளபதிகள் பற்றி மகாவம்சம் குறிப்பிட்ட விபரங்கள். சிதுல் பவ்வ மற்றும் சங்கபால விகாரைக் கல்வெட்டுகளில காணப்படுகின்றமை.

☞. கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் விடயங்கள் சமகாலத்தில் பொறிக்கப்பட்டுள்ளமை இதன் சிறப்பாகும்.

☞. இவை சிங்கள எழுத்து வளர்ச்சி, இலக்கணம், அரசர்களின் பெயர்கள், பட்டங்கள், பிரதேச ஆட்சியாளர்கள், பருமக, கமிக போன்றோர் விபரங்களையும் தருகின்றது.

☞. கல்வெட்டுக்களின் மூலம் அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தகம், தொழில்கள் மற்றும் பொருளாதார நிலை, நிலத்தை அனுபவித்த முறை, வரி அறவிடப்பட்ட முறை என்பன பற்றி அறியத் தருகின்றது.

Arasady Public Library
Municipal Council
Batticaloa.
Class No: 900
Acc No 531



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ + ம் : பதுளைத் தூண் கல்வெட்டு வர்த்தகம்)

☞. சமயப்பண்பாடுகள், சமய நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள், பற்றிய தகவல்களை அறியத் தருகின்றது. (உ + ம் : ஆராமை நிர்வாகம் - மிகிந்தலைக் கல்வெட்டு, களுதிய பொக்குணை கல்வெட்டு)

☞. மக்கள் குடியேற்றப்பரம்பல், பௌத்தசமயத்தின் பரம்பல், அரசர்களின் அதிகாரப்பரம்பல் என்பன பற்றியும் அறிய முடிகின்றது. (உ + ம் : வல்லிபுர பொற்சாசனம், வசபன் ஆட்சிப்பரம்பல்)

**18. இலங்கையில் கிடைக்கப் பெற்ற நாணயங்களைக் குறிப்பிடுக.**

☞. எமது நாட்டில் கிடைக்கப் பெற்ற பழைய நாணயம் கஹபண என்னும் பெயரால வழங்கப்பட்டது.

☞. யானை மற்றும் சுவாஸ்திகா இலட்சினை பொறிக்கப்பட்ட நாணயங்கள்.

☞. இலக்ஷ்மி உருவம் பொறிக்கப்பட்ட நாணயம்.

☞. தம்பதெனிய செப்பு நாணயங்கள்.

☞. VOC நாணயங்கள்.

☞. கபச நாணயம்.

☞. சேது நாணயம்.

**19. நாணய மூலாதாரங்களின் முக்கியத்துவங்களை எழுதுக.**

☞. நாணயங்கள் கண்டெடுக்கப்பட்ட இடங்கள், அவற்றைச் செய்யப் பயன்படுத்திய உலோகங்கள், உலோகத்தன்மை, நிறை, நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள எழுத்துக்கள் போன்ற பல உண்மைகளை வெளிப்படுத்துகின்றன.

☞. நாட்டின் பொருளாதார நிலை, தொழில்நுட்ப வளர்ச்சி, வர்த்தகம் எனபவற்றை அறியலாம்.

☞. வரலாற்றுக்குரிய கால நிர்ணயத்தை தீர்மானிப்பதற்கும், மேற்கொள்வதற்கும் நாணயங்கள் பெரிதும் உதவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞. பிறநாட்டு வர்த்தகத் தொடர்புகள், அயல்நாட்டு உறவுகள், ஏற்றுமதி, இறக்குமதித் துறை முகங்கள் பற்றித் தெரிந்துகொள்ள முடிகின்றது.

☞. மன்னர்களின் ஆட்சிப்பரம்பல், ஆட்சிக்காலம் என்பனவற்றையும் அறிய முடிகின்றது.

☞. புராதன கால பண்பாட்டம்சங்களை அறிய முடிகின்றது.

20. சிதைவுகள் பற்றிய முக்கிய அம்சங்களைத் தருக.

☞. புராதன கட்டடத் தொகுதிகளின் எஞ்சியுள்ள பகுதிகளே சிதைவுகள் எனப்படுகின்றன.

☞. எமது முன்னோர் எவ்வாறான தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி எத்தகைய கட்டடங்களை அமைத்துள்ளனர் என்பதை அறிநது கொள்ள முடிகின்றது.

☞. இலங்கையில் அநுராதபுரம், பொலனறுவை யாப்பகூவா ஆகிய இராதானிகளின் வளர்ச்சியை அறிய உதவுகின்றன.

☞. புராதன மக்களின் கலைகளின் வளாச்சி (சிற்பம், ஓவியம், செதுக்கல்) பற்றி அறிய முடிகின்றது.

☞. வெளிநாட்டுத் தொடர்புகள் பற்றி அறிய முடிகின்றது.

☞. சமயநம்பிக்கைகள், ஆடையணிகலன்கள் பற்றியும் அறிந்து கொள்ள சிதைவுகள் சானறாக உள்ளன.

☞. கற்களால் மட்டுமின்றி, மரத்தினாலும கட்டடக்கலை வளர்ச்சியடைந்திருந்தமையும் அறிய முடிகின்றது.

☞. புராதன நீர்ப்பாசனம், நீர்முகாமைத்துவம், சுற்றாடல பாதுகாப்பு முறை பற்றியும் அறிய முடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. தொல்பொருள் சிதைவுகளில் சிகிரியா முக்கிய இடம்பெறுவதற்கான காரணங்களைத் தருக.

- ☞. சிகிரியா நிர்மாணம், நீரகழிகள், பூங்காக்கள். குன்றின் மேல் அமைந்த அரச மாளிகைகள், நீராடும் பொய்கைகள் என்பன சிகிரியா சிறப்புப் பெறுதற்கான காரணங்களாகும்.
- ☞. சிகிரியாவல் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம், சிறப்பான திட்டமிடல், அழகியல் இரசனை என்பன உயர்தரத்தில் காணப்படுகின்றன.

22. தொல்பொருட்கள் அழிந்து போவதற்கான காரணங்களைத் தருக.

- ☞. நாட்டின் அபிவிருத்தி.
- ☞. சனத்தொகை துரித வளர்ச்சியடைதல்.
- ☞. குடியேற்றங்களின் பரம்பல்
- ☞. பெருந்தெருக்கள் அமைக்கப்படல்.
- ☞. கட்டடங்கள் அமைக்கப்படல்.
- ☞. விவசாய நடவடிக்கைகள்.
- ☞. யுத்த நடவடிக்கைகள்.
- ☞. இயற்கை அனர்த்தங்கள்.
- ☞. மக்களின் தவறான கருத்துக்கள்
- ☞. தொல்பொருட்கள் காணப்படும் இடங்களில் பொருளாதார ரீதியிலான பெறுமதிமிக்க பொருட்கள் புதைந்திருக்கலாம் என்ற தவறான கருத்துக்களால் அத்தகைய இடங்கள் அழிக்கப்படுகின்றமை.
- ☞. வரலாற்றுச் சின்னங்கள் மீது எழுதுதல், வரைதல் செயற்பாடு.
- ☞. உல்லாசப் பிரயாணிகளால் அழிக்கப்படுதல்.

23. தொல்பொருள் மூலாதாரங்களைப் பாதுகாக்கும் வழிமுறைகளைக் குறிப்பிடுக.

- ☞. மக்கள் மத்தியில் தொல்பொருட்களின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- ☞. தொல்பொருட்களை நாசமாக்குதல் சட்டத்தின் பார்வையில் தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதனைத் தெரிய வைத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞. எமது நீண்ட கால வரலாற்றுப் பாரம்பாியத் -திற்கான சான்றுகள் இவை என்பதை விளங்கச் செய்தல் வேண்டும்.

☞. உல்லாசப் பிரயாணிகளுக்கு மேலதிக அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும்.

**24. வரலாற்றைக் கற்பதன் மூலம் கிடைக்கும் பயன்களைத் தருக.**

☞. நாம் வாழும் சமூகம் மற்றும் உலகம் பற்றிய புரிந்துணர்வைப் பெறல்.

☞. இறந்த கால அனுபவங்கள் மூலம் நிகழ்காலத்தை புரிந்து எதிர்காலத்தை திட்டமிட உதவும்.

☞. நாட்டின் எதிர்காலத் தலைமைத்துவத்தை ஏற்பதற்கான தயார்படுத்தலுக்கு உதவிபுரிகின்றது.

☞. தேசிய தனித்துவத்தை அறிவதற்கும், தேச அபிமானம், நாட்டுப்பற்று ஆகியவற்றை வளர்த்துக கொள்ளவும் உதவுகின்றது.

☞. வரலாற்றின் மூலம் நற்பண்புகளை முன்மாதிரியாகக் கொண்டு தேசியத்தைக் கட்டியெழுப்ப உதவுகின்றது.

☞. பண்டைய கால மக்களின் கலாசார, நாகரீக பழக்க வழக்கங்களை அறிவதோடு ஏனைய நாட்டு வரலாற்றையும், கலாசாரத்தையும் கற்பதனூடாக அவற்றின் பெறுமதியை உணர முடிகின்றது.

☞. வேறுபட்ட கருத்துக்களுக்கு மதிப்பளித்தல், சகிப்புத்தன்மை, ஒருவருக்கொருவா் மதிப்பளித்தல் போன்ற நற்பண்புளை வளர்த்துக் கொள்ள முடிகின்றது.

☞. மனித வரலாற்றின் நோக்கங்கள், அனுபவங்கள், பிரச்சினைகள், வெற்றிகள் பற்றிய தகவல்களை அறிவதோடு ஒருவர் தன்னைப்பற்றி புரிந்து கொள்வதற்கும் முடிகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 02
# இலங்கையின் குடியேற்றங்கள்.

01. **இலங்கையின் வரலாற்றை எவ்வாறு கால கட்டங்களாகப் பிரிக்கலாம்?**
- ☞. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (கற்காலம்)
- ☞. முன் வரலாற்றுக்காலம் (கற்காலம்)
- ☞. வரலாற்றுக் காலம்.

02. **வரலாற்றுக்கு முற்பட்ட காலம் என்றால் என்ன?**
- ☞. எழுத்து மூலத்திலான வ லாறு இல்லாத காலம்.
- ☞. இலக்கிய மூலாதாரத்தில் குறிப்பிடப்படும் புராதன காலத்திற்கு முற்பட் காலம்.
- ☞. தொல்பொருள் மூலாதாரங்களுடன் மட்டும் கட்டியெழுப்பப்பட்ட தொல்பொருள் யுகம்.
- ☞. இலங்கையின் ஆரியக்குடியேற்றங்கள் ஏற்படுவதற்கு முந்திய காலப்பகுதி.

03. **வரலாற்றுக்கு முற்பட்ட காலம் (வரலாற்றுக்கு முந்திய யுகம்) எத்தனை கட்டங்களாக கலாசார அடிப்டையில் வகுத்துக்காட்டப்படுகின்றது? அவை யாவை?**
- ☞. நீண்ட காலம் நிலைத்திருந்த கற்காலம்
- ☞. தாவர உணவுகளை உட்கொள்வதில் ஆர்வம் காட்டி, உலோகப் பயன்பாட்டுடன் நிரந்தரக் குடியேற்றங்களை நிறுவிய காலம்

04. **நீண்ட காலம் நிலைத்திருந்த கற்காலம் பற்றிய ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ள இடங்கள் பற்றித் தருக.**
- ☞. இரததினபுரிப் பிரதேசமும் அதன் அயல் சூழலில் காணப்பட்ட இரத்தினக்கல் சுரங்கங்கள், சுமார் 90 அடி ஆழத்தில் அமைந்துள்ள இரத்தினக் கனியப் படிவுகளில் காணப்படும் சரளைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்களுடன் கூடிய மண்படைகளில் புராதன மனிதன் பயன்படுத்திய கல்லாயுதங்களும், ஒழிந்துபோன சில விலங்குகளின் எலும்புகளும் புதைந்துள்ளன. இவை பிளைத்தோசின் காலத்தில் தாழ் நிலங்களில் புதையுண்டன.

இலங்கையின் அதிவரண்ட வலய நிலத்தினடியில் களிமண்ணுடன் கூடிய மணல் மண்ணினால் மூட்பட்டுட்டுள்ள சரணாலயப் படிவுகளே **இரணைமடுப்படிவுகள்** எனத் தொல்பொருளாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

**05. வரலாற்றுக்கு முற்பட்ட காலக் குடியிருப்புக்கள் பரவியிருந்த காலநிலை வலயங்களைத் தருக. (இக்காலநிலை வலயங்களைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்திய காரணி மழை வீழ்ச்சி ஆகும்.)**

1. தாழ்நில அதிவறள் வலயம்
2. தாழ்நில குறைவறள் வலயம்
3. தாழ்நில உலர் வலயம்
4. தாழ்நில இடை உலர் வலயம்
5. தாழ் நில இடை ஈர வலயம்
6. மலைநாட்டு இடை உலர் வலயம்
7. மலைநாட்டு ஈர வலயம்
8. உயர் மலைநாட்டு ஈர வலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்குரிய ஆதாரங்கள் கிடைக்கப்பெற்ற இடங்கள்?
(கி.மு. 125000 - 1800)

- பதிராஜவெல (அம்பாந்தோட்டை) — 125000 வருடங்கள்
- பூந்தலவெல கங்கொட (அம்பாந்தோட்டை) — 80000 வருடங்கள்
- பாகியன்கல (களுத்துறை) — 38000 வருடங்கள்
- குருவிட்ட பட்டதொம்பலன — 28000 வருடங்கள்
- கித்துள்கல பெலிபெலன — 15000 வருடங்கள்
- பெல்லன் பதிபெல்லஸ்ஸ — 12000 வருடங்கள்
- அத்தன கொட அலுலென — 10350 வருடங்கள்
- மாணியம்கம — 7900 வருடங்கள்
- சிகிரியாபொத்தான — 5800 வருடங்கள்
- சிகிரியா அலிகல — 5500 வருடங்கள்
- உடமல்ல — 5300 வருடங்கள்
- மாதோட்டை — 3800 வருடங்கள்

(இவற்றினை விட ஆனையிறவு, பூநகரி, புத்தளம், தலைமன்னார், பட்டதொம்பலன, திஸ்ஸ மகாரமை, குமண, புத்தல போன்ற இடங்களும் குறிப்பிடத்தக்கன.

07. காலநிலை வலயங்களில் குடியேற்றங்கள் நிறுவப்பட்டதற்கான காரணங்கள் எவை?

- இசைவான வாழ்க்கை முறை.
- உணவைப் பெறும் நோக்கம்.
- பருவ காலத்திற்கு ஏற்ப வாழக் கற்றுக் கொள்ளல்.
- மனிதன் தன் தேவைகளை நிவர்த்தி செய்தல்.
- பாதுகாப்பு.

08. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் குடியிருப்புக் -களைத் தெரிவு செய்வதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைத் தருக.

1. உணவைப் பெறக்கூடிய இயற்கை வளங்கள் ஏராளமாகக் கிடைக்கும் பிரதேசங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ + ம் :

தாழ்நில மலைக்காடுகள், மழைக்காடுகள், வில்லுப் புல் நிலம், உலர்வலயக் காடுகள் கரையோரப் பிரதேசங்களின் களப்புக்கள்.

2. நீரைப் பெறக்கூடிய இடங்களிலும் கல்லாயுதங்கள் செய்வதற்குத் தேவையானவை கிடைக்கும் இடங்கள.
   உ + ம் :
   பாகியன்கல, பட்டதொம்பலன, பண்டாரவளை. (மலைப்பிரதேச வெட்டவெளி)

3. வெப்பமான காலநிலை நிலவும் காலங்களில் வெட்டவெளியிலும் வாழ்ந்தார்கள்.
   உ + ம் :
   மினிஹாஸ்கந்த, புத்தல, பதிராஜவெல (கரையோர வெட்ட வெளிகள்)

4. மழைக் காலங்களில் இயற்கையான கற்குகை -களில் வாழ்ந்தனர்.
   உ + ம் :
   பாகியன்கல, பட்டதொம்பலன,
   கித்துள்கல – தாழ் நில ஈரவலயக் குகைகள்.

**09. வரலாற்றுக்கு முற்பட்டகால மக்கள் (கற்கால மக்கள்) வாழ்ந்திருந்த இடங்களைத் தருக.**

**கரையோர வெட்ட வெளிகள் :**

மினிஹாஸ்கந்த, புத்தல, பதிராஜ வெல.

**தாழ்நில ஈர வலயக் குகைகள் :**

பாகியன்கல, பட்டதொம்பலன, கித்துள்கல

**தாழ் நில உலர் வலயக் குகைகள் :**

சீகிரியபொத்தன, அலிகல

**தாழ்நில உலர் வலய வெட்டவெளி :**

பெல்லன்பதிபெலஸ்ஸ

**மலையகப்பிரதேச வெட்டவெளி -**

பண்டாரவளை, ஹோட்டன் சமவெளி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. கற்கால மக்களின் வாழ்க்கை முறை பற்றிக் குறிப்பிடுக.

- வேட்டையாடியும், பல்வேறு இடங்களில் (இடம்பெயர்ந்து) திரிந்து உணவு தேடியும் வாழ்ந்து வந்தான்.
- நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டான்.
- குழுக்களாக வாழ்ந்தனர். ஒரு குழுவில் 15 - 20 பேர் அடங்கினர். ஆகக் கூடுதலான ஒரு குழுவில் 50 பேர் மட்டும் வாழ்ந்தனர்
- இருப்பிடங்கள் சிறிய அளவிலானதாக அமைந்திருந்தன.
- பெல்லன்பதிபெலஸ்ஸ எனும் இடத்தில் 120 ச.மீ. பரப்பில் வாழ்ந்துள்ளனர். 30 எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பண்டாரவளை சேர்ச்ஹில் என்னும் பிரதேசத்தில் 150 ச.கி.மீ. பரப்பளவில் 25 பேர் அளவில் வாழ்ந்திருக்கலாம் என அனுமானிக்கப்படுகிறது.
- வரட்சியான காலங்களில் திறந்த வெளியில் அமைக்கப்பட்ட கூடாரங்களில் வாழ்ந்தனர்.
- மழைக்காலங்களில் தற்காலிகமாகக் குகைகளில் வாழ்ந்துள்ளனர். இறந்து போனவர்களைக் குகையில் புதைத்துள்ளனர். பாகியன்கல குகையில் – 9 எலும்பக்கூடுகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.
- சம்பிரதாயங்களைக் கடைப்பிடித்தனர். ஒரு கம்பியினாலோ அல்லது மிருகக் கொம்பினாலோ குழிதோண்டி சடலத்தை அதனுள் வைத்து சருகுகளினால் மூடியுள்ளனர். கித்துள்கலவில் 12 எலும்புக்கூடுகளும், திறந்த வெளிப் பரப்புக்களான பெல்லன்பதி பெலஸ்ஸ பிரதேசத்தில் அக்காலத்துக்குரிய மயானத்திலிருந்து 30 எலும்புக் கூடுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

(கற்காலர் என்பது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தைக் குறிக்கின்றது.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் உணவுப் பழக்கவழக்க முறை பற்றி எழுதுக.

- கற்கால மனிதன் உட்கொண்ட உணவின் தன்மை பற்றிய அதிகளவு ஆதாரங்கள் தாழ் நில உலர் வலயத்திலும், ஈரவலயத்திலும் காணப்படும் கற்குகைகளிலேயே கிடைத்துள்ளன.
- உணவுக்காக வேட்டையாடினர்.
  உ + ம் :
  மாடு, காட்டெருமை, கரடி, குரங்கு, காட்டுப்பன்றி, மான், மரை, சிறுமான், முள்ளம்பன்றி, முயல், மர அணில், கீரி, குரஙகு, காட்டுக்கோழி, மலைப் பாம்பு, உடும்பு.
- தாழ்நில ஈரவலயப்பகுதியில் நன்னீர் மீனினங்கள் உணவாக உட்கொள்ளப்பட்டன.
  உ + ம் : தித்தியா.
- தாழ்நில ஈரவலயத்தில் இலகுவாகக் கிடைககக் கூடிய நத்தைகளையும், களப்புகளில் வாழும் நத்தையையும் விரும்பி உண்டனர்.
- தாவர உணவுக்காக காட்டு வாழை, காட்டுப்பலா, வள்ளிக்கிழங்கு, கித்துள் விதை, செடி வகைகள், காட்டுப்பாக்கு, என்பனவற்றை உண்டனர். கித்துள்கல பெலிலென குகையில் 12500 ககு வருடங்களுக்கு முன்னர் காட்டுப்பலாவின் விதைகளைச் சுட்டுச் சாப்பிட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.
- உணவுப்பண்டங்களை தீயிலிட்டு பதப்படுத்தி உண்டனர்.
- கித்துள்கல பெலிலெனவில் நத்தையின் எச்சங்கள் உப்புடன் கலந்திருந்தது.

12. வரலாற்றுக்கு முற்பட்டகால மக்களின் தொழில் நுட்ப முறை பற்றித் தருக.

- இக்கால தொழில்நுட்ப முறை பற்றி அறிய அறிய உதவும் ஒரே ஒரு ஆதாரம கல்லாயுதஙகள் ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கற்பாறைகளைக் கொண்டு செப்பனிட்டு உருவாக்கப்பட்ட கல்லாயுதங்கள் 4.5 செ.மீ அளவிற்கு உட்பட்டவையாக அமைந்திருந்தன.
- பளிங்குப் பாறைகள், மஞ்சள் நிறப் பளிங்குக் கற்பாறைகளால் கல்லாயுதங்கள் தயாரிக்கப் பட்டிருந்தன.
- கருங்கல் மூலம் தட்டையான சுத்தியல், கம்பி போன்ற உபகரணங்களும் உருவாக்கப்பட்டிருந்தன.
- இம் மக்களது கல்லாயுதங்கள் கேத்திர கணிதப் பொறிமுறை உருவத்திலான நுணுக்கமான கல்லாயுதங்களாகக் காணப்படுகின்றது.
- எனினும், அதிகளவிலான கல்லாயுதங்கள் கேத்திர கணித உருவமைப்பு இல்லாமல் நுணுக்கமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன.
- பெரும்பாலும் ஆயுதங்கள் வேட்டையாடுதல் முதற்கொண்டு, வெட்டுதல், உராய்தல், தட்டை-யாக்குதல், தோண்டுதல் என்பனவற்றிற்கு ஏற்றாற் போல் செய்யப்பட்டன.

**13. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதனின் உடலமைப்பு எவ்வாறு காணப்பட்டது?**

- **உயரம்** : சாதாரண வளர்ச்சியடைந்த ஆண் ஒருவனின் உயரம் 174 cm, பெண்ணின் உயரம் 166 cm ஆகும்.
- **மூளை** : வளர்ந்த ஆணின் மூளையின் அளவு 1600 கனசென்ரி மீற்றர். வளர்ந்த பெண் மூளையின் அளவு 920 கனசென்ரி மீற்றர் ஆகும்.
- **ஆயுட்காலம்** : 35 – 40 வருடங்கள்.
- **உடலமைப்பு** : பற்கள் பெரியனவாகவும், அகன்ற மூக்கு, அகன்ற நாடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களினது சடங்கு சம்பிரதாய முறைகள் எவ்வாறு அமைந்திருந்தன.

- ☞ மரணச் சடங்கு முறையே ஓரளவேனும் இக்கால சடங்கு சம்பிரதாயங்களை அறிவதற்கு ஆதாரமாக உள்ளது.
- ☞ இராவண எல்ல குகையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் இரண்டாகப் பிளக்கும் வகையில் துளையிடப்பட்ட மண்டையோடு கிடைத்துள்ளது. அதன் கரடு முரடான பகுதி கல்லினால் உராய்ந்து மட்டமாக்கப்பட்டிருந்தது. மேலும் ஒரு பகுதி செந்நிறமான பாறையினால் நிறம் பூசப்பட்டுள்ளது.
- ☞ பாகியன் கல குகைகளில் சிவப்பு நிறப்பாறையை உராய்ந்து பூசப்பட்ட எலும்புக்கூடுகளின் பகுதி கிடைக்கப் பெற்றுள்ளது.
- ☞ இறந்தவர்களின் சடலத்தை உக்கும் வரை புதைத்து பின்னர் எலும்புக் கூட்டைத் தேடி எடுத்து அடக்கம் செய்தனர்.
- ☞ குருவிட்ட பட்ட தொம்பலனக் குகையில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடு வளைத்துப் புதைக்கப்பட்டுள்ளது.
- ☞ இலங்கையில் கற்கால மனிதர்களுக்கும் இன்றைய வேடர்களுக்குமிடையில் கலாசார ரீதியாக சமமான தன்மைகள் காணப்படுவதனையும் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

15. முன்வரலாற்றுக்காலம் என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொண்ட காலப்பகுதி யாது?

- ☞ வரலாற்றுக்கு முற்பட்ட கால முடிவிற்கும், வரலாற்றுக் கால ஆரம்பத்திற்கும் இடைப்பட்ட காலம் முன் வரலாற்றுக் காலம் எனப்படும். மரணச் சடங்கு முறைகள் பின்பற்றியமையும், சுடப்பட்ட மட்பாண்டங்களின் பாவனை போன்ற சில காரணங்களின் அடிப்படையில் இவ்விரு காலங்களும் வேறுபடுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தொழில்நுட்ப ரீதியாக இது இடைக்காலம் எனவும், இரும்பின் பாவனை ஆரம்பிக்கப் பட்டமையால் இரும்பு யுகம் எனவும் அழைக்கப் -படுகின்றது.
- கி.மு. 2400 ஆண்டுவரை பழமையானவை. (இடையர் யுகம், இரும்பு யுகம், விவசாய யுகம்) இக்கால முடிவானது கி.மு 600 வரையிலானது என்பதை உடரஞ்சா மட மயானத்தில் கணிக்கப் -பட்ட காலத்தைக் கொண்டு அறியப்பட்டது.

16. **முன்வரலாற்றுக் காலத்தில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிப்பிடுக.**
    - சுடப்பட்ட மட்பாண்டங்களின் பாவனை ஆரம்பமாகின்றது.
    - முறையான மரண சடங்குகள் பின்பற்றப்பட்டமை.
    - கல்லாயுதங்களுக்குப் பதிலாக இரும்புலோகங்கள பாவிக்கப்பட்டன.
    - நிலையான குடியேற்றங்கள் ஆரம்பமாகியது.
    - விவசாயம் செய்யத் தொடங்கியமை.
    - தாவர உணவுகளை அடிப்படையாகக் கொண்டமை.
    - சிறந்த கல்லறை மயானங்கள் உருவாகின. — மெகாலிதிக் கல்லறை மயானம்.

      ஊவா மயானம் - ஹஸ்துமுல்ல, பெரகல மயானங்கள்.

17. **முன்வரலாற்றுக்கால குடியிருப்புக்களின் தன்மை பற்றி எழுதுக.**
    - நிரந்தரமான குடியிருப்புக்கள் நிறுவியமை.
    - இதனை அறிய உதவுவது அக்காலத்திற்குரிய வீடுகளாகும்.
    - இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள உடரஞ்சா மடம் எனப்படும் கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட வீடு இதற்குச் சிறந்த சான்றாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ➢ செவ்வகவடிவில் மண்ணால் கட்டப்பட்டது.
- ➢ 10.20 x 6.80 சதுர மீற்றர் அளவுடையது.
- ➢ முற்பக்கமும், பிற்பக்கமும் சுவரால் பிரிக்கப்பட்டிருந்தது.
- ➢ வீட்டின் சுவர் மண்ணால் கட்டப்பட்டிருந்தது.
- ➢ கூரை இலுக்குப்புல் போன்றவற்றினால் வேயப்பட்டிருந்தது.

- ☞ விவசாய வாழ்க்கை முறை மேற்கொண்டமை.
- ☞ மட்பாண்டம் அதிகளவில் பாவனை செய்யப் பட்டது.
- ☞ இரும்பின் பாவனை இம்மக்களுக்கிடையே காணப்பட்டது.
- ☞ பெண்கள் தம்மை அலங்கரிப்பதில் அக்கறை காட்டினர்.
- ☞ வீட்டினுள் பெண்களுக்குரிய களிமண் மணிகள், உடம்பில் வர்ணம் பூசும் கற்கள், கண்ணுக்கு மை தீட்டும் கம்பி என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**18. முன்வரலாற்றுக்கால தொழில்நுட்ப வளர்ச்சி பற்றித் தருக.**

**உலோகப்பயன்பாடு:**

கல்லாயுத தொழில்நுட்பத்திலிருந்து விடுபட்டு உலோகத் தொழினுட்பத்தில் ஈடுபட்டனர்.

**மட்பாண்ட தொழில் நுட்பங்கள் :**
மட்பாண்டங்களை உருவாக்குதல், நிறந்தீட்டல் (உடரஞ்சா மடம் - நிறத்திலான மட்பாண்டம் கண்டுபிடிக்கப்பட்டது.)

**வீடுகட்டும் தொழில் நுட்பம். :**

வீடுகள் கீழிறங்காமல் இருப்பதற்கு பொருத்தமான முறையில் வீடுகள் அமைக்கப்பட்டது. கதவுகளை முறையாக அமைத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரும்பு உபகரணங்களின் பயன்பாடு :**

காடுகளை அழிப்பதற்கும், நிலத்தைப் பண்படுத்துவதற்கும் உழுவதற்கும் வேறு பல வேலைகளுக்கும் பயன்படுத்தப்பட்டன.

**மணிகள் செய்யும் தொழில்நுட்பம். :**

உடரஞ்சா மடம் - மண்ணிலான மணிகள்.

**மயானங்கள் காணபபடுதல் :**

இறந்த உடல்களை தகனம் செய்து அஸ்தியை மட்பாண்டங்களில வைத்திருத்தல் முறை காணப்பட்டமை.

**19. வரலாற்றுக்கால குடியிருப்புக்கள் பற்றி எழுதுக.**

- வரலாற்றுக் குடியிருப்புக்கள் பற்றிய விபரங்கள் வரலாற்று மூலாதாரங்களிலும் உள்ளன.

  (இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், பயன்படுத்திய உலோகங்கள், குடியிருப்புக்களின் சிதைவுகள், குளங்கள்).

- இக்குடியிருப்புக்கள் குளங்களை மையமாகக் கொண்டு அதன் அருகில் அமைந்திருந்தன.

- இககாலப்பகுதியில் இலங்கையின் குடியிருப்புக்கள பரம்பியிருந்த பிரதேசங்களைச் சரியாகக் காட்டும் சுட்டியாக அமைவது சிறப்பான கிராமியக் குளங்களின் பரம்பலாகும்.

- குளக்கட்டின் ஓர் அந்தத்திலே, குளத்திற்கு அண்மையில் அக்கிராமங்கள் அமைந்திருந்தாக தொல்பொருள் ஆய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப் -பட்டுள்ளன.

  (வரலாற்றுக் காலம் என்பது கி.மு. 600 க்கு பிற்பட்ட காலப்பகுதியாகும்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. வரலாற்றுக் கால குடியிருப்புக்களின் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைக் குறிப்பிடுக.

- ☞ வருடாந்த மழை வீழ்ச்சியின் அளவு

  **உலர் வலயம் :**

  சராசரி மழைவீழ்ச்சி 1000 - 1250 mm

  **அரைகுறை வரள் வலயம் :**

  சராசரி மழைவீழ்ச்சி 1000 mm க்கு குறைவு

- ☞ **மண்ணின் தன்மை :**

  விவசாயத்திற்கு உகந்த செங்கபில நிற மண் உலர் வலயத்தில் காணப்பட்டது.

- ☞ நீர் வசதி - பருவமழை, குளங்கள ஆகியன இரண்டு வழிமுறைகளில் நீர் பெறப்பட்டமை.

- ☞ வரலாற்றுக்காலத்தின் ஆரம்பத்தில் குடியிருப்புக்கள் நதிக்கரைகளில் அல்லது அதற்கு அப்பாலுள்ள பிரதேசங்களில் அமைந்திருந்து. (ஆண்டு தோறும் நதிகளில் ஏற்படும் வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்தும் தொழில்நுட்ப அறிவு இல்லாமை.)

- ☞ நதிகளை மறித்து அணைகட்டி அந்நீரை குளத்துக்கு வழங்கி வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்தும் ஒரு முறை கி.மு. 1ம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியில் அல்லது கி.பி. 1ம் நூற்றாண்டிலேயே தான் ஆரம்பித்திருக்க வேண்டும். இளநாக மன்னன் காலத்தில் திஸ்ஸமகாராம குளத்தை அமைத்தார். (கிரிந்தி ஓயாவிற்கு அணை கட்டப்பட்டது)

- ☞ தரைத்தோற்றம், வேறுபாடு, இயற்கை வளங்களின் பரம்பல், நீரோடைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. வரலாற்றுக் காலக் குடியேற்றங்களின் அமைப்பையும், தன்மையையும் விளக்குக.

- குளத்தை மையமாகக் கொண்டு வளர்ச்சியடைந்த குடியேற்றங்கள் (கிராமங்கள்) "வாபி காம" என இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- மகாவம்சத்தில் குளக்குடியேற்றங்களை சுமணவாபிகாம, கடஹவாபிகாம, ஹு"ந்தரி வாபிகாம, விஹார வாபி காம எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன.
- குளக்கிராமங்கள் ஒன்றுக்கொன்று சுயாதீன -மானவையாக விளங்கின.
- கிராமங்கள் ஒன்றையொன்று காடுகளால் பிரிக்கப்பட்டிருந்தன.

வெவ்வேறு தொழில்களை அடிப்படையாகக் கொண்டு கிராமங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடப் பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | சுசீகார காம | - | விவசாயிகள் வாழ்ந்த கிராமம். |
| 2. | மணிகார காம | - | இரத்தினம் அகழ்வோர், பட்டை தீட்டுவோர் வாழ்ந்த கிராமம். |
| 3. | கோபால காம | - | இடையர்கள் வாழ்ந்த கிராமம். |
| 4. | கேவட்ட காம | - | மீனவர்கள் வாழ்ந்த கிராமம். |
| 5 | கும்பகார காம | - | குயவர்கள் வாழ்ந்த கிராமம். |
| 6. | வட்ட கீ காம | - | தச்சர்கள் வாழ்ந்த கிராமம். |

- காரண காரியங்களின் அடிப்படையிலும் செயற்பட்ட சில கிராமங்களும் காணப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பட்டான காம - துறைமுகத்தைக் கொண்ட கிராமம்.
- நியம்கம் - வர்த்தகக் கிராமம்.
- ஒல கம் - கைவிடப்பட்ட குளக்கிராமம்.
- பரிகித்த கம - வேலியிட்டு பாதுகாக்கப்பட்ட கிராமங்கள்.
- அபரிகித்த கம - வேலியிட்டு பாதுக்காக்கபபடாத கிராமங்கள்.

22. **வரலாற்றுக்கால குடியேற்றங்களின் கட்டமைப்பு பற்றித் தருக.**

- சிறிய கிராமங்களின் பரப்பளவு 0.15 ஹெக்டேயருக்கு உட்பட்டதாகவும், மத்திய அளவிலான கிராமத்தின் பரப்பளவு 2 ஹெக்டேயராகவும் காணப்பட்டது.
- பொதுவாக கிராமங்களில் 5 - 6 குடும்பங்கள் இருந்தன.
- பெரிய கிராமங்களில் 30 குடும்பங்கள் வாழ்ந்து வந்தன.
- பெரிய கிராமங்கள் "புரம்" என அழைக்கப்பட்டது.
- விஜயபாகுவின் பனாகடுவ செப்பு சாசனத்தில் "நுருபுரம்" எனக் குறிப்பிடப்பட்டது.
- நகர அல்லது நகரம் எனும் விசேட குடியிருப்புக்கள் பற்றிக் கல்வெட்டுக்கள் உள்ளது.
- நகரம் என்பது கிராமம், புரம் இரண்டிற்கும் இடைப்பட்ட குடியிருப்பாகும். இவை அளவில் கிராமத்தை விடச் சற்று பெரிய குடியிருப்பாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ பழைய கிராமிய வீடுகள் காணப்பட்டன - அநுராதபுர அகழ்வுகளில் அத்திவாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவை மண் சுவர்களையும், இலை குழைகளையும் கொண்ட கூடாரத்தை உடையன. அவ்வீடுகள் சதுர வடிவ அமைப்பினைக் கொண்டவையாகவும் அமைந்திருந்தன.

☞ திஸ்ஸ மகாராமவில் "வலகம்பத்து" என்னும் கிராமத்தில் புராதன வீட்டு எச்சம் கண்டுபிடிக்கப்பட்டது. நிலத்தைத் தோண்டி மண் பூசி அந்த வீட்டின் தளம் அமைக்கப்பட்டிருந்தது. இது கி.பி. 3ம் நூற்றாண்டைச் சேர்ந்ததென விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

**23. வரலாற்றுக் கால குடியிருப்புக்களின் ஒழுங்கமைப்பும் நிர்வாகமும் என்பது பற்றிக் குறிப்பிடுக.**

☞ கிராமம் என்பது சில குடும்பங்களைக் கொண்ட அலகாக விளங்கியது.

☞ குடும்பத்தின் தலைவன் "குர் ஹபதி" என அழைக்கப்பட்டான்.

☞ கிராமத்தில் குடும்பத் தலைவர்களைக் கொண்ட குழுவின் தலைவர் "கமிக" அல்லது "கிராமிக" என அழைக்கப்பட்டனர்.

☞ 10 பேர் கொண்ட குழு ஒன்று கிராமத்தின் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு அமைக்கப்பட்டது. (உ + ம்) பௌத்த விகாரைப் பிரச்சினை

**24. வரலாற்றுக்கால ஜீவனோபாய முறை பற்றித் தருக.**

☞ சேனைப் பயிர்ச்செய்கை பிரதானமாக விளங்கியது.

(நதிப்படுக்கைக்கு அப்பாலான பிரதேசங்களில் குடியிருப்புக்கள் பரவலடைந்த போது இப்பயிர்ச் செய்கை பிரதானமாகியது.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீர் குறைந்த பிரதேசங்களில் (வரட்சிக்கு முகங்கொடுக்கக் கூடிய) குரக்கன், மெனேரி, எள், கரையரசி என்பனவும் பயிரிடப்பட்டன.
- குடியிருப்பு அதிகரிப்பு, மக்கள் தொகை அதிகரிப்பு, நீர்த்தேவை அதிகரிப்பு, கிராமக் குளங்கள் ஆரம்பிக்கப்பட்டமை. குளங்கள் மக்களின் ஜீவனோபயத்தில் முக்கிய பங்காற்றியது.

**25. ஆரம்ப கால வரலாற்றுக்கால மக்கள் எதிர்நோக்கியுள்ள சவால்களைத் தருக.**

- அதிகரிக்கும் சனத்தொகைக்கேற்ப உணவை உற்பத்தி செய்ய வேண்டியிருந்தமை.
- நீரைச் சேமித்தல், விநியோகித்தலிலுள்ள பிரச்சினை.
- வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்தல்.
- நீர் முகாமைத்துவம் அவசியம்.

26. **ஒப்பீடு.**

| வரலாற்றுக்கு முற்பட்ட காலம் | முன் வரலாற்றுக் காலம் | வரலாற்றுக் காலம் |
|---|---|---|
| **வாழ்ககை முறை** நாடோடி வாழ்க்கை | நிலையான வாழ்க்கை அமைதல | கிராம, நகர வளர்ச்சி |
| **குடியிருப்புக்கள் :** கற்குகைகள், மரப்பொந்துகள், அடர் காடுகள் (அலிகல குகை) | நிலையான குடியிருப்புகள், சிறுவீடுகள் | குளக்குடியிருப்புகள், வசதியான வீடுகள். (அனுராதபுரம்) |
| **தொழில் முறைகள** வேட்டையாடுதல், உணவு சேகரித்தல் | விவசாய வாழ்க்கை, சிறிதளவு விலங்கு வேட்டையாடல் | விவசாயம், மந்தை வளர்ப்பு, வர்த்தகம். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வரலாற்றுக்கு முற்பட்ட காலம் | முன் வரலாற்றுக் காலம் | வரலாற்றுக் காலம் |
|---|---|---|
| **ஆயுதங்கள் :**<br>கல்லாயுதங்கள் | கல்லாயுதங்கள், இரும்பாலான ஆயுதங்கள் பாவனை ஆரம்பம் | இரும்பாலான ஆயுதங்கள் பாவனை |
| **உணவு :**<br>இயற்கையாகக் கிடைத்தவை. | இறைச்சி, தாவரம், இறைச்சி, தாவரங்கள், தானியங்கள், கிழங்கு | தானியங்கள், காய்கறி, பால் |
| **தொழினுட்பம் :**<br>கல்லாயுத தொழில்நுட்பம் | உலோக மட்பாண்ட தொழினுட்பம் | பல்கலைத் தொழினுட்பம் |
| **மரணச்சடங்கு :**<br>திட்டமிட்டவகையில் இடம்பெறாமை | மயானத்தில் புதைத்தல், அஸ்தி பாதுகாக்கப்படல் | திட்டமிட்ட முறையில் பிரத்தியேக மயானங்கள் உருவாதல். |
| **கலைவளர்ச்சி :**<br>ஓய்வு குறைவு,<br>ஈடுபாடு குறைவு | மட்பாண்டக்கலை,<br>ஓவியங்கள். | பல்கலைத் தொழில்நுட்பம். (செதுக்கல் கலைகள்) |
| **மக்கள் வாழ்ந்த பிரதேசம்**<br>தென்பகுதி<br>- சப்ரகமுவ பகுதி | வடமேல், வடமத்திய மாகாணம் | வடமேல், வடக்கு, வடமத்தி, கிழக்கு மாகாணம். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 03
## இலங்கையின் அரசியல் அதிகார வளர்ச்சி

01. **"பெருவிருப்பு", "அரசு" ஆகிய பதங்களை சுருக்கமாக விளக்குக.**

- **பெருவிருப்பு:**
  பெரும்பான்மையோரின் ஆதரவுடன் நாட்டை நிர்வகிக்கும் அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதனையே பெருவிருப்பு எனலாம்.

- **அரசு :**
  பெருவிருப்புடன் நிர்வாகத்தில் பங்கு பெறும் பல்வேறுபட்ட அதிகாரிகளும், பொது மக்களுமே அரசு எனப்படுவர்.
  (காலா காலம் இப்பதம் விரிவடைந்து பல்வேறான விளக்கம் கொண்டது.)

02. **அரசுக்கு முற்பட்ட காலம் என்பது பற்றிய விபரங்களை எழுதுக.**

- அரசு ஒன்று தோன்றுவதற்கு முன்பு இலங்கையில் நாட்டை நிர்வகிக்க நிலவிய அமைப்பு காணப்பட்ட காலமே அரசுக்கு முற்பட்ட காலம் எனப்படுகின்றது.
- அரசுக்கு முற்பட்ட காலத்தில் இந்நாட்டை ஆள்வதற்கு குறிப்பிட்ட ஆட்சியாளர் ஒருவர் இருக்கவில்லை.
- சிறிய பிரதேசங்களில் நில, புலன்கள் உள்ளவர்களே ஆட்சி அதிகாரத்தை மேற்கொண்டிருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ நில புலன்கள் உள்ள செல்வத் தன்மையுடைய "பருமக" என்னும் பிரபுக்கள் ஆட்சி அதிகாரத்தைக் கொண்டிருந்தனர்.

➢ பருமக குறித்த நிர்வாகத்தை மேற்கொண்டிருந்தனா என்பதனை கி.மு. 250ம் ஆண்டளவில் தம்புள்ளவுக்கு அருகில் கண்டலம எனும் பிரதேசத்தில் கொத்கல்கந்தை கல்வெட்டு மூலம் அறிய முடிகின்றது.

03. **"தொட்ட போஜக" பற்றிய குறிப்புக்களைத் தருக.**

☞ தொட்ட போஜக என்பதன் பொருள் படகுத்துறையை நிர்வகிப்பவர் என்பதாகும்.

☞ இவரே வரி வசூலிப்பவராகவும் இருந்தார்.

☞ செல்வத்தைக் கொண்டிருந்தமையால் ஆட்சி அதிகாரத்தையுடைய பருமகராகவும் செயற்பட்டார்.

☞ பிக்குகளுக்கு குகை ஒன்றை அமைத்து தானம் அளிக்கும் ஆற்றல் உடையவராகவும் காணப்பட்டார்.

04. **அரசுக்கு முற்பட்ட காலத்தில் அதிகாரம் பெற்றவர்களைத் தருக.**

☞ **குர்ஹபதி / இல்லத்தலைவன்**

➢ கி.மு. 250ம் ஆண்டை அண்மிய காலப்பகுதிகளில இவர்கள் அறிமுகப் -
-படுத்தப்பட்டிருந்தனர்.

➢ கிராமங்களின் சிறிய அலகான குடும்பத்தின் தலைவன் ஆவார்.

➢ கிராமிய பொதுப்பணிகளில் ஒவ்வொரு குடும்பத்தினையும் பிரதிநிதிப்படுத்துவதற்கே முன்வந்தவர்கள் ஆவார்.

➢ அநுராதபுரத்தில் பெரிய புளியன் குளக் கல்வெட்டில் சுமணவின் குடும்பத்தைச் சேர்ந்த உலோகத் தொழில் மேற்கொண்டிருந்த இல்லத்தலைவன் பிக்குமாரின் சேமநலன் கருதி குகை ஒன்றை சுத்தம் செய்து தானமாக வழங்கியது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ கமிக / கிராமிக / கிராமணி

- புராதன கல்வெட்டுக்களிலும், அட்டுவாக்களிலும் கமிக எனும் பெயரால் குறிப்பிடப்படும் பிரிவினர் கிராமத் தலைவர்களாக இருந்தமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

- கிராமத்து இல்லத் தலைவர்களிலிருந்து தெரியப்படுவர். (சமந்த பாசதிகா)

- மக்களிடையே திருமணத் தொடர்புகள், பண்டப் பரிமாற்றங்கள், பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளல் போன்றவற்றின் போது ஒவ்வொரு கிராமத்தையும் பிரதிநிதிப்படுத்திய நபர் "கிராமிக" எனும் பெயரால் குறிப்பிடப் பட்ட கிராமத்தலைவர்கள் ஆவார்.

- கமிக என்பவர் ஏனையவர்களுக்கு உதவக் கூடிய அளவில் செல்வந்தராக விளங்கினார். ஏழைக் குடியானவன் ஒருவன் அடுத்த போகத்தில் தருவதாக வாக்குறுதி வழங்கி நெல்லைக் கடனாக கமிகவிடமிருந்து பெற்ற செய்தி ஜாதக அட்டகதாவில் குறிப்பிடப்படுவது இதற்கு சான்றாகும்.

☞ பருமக

- கமிக எனும் கிராமத் தலைவர்களிடையே தோன்றிய பலம்வாய்ந்த பிரதானிகளே "பருமக" எனப்பட்டனர்.

- கிராம மக்கள் பலவற்றை உள்ளடக்கிய தலைவரே "பருமக" ஆவார்.

- பிரதேச ஆட்சியாளர் எனவும் குறிப்பிடப்படுவர்.

- பிரதானிகளின் தோற்றமானது குளங்களின் பரிணாமத்துடனும், சம்மந்தப்பட்டிருக்கலாம் எனவும் குறிப்பிடப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. இலங்கையின் புராதன கால குடியிருப்பின் அம்சங்களை எழுதுக.

- குறைந்த பட்சம் கி.மு 900 ஆண்டளவில் கிராமக் குடியிருப்புக்கள் உலர் வலயத்தின் பெரும் பிரதேசங்களில் பரந்து காணப்பட்டன.
- 1 – 30 வரையான குடும்பங்கள் சேர்ந்து கிராமங்கள் உருவெடுத்தன.
- கிராமங்கள் ஒன்றிலிருந்து ஒன்றாக ஒடுங்கிய வனப்பகுதியால் வேறுபடுத்தப்பட்டிருந்தது. இவ்வேறுபாட்டின் காரணமாக கிராமங்கள் எங்கள் ஊர் (நாம் வாழும் கிராமம்), அடுத்த ஊர் (அருகிலிலுள்ள கிராமங்கள்), வெளி ஊர் (தூரத்தில் இருந்த கிராமம்) எனக் குறிப்பிடப்பட்டன.

06. கமிகவின் பண்புகள் / இயல்புகள் என்பனவற்றைக் குறிப்பிடுக.

- இல்லத் தலைவர்களிலிருந்து தெரிவு செய்யப்படுவார்.
- செல்வந்தராகவும், உதவக்கூடியவராகவும் விளங்கினார்.
- அதிகார பலம் கொண்டவர்.
- ஒவ்வொருவரோடும் நல்லுறவைப் பேணுபவராக விளங்கினார்.
- கிராமத்தை பிரதிநிதிப் படுத்துபவராக விளங்கினார்.

  (திருமணநிகழ்வுகள், பண்டப் பரிமாற்றங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணல்)

07. கமிகவின் பணிகள் / கடமைகளைத் தருக.

- கிராமத்தில் இடம்பெறும் நிகழ்வுகளுக்கு தலைமை தாங்குதல்.
- குளத்தை நிர்வாகித்தல்.
- குளத்திலிருந்து நீரை விநியோகித்தல்.
- கிராமத்தவர்களிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ கிராமத்தின் அமைதி, சமாதானம், சகவாழ்வு போன்றவற்றைப் பேணல்.

(அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சிதுல்பவ்வ என்னும் இடத்தில் அமைந்துள்ள புராதன விகாரைக்குச் சொந்தமான கொரவக்கல் என்னுமிடத்தில் காணப்பட்ட கற்குகை ஒன்றில் கிராமத்தலைவன் ஆனவன் ஒவ்வொருவரோடும் நல்லுறவைப் பேணினான்.

☞ சிதுல்பவ்வவில் கமிகசிவ, கமிக, சுமண, சதன என்னும் பிரதேச தலைவர்கள் பிக்குகளுக்கு குகைத்தானம் அளித்தமை பற்றிய ஆதாரம் உள்ளது.

**08. "பருமக" எனும் பதவியின் தோற்றம் பற்றி எழுதுக.**

பருமக என்னும் பதவியினால் குறிப்பிடப்படும் பிரதானிகளின் தோற்றமானது பிரதான குளங்களின் பரிபாலனத்துடன் சம்மந்தப்பட்டதாக அமைந்துள்ளது. இந்நாட்டில் அரசியல் அதிகார வளர்ச்சியில் இவர்களின் பங்கு முக்கியம் பெற்றுள்ளது என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

**09. "பருமக என்பவர் பல கிராமங்களை உள்ளடககிய ஒரு பிரதேசத்தின் நிர்வாக அதிகாரி ஆவார்" பருமகவுடன் தொடர்பான பின்வரும் பதச் சொற்களின் கருத்தை எழுதுக.**

(i) பருமகலு (ii) வெவ் பிரபாதனய
(iii) எல்லங் காவ (iv) துகத ரஜ
(v) ரஜ (vi) போசனி அரசன்

(i) பருமகலு :
பிரதேச நிர்வாகத்தில் பங்குபற்றிய பெண்கள் இவ்வாறு அழைக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) வெவ் பிரபாதனய :

குளத்தொகுதிகளை குறிப்பிடுவதற்குப் பயன்படுத்திய சொல்.

(iii) எல்லங் காவ :

குளத்தொகுதிகளை குறிப்பிடுவதற்கு உலர் வலய மக்கள் பயன்படுத்திய சொல்

(iv) துகத ரஜ :

கேகாலையில் யடஹலென எனும் புராதன விகாரையில் உள்ள கற்குகை ஒன்றில் பிரதேச நிர்வாகிக்கு குறிப்பிடப்பட்ட சொல் ஆகும்

(v) ரஜ :

மக்களுடைய நல்வாழ்வுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு அவர்களைக் குதூகலமடையச் செய்பவர்கள். சுருங்கக் கூறின் மகிழ்விப்பவர் எனப்பொருள் தரும்.

(vi) போசனி அரசன் :

மாத்தளை "எம்புல் அம்பே" எனும் இடத்திலுள்ள கல்வெட்டில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. கிழக்குப் பிரதேச அரசன் என்பது இதன் கருத்தாகும்.

**10. பருமகமாரின் கடமை பற்றிக் குறிப்பிடுக.**

1. குளத்தொகுதியை பரிபாலித்தல்.
2. கிராமங்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்தல்.
3. வரி அறவிடுதல்.
4. குளத்தொகுதி நீரைச் சிறப்புற விநியோகித்தல்.
5. பிரதேசத்தில் நிகழும் பொது வைபங்களுக்குத் தலைமை தாங்குதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. அரசின் வளர்ச்சி என்பது யாது?

பன்முகப்படுத்தப்பட்டிருந்த அதிகாரம் ஒருமுகப் -படுத்தப்படுவதே (மையப்படுத்துவது) அரசின் வளர்ச்சியாகும். அரச அதிகாரம் மத்திய மையப்படுத்தப் படுவது என்பது நாட்டை ஒன்றுபடுத்தி அதிகாரமானது ஒரு நபரின் கட்டமைப்புக்கு கட்டுப்படுவது என்பதாகும்.

12. மத்தியமயப்படுத்தப்பட்ட ஆட்சியின் பண்புகளைத் தருக.

- பன்முகப்படுத்தப்பட்டிருந்த அதிகாரம் ஒருமுகப்படுத்தப்படல்.
- நாட்டை ஒன்றுபடுத்தி மத்தியமான ஆட்சியை ஏற்படுத்தல்.
- அரசின் ஆட்சி அதிகாரம் ஆட்சியாளரான அரசனிடம் குவிந்திருத்தல்.
- அரச நிர்வாகத்தில் குறிப்பிட்ட நிலப்பிரதேசம் காணப்படல்.

13. "பன்முகப்படுத்தப்பட்ட அரசியல் அதிகாரம் ஒருமுகப்படுத்தப்பட்டதே அரசின் வளர்ச்சியாகும்" இவற்றுடன் தொடர்புபட்ட பங்களிப்பு வழங்கிய மன்னர்கள் பற்றிய குறிப்புக்களைத் தருக.

I. பண்டுகாபயன் :

- பிராந்திய அதிகாரிகளாக இருந்த மாமன்மார்களைக் கொன்று, பிரதேச ரீதியில் பிரிக்கப்பட்டிருந்த அதிகாரங்களை ஒருமுகப்படுத்தினான்.
- தனது ஆட்சியின் மத்திய நிலையமாக (நலைநகராக) அநுராதபுரத்தை அமைத்தான்.
- தான் ஆட்சிக்கு வந்த பத்தாவது ஆண்டில் நாட்டிலுள்ள கிராமங்களுக்கு எல்லைகள் வகுத்து அக்கிராமங்களை தனது அதிகாரத்திற்கு உட்படுத்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வடமேற்கு கிழக்கில் சிதறிக்கிடந்த ஆரிய குழுக்களை ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்தமை
- தனது ஆட்சியின் மத்திய நிலையமாக அநுராதபுரத்தை தெரிவு செய்து திட்டமிட்ட நகரமாகக் கட்டியெழுப்பியமை.
- நாட்டுமக்களின் தேவையை நிறைவேற்றுவது அரசனின் கடமை என்பதால் இவன் அபயவாவியை அமைத்தான்.

II. **தேவநம்பிய தீசன்**

- தேவநம்பிய தீச மன்னன் காலத்தில் மேலும் மத்தியமயப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் உருவாகியது.
- இலங்கையின் அமைவிடம் இரத்தினக்கற்கள், யானைகள், வாசனைத்திரவியங்கள் போன்ற வர்த்தகப் பொருள்களும் இலங்கையை சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடும் சுதந்திர நாடாக எழுச்சி பெற்றதால் நாடு முழுவதும் ஓரே நிர்வாகத்தில் இருக்கவேண்டி இருந்தமை.
- புனித வெள்ளரசு மரம் நடப்படும் வைபவத்திற்கு தேவநம்பியதீச மன்னனால் கதிர்காமம், சந்தனகாமம் ஆகியவற்றின் பிரதேசத் தலைவர்கள் அழைக்கப்பட்டதாக மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் தீசன் சகல பிரதேசத் தலைவர்க - -ளுடைய நல்லுறவை வளர்க்கும் தேவை உணர்ந்திருந்தமை என்பது பற்றியும் அறிய முடிகின்றது,
- புனித வெள்ளரசக் கிளையை நாட்டின் பல பாகங்களிலும் நடுவதற்கு ஏற்பாடு மேற்கொண்டமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அசோகன் அனுப்பிய பஞ்சவஸ்துப் பொருட்களைப் பயன்படுத்தி மீண்டும் முடிசூடியமை.
- அசோகனால் வழங்கப்பட்ட தேவநம்பிய எனும் பட்டத்தை சூடிக்கொண்டமை.

இவற்றினை நோக்குகையில் அதிகாரங்கள் ஒரு நபரின் கீழ் குவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக அரசியல் அதிகார வளர்ச்சி காலா காலம் ஏற்பட்டதை அவதானிக்க முடிகிறது.

## III. துட்டகைமுனு

- பருமகமாரிடம் பன்முகப்படுத்தப்பட்டிருந்த அதிகாரங்கள் துட்டகைமுனு ஆட்சியின் போதும் மன்னன் ஒருவனிடம் குவிந்திருந்ததாக காண முடிகின்றது.
- துட்டகைமுனுவின் 10 தளபதிகளும், இதன் முன்னர் பருமகர்களாகவே பதவி வகித்தனர். தந்தமித்திர, சுமண, தேர புத்தாபய ஆகியோா பருமகர்களாக இருந்தனர் என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.
- எல்லாளனைத் தோற்கடித்த பின்னர், அதிகாரத்தை மத்தியமயப்படுத்தி பருமகர்களுக்குப் பல்வேறு பதவிகளை வழங்கினான்.
- பருமகர்கள் வகித்த பதவிகள் பொருளாளர், செயலாளர், அறவீட்டாளர், பண்டகசாலைப் பொறுப்பாளர் தொடர்பாகக் கல்வெட்டுக்களில குறிப்பிடப்பட்டுள்ளனர். இலக்கிய மூலாதாரங்களின் படி இலங்கையை ஒன்று படுத்திய முதல் மன்னனாக துட்டகைமுனு கருதப்படுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

IV. வசபன்

- இம்மன்னன் காலத்தில் மத்திய அதிகாரம் மேலும் முன்னேற்றம் அடைந்தமைக்கு வழி வகுத்தான்.
- இவன் ஆட்சிக்காலத்தில் நாடு முழுவதும் ஒரே அலகாகச் செயற்பட்டது.
- இலங்கை முழுவதையும் நிர்வகித்தான் என்பதற்கு வடக்கில் அகழ்ந்தெடுக்கப்பட்ட வல்லிபுர பொற்சாசனமும், கிழக்கே மட்டக்களப்பிலும், மேற்கே குருணாகலையிலும், தெற்கே சிதுல பவ்வவிலும் காணப்படும் கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன.
- நாடு முழுவதையும் நிர்வாக மாவட்டங்களாக வகுத்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பொறுப்பாக ஒவ்வொரு அமைச்சரையும் நியமித்தான். யாழ்ப்பாண மாவட்டத்தை ரிஷி கிரி என்ற அமைச்சர் நிர்வகித்தார் என வல்லிபுர பொற்சாசனம் கூறுகின்றது.

V. பாதிகாபயன்.

- இம்மன்னன் கி.மு. 22 - 07 வரை இலங்கையை ஒரு குடையின் கீழ் ஆட்சி புரிந்தான்.
- இவனது ஆட்சிக் காலத்தில் மத்திய நிர்வாகம் சிறப்புற இருந்தமையால் வெளிநாட்டு வர்த்தகம் வளர்ச்சி அடைந்திருந்தது.
- உரோமுக்குத் தூதுக் குழுவை அனுப்பினான். அக்குழு இலங்கை வந்த போது கண்ணாடி, பளிங்கு, பவளம், ஆபரணங்கள் என்பவற்றைக் கொண்டு வந்தனர்.
- மாதோட்டம், சிகிரியா போன்ற இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்ட உரோம நாணயங்கள் இலங்கைக்கும் உரோமுக்கும் இடையே வர்த்தகத் தொடர்பு இருந்தமையை எடுத்துக் காட்டுகின்றது.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

14. **"அரசியல் பலம் மையப்படுத்தப்பட்ட போது உருவான மகாராஜா மிகவும் சக்தி வாய்ந்த நபராக உருவெடுத்தார்" இதன் காரணமாக அவர் நாட்டு மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகள் பற்றி எழுதுக.**

- ☞ நாட்டைப் பொருளாதார ரீதியில் முன்னேற்றல்.
- ☞ நாட்டு மக்களுக்கு பாதுகாப்பு வழங்கல்.
- ☞ பிரஜைகளின் ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்தல்.
- ☞ வெளிநாட்டு எதிரிகளின் இடையூறுகளிலிருந்து மக்களைப் பாதுகாத்தல்.
- ☞ குளங்கள், கால்வாய்கள் கட்டி பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
- ☞ தூபி, விகாரைகள் அமைத்து மக்களின ஆன்மீகத் தன்மையை வளர்த்தல்.

15. **மன்னர்களின் செயற்பாடுகளும், அவர்கள் தோற்றம் தர விரும்பிய விதத்தையும் வைத்து அரசு பற்றிய கொள்கைகள் / எண்ணக்கருக்கள் முன்வைக்கப்பட்டன. அவை ஒவ்வொன்றினையும பற்றி எழுதுக.**

I. **ஆண்டவன்**

மகாசேனன் குளங்கள், கால்வாய்கள் அமைத்து பொருளாதாரத்திற்கு ஆற்றிய பங்களிப்புக்காக "மின்னேரித் தெய்வம்" என்று போற்றி வழிபடும் அளவுக்கு உயர்வடைந்தான்.

II. நரேஸ்வர (மனிதர்களின் கடவுள்)

தம்புள்ள விகாரையில் அமைத்துள்ள பாறைக் கல்வெட்டில் குட்டகண்ண அபய மன்னன் தன்னை நரேஸ்வர (நரஇசெர) என்னும் பெயரில் குறிப்பிட்டிருந்தான். மனித கடவுள் என்பது இதன் பொருளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III குபேரக் கடவுள்

முதலாம் காசியப்ப மன்னன் குபேரக் கடவுளாகத் தன்னைக் கருதிக் கொண்டான். இவனது கல்வெட்டு ஒன்றில் அவனைக் குறிக்க "அலகபய மகாராஜா" எனும் சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. இதன் பொருள் இந்திரலோகத்தின் மகாராஜா என்பதாகும். இலக்கிய மூலாதாரங் -களில் இவன் மலையின் அரசன் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளான்.

IV. போதி சத்துவர்

அரசன் தனது குடி மக்களின் மானசீக ஆறுதலுக்காக நீதி, நேர்மை, ஆன்மீகத் தன்மையுடன் கூடிய ஆட்சியைக் கொண்டு நடாத்து -வதற்குப் பொறுப்பான கடமைப்பாட்டுடன் இருப்பதாக போதி சத்துவராகக் காட்டப்பட்டான்.

V. சக்கரவர்த்தி

"முழு உலகிற்கும் அரசன்" என சமஸ்கிருதத்தில் பொருள்படும் சிங்களத்தில் "சக்விதி" எனவும் குறிப்பிடப்படுகிறது. கி.பி. 9ம், 10 ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சிபுரிந்த அரசர்களில் சிலர் தமது மேன்மையை வெளிக்காட்ட இப்பதத்தைக் கையாண்டனர்.

- நிஸங்க மல்லன் சில கல்வெட்டுக்களில் தன்னை இனங்காட்டிக் கொள்ள "காலிங்க சக்கரவர்த்திப் பெருமான்" என்ற வார்த்தைப் பிரயோகத்தைக் கையாண்டுள்ளான்.
- சூளவம்சத்தில் மகாபராக்கிரமபாகுவும், கல்வெட்டுக்களில் சக்கரவர்த்தி எனவும் அழைக்கப்பட்டுள்ளான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. புராதன கால இலங்கையில் அரச பாரம்பரியம் அல்லது அரசுரிமை கிட்டிய விதம் பற்றிய உதாரணங்களை குறிப்பிடுக.

- மன்னனின் பின்னர் அடுத்த சகோதரர் ஆட்சி உரிமை பெற்றான்.

  உ + ம் :

  - தேவநம்பிய தீச மன்னனின் பின்னர் அவனது சகோதரன் உத்தியன் அரசுரிமை பெற்றார்.
  - துட்டகைமுனு மன்னனின் பின்னர் அவனது சகோதரன் சத்தாதிஸ்ஸ அரசுரிமை பெற்றமை.

- தந்தையிடமிருந்து மகனுக்கு அரசுரிமை கிடைத்தல்.

  உ + ம் :

  - பந்துகாபயனுக்குப் பின்னர் மூத்தசிவன் மன்னன் ஆனமை.
  - காவந்தீஸ்ஸ மன்னனுக்குப் பின்னர் துட்டகைமுனுவுக்கு அரசுரிமை கிடைத்தது.
  - மூத்தசிவன் பின்னர் அவனது மகன் தேவநம்பிய தீசனுக்கு அரசுரிமை கிடைத்தது.
  - வசபன் மன்னனுக்குப் பின்னர் வங்கநாசிக திஸ்ஸனுக்கு அரசுரிமை கிடைத்தது.
  - 4ம் முகலனின் மகன் கீர்த்தி இளவரசன் மன்னன் ஆனமை.

- அரசனின் மனைவியின் சகோதரனுக்கு.
- அரசனின் சகோதரியின் புத்திரனுக்கு.
- அரசனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் இருக்கும் போது சகோதரர்களிடையே பதவி ஆசை ஏற்படும் போதும் வாரிசுரிமைப் பிரச்சினை ஏற்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தாதுசேனனின் முதலாம மனைவியின் மகன் முகலன், 2வது மனைவியின் மகன் காசியப்பன் பதவி ஆசையால் ஆட்சியைக் கைப்பற்றினான.
- சத்தாதிஸ்ஸ மன்னனுக்குப் பின்னா் பல ஆண்டுகளாக வாரிசுக் குழப்பநிலை இருந்தமை. பின்பு கி.மு. 103 இல் சத்தாதிஸ்ஸ மன்னன் மகன் வலம்பாகு மன்னனான்.
- 1ம் விஜயபாகுவிற்கு பின்னர் அவனது மகன்மார் விக்கிரமபாகுவிற்கும், விஜயபாகு -விற்கும், சகோதரன் ஜயபாகுவிற்கும இடையில் வாரிசுரிமைப் போட்டி ஏற்பட்டது. இறுதியில் விக்கிரமபாகு ஜயபாகுவினைத் துரத்திவிட்டு அரசனாக வந்தான்.

17. **"நாட்டின் அரசியல் பலம் மத்திய மயப்படுத்தப்பட்ட பின்னர் நாட்டின் நிர்வாகி மகாராஜா எனக் குறிப்பிடப்பட்டார்" அக்காலத்தில் நடைமுறையில இருந்த அரச கருவியைத் (கட்டமைப்பை) தருக.**

மகாராஜா (மபுறுமுகா)

↓

தலைமை அமைச்சர் (மகாசுமதி, மஹமத)

↓

அமைச்சர்கள் (அமெத, தளபதிகள். சேனாதிபதி)

↓

பொருளாளர் (பட காரிக)

↓

அவுச்சாலை அதிகாரி (பதகு)

↓

வழக்கங்கள், மரபு முறைகள் தொடர்பான அதிகாரி (சொதுறு கேனா)

↓

- நகரபரிபாலகன் (நகர குத்திகன்)
- குதிரைப்பிரிவின் தலைவன் (அச அதெக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- யானைப் பிரிவின் தலைவன் (ஹதி அதெக)
- நாட்டியப் பிரிவின் தலைவன் (நட அதெக)
- காசு அச்சிடும் பிரிவின் தலைவன் (ரூப அதெக)
- வர்த்தக நடவடிக்கைக்கான தலைவன் (பன அதெக)
- நகரக் கட்டட நிர்மாணி (நகர வடிக)
- அரச செயலகத் தலைவர் (பன பெடிக)

18. **இந்நாட்டை ஆண்ட முக்கிய மன்னர்களுள் அரசியல் அதிகாரத்தை உருவாக்குவதில் கீழ்த்தரப்பட்ட மன்னர்களது பணிகளையும், சேவை -களையும் குறிப்பிடுக.**

I. துட்டகைமுனு II. வசபன்

III. 1ம் விஜயபாகு.

I. **துட்டகைமுனு**

- இந்து சமுத்திரத்தில் வளர்ச்சியடைந்து வந்த சர்வதேச வர்த்தக மூலம் பேரளவு நன்மை அடைய வேண்டுமெனில் மையப்படுத்தப் பட்ட ஆட்சியே சிறந்தது என உணர்ந்தான். அதற்கிணங்க செயற்பட்டு மாந்தை சர்வதேச துறைமுகத்தை எல்லாளனிடமிருந்து மீட்டான்.
- மக்களிடம் நன்மதிப்புப் பெற்று எல்லாளனைத் தோற்கடிக்கத் தான் எடுக்கும் நடவடிக்கைகளை பௌத்த சாசனத்திற்கும், நாட்டின் நலனுக்கும் என்று கூறினான்.
- எல்லாளனின் கல்லறைகசு அனைவரும் மரியாதை செலுத்த வேண்டும் என்று கட்டளையிட்டதன் மூலம் அவனது இராஜதந்திர (சாணக்கியத்தன்மை) செயற்பாட்டை வெளிப்படுத்தினான்.
- முன்பு பிராந்திய அதிகாரிகளாக இருந்த பருமகமாரை தனது நிர்வாகத்தில் இணைத்து அவர்களுக்கு முக்கிய பதவிகளை வழங்கினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தனது தம்பி சத்தாதிஸ்ஸனை உருகுணை ரட்டைக்கு பொறுப்பாக நியமித்து நாடு முழுவதற்கும் மகாராஜாவானான். இச்செயற்பாடுகளின் மூலமாக அவனுக்குப் பெரும் அதிகாரங்கள் கிடைத்தது.

**சேவைகள்**

- பௌத்தமத விருத்திக்காக ஏறத்தாழ 89க்கும் மேற்பட்ட சமய கட்டிடங்களை உருவாக்கினான்.
- ருவான்வெலிசாயவை கட்டுவதில் ஈடுபட்ட அனைவருக்கும் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுத்தான்.
- தேரவாத பௌத்த வளர்ச்சிக்காகப் பாடுபட்டான்.
- ருவான்வெலிசாயாவை அமைத்த போது அதன் நான்கு திசை வாயில்களிலும் தானமளிக்க ஏற்பாடு செய்தான்.

எனவே தான் துட்டகைமுனு மன்னன் மதிக்கப்பட்ட வேண்டியது, அவன் பௌத்த மதத்துக்கு ஆற்றிய தொண்டுகளுக்கு மட்டுமன்றி பன்முகப்படுத்தப்பட்டிருந்த இலங்கையின் அதிகாரத்தை மிகவும் சக்தி வாய்ந்த ஒன்றாக அமைத்தமையுமாகும்.

**II. வசப மன்னன்**

- இலம்பகர்ண வம்சம் எனும் புதிய வம்சத்தை இம்மன்னனே தோற்றுவித்தான். இவ்வம்சமானது இலங்கையை 370 வருடங்கள் ஆட்சி செய்தது.
- உள்நாட்டு நிர்வாகத்தை முறையாகக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டான்.
- இவனது ஆட்சி இலங்கை முழுவதும் பரவியிருந்தமைக்கான சான்றுகளாக கல்வெட்டுக்கள், சாசனங்கள் சான்று பகர்கின்றன.
- நாடு முழுவதும் அரச வரி அறவீட்டு முறை அறிமுகப்படுத்தினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ சர்வதேச பிராந்திய தேவைக்கு முகங்கொடுப்பதற்கு தூர நோக்குடன் நடவடிக்கைகள் மேற்கொண்டான். இந்தியாவில் கிருஷ்ணா நதிப்பிரதேசத்தில் ஏற்பட்ட உணவுப் பற்றாக்குறையினால் இந்நாட்டுத் தானியங்களுக்கு கேள்வி ஏற்பட்டதால் புதிய நீர்த்தேக்கங்களை உருவாக்கி தானிய உற்பத்தியை அதிகரிக்கச் செய்தான.

**சேவைகள்**

☞ பொருளாதார மேம்பாட்டுக்காக நீர்ப்பாசன நடவடிக்கையை மேற்கொண்டான்.

☞ பாரிய குளங்கள் அமைக்கும் முறையைத் தோற்றுவித்தான். 11 குளங்களையும், 12 கால்வாய்களையும் அமைத்ததுடன் ரன்மசுப்பூங்காவிற்கு சுரங்க வழியினூடாக நீரைப் பாய்ச்சினான்.

☞ பிக்குமாரின் தேவையை நிறைவு செய்ய விகாரைகளுக்கு கொடுப்பனவுகள் வழங்க ஏற்பாடு செய்தான்.

☞ பௌத்த விகாரைகள் பலவற்றை புனருத்தாரணம் செய்தான்.

**III. 1ம் விஜயபாகு.**

☞ இந்நாட்டை ஆண்ட மன்னர்களுள் சிரேஷ்ட மன்னனாகத் துலங்குபவன் ஆவான்.

☞ நீண்ட கால சோழராட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்த பெருமை இம்மன்னனையே சேரும.

☞ 1055ல் உருகுணையின் அரசனானான்.

☞ இலங்கை முழுவதும் சோழர் ஆட்சிக்குட் -பட்ட வேளையில் நுண்ணறிவுடன் திட்டமிட்ட முறையில் உருகுணையில் இருந்து மும்முனைப் படையெடுப்பை மேற்கொண்டு நாட்டை மீட்ட பெருமைக்குரியவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பொலனறுவையைத் தலைநகராகத் தெரிவு செய்ததற்கு முக்கிய காரணம் கோகண்ண துறைமுகம் ஆகும். இத்துறைமுகமும் இந்துசமுத்திரத்துடன் கிழக்குப் பிராந்தியத்துடன தொடர்பு கொள்ளக் கூடியதாக அமைந்திருந்தது.
- சிறந்த ஆட்சியை ஏற்படுத்துவதற்காக பொருத்தமான வெளிநாட்டுக் கொள்கைகளைக் கடைப்பிடித்தான். மியன்மார், கம்பூச்சியா பேன்ற நாடுகளுடன் நலலுறவைப் பேணினான.
- சோழரின் அச்சுறுத்தலை முறியடிக்க பாண்டி நாட்டுடனும், கலிங்க தேசத்துடனும் நல்லுறவைப் டேணினான்

  உ + ம் :

➤. சகோதரி மித்தாவை பாண்டி நாட்டு இளவரசனுக்கு மணம் முடித்துக் கொடுத்தான.

➤. கலிங்க இளவரசியை தான் திருமணம் செய்து கொண்டான்.

**சேவைகள் :**

**பொருளாதார சேவைகள்.**

- மஹாகல கடவல, மஹா கண தர வாவ். போன்ற தூர்ந்து போன குளங்களைத் திருத்தினான்.
- எலகரக் கால்வாயின் சிதைநத பகுதிகளை செப்பனிட்டான்.
- கந்தளாய், கவுடுலு, மின்னேரியா முதலிய குளப்பகுதிகளில் மீண்டும் விசாயத்தை ஆரம்பித்தான்.
- ஊவா மாகாணத்தில் புதுகுண வாவியை அமைத்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சேவைகள்

- மகாவிகாரை, அபயகிரி விகாரை, ஜேத்தவன விகாரை, திஸ்ஸ மகாராம விகாரை, சலகிரி விகாரை, தெவிநுவர விகாரை, மகியங்கனை விகாரை முதலிய விகாரைகளைப் புனரமைத்தான்.

- பொலன்னறுவையில் 3 மாடிகளைக் கொண்ட தலதா மாளிகையை அமைத்து அதில் தந்த தாதுவை பிரதிஷ்டை செய்தான.

- சிவனொளிபாதமலைக்குச் செல்லும் பாதையை செப்பனிட்டு தங்குமிட வசதிகளை ஏற்படுத்தினான.

- பௌத்த கல்வியை வளர்[illegible] அமைத்தான்.

❋ ❋ ❋ ❋ ❋


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 04
## பண்டைய சமூகம்

01. நாட்டின் நிர்வாகத்தைக் கொண்டு நடாத்தும் ஸ்தாபனங்களைக் குறிப்பிடுக.
- ☞. சட்டத்துறை
- ☞. நிர்வாகத்துறை
- ☞. நீதித்துறை

02. **மேற்குறிப்பிட்ட மூன்று ஸ்தாபனங்கள் பற்றிய விபரங்களைத் தருக.**

**சட்டத்துறை :**

- ☞. நாட்டுக்குத் தேவையான சட்டங்களை இயற்றுவது. முன்னர் அரசனே சட்டங்களை இயற்றினான். பின்னர் சட்டம் இயற்றுவதில் அரசனுக்கு உதவியாக அரசசபை இருந்தது.
- ☞. கல்வெட்டுக்களில் "வத்ஹிமியன் வதால" என்பது அரசனின் சட்டத்தைக் குறிக்கின்றது. (வத்ஹிமி = அரசன்)

  உ + ம் :

  துட்டகைமுனு மன்னன் எல்லாளனது கல்லறைக்கு மக்கள் மரியாதை செய்ய வேண்டும் என்ற சட்டத்தை பிறப்பித்தமை.
- ☞. மக்களது பொருளாதார, சமூக, சமய மேம்பாட்டிற்காக சட்டங்கள் இயற்றப்பட்டன.
- ☞. இத்துறை கி.பி. 9ம் நூற்றாண்டில் கல்வெட்டுக்களில் "எக்தென் சமிய" எனவும் அழைக்கப்பட்டது.

நிர்வாகத் துறை :

- ☞. புராதனகாலத்தில் நிர்வாகத்துறையே சட்டத்துறையாகச் செயற்பட்டது. முடியாட்சி நிலவிய காரணத்தால், சட்டத்துறை தனியாகச் செயற்பட முடியாதிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதித்துறை :

☞. "சபாவ" எனப்படுவது அக்கால நீதி மன்றமாகும்.

☞. நீதிமன்றங்கள் பிணக்குகளையும், தவறு புரிபவர்களையும் விசாரித்து தீர்ப்பு வழங்கியது.

☞. காணி தொடர்பான விடயங்களுக்குச் இச்சபை தீர்வுகளை முன்வைத்தது.

☞. பிரதேச மட்டத்தில் "தசகம் எத்தன்" என்ற சபை செயற்பட்டதாக கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

உ + ம் :

கொலேகம என்ற இடத்தை மகிந்தராம என்று பிக்குணிகளின் ஆராமைகளுக்கு அன்பளிப்புச் செய்ய சபையைச் சேர்ந்த இருவர் பிரதிநிதிப்படுத்தினர். (அநுராதபுரத்தில் உள்ள குருமஹுததன கல்வெட்டு)

03. **புராதன கால உள்ளூர் ஆட்சி நிர்வாகம் பற்றி எழுதுக.**

☞. நிர்வாக மத்திய நிலையமாக நாட்டின் தலைநகரம் விளங்கியது. ஆரம்பத்தில் சகல வசதிகளையும் உடைய நகரமாக பண்டுகாபய மன்னனால் அநுராதபுரம் தலைநகரமாக்கப் - பட்டது.

☞. தலைநகரத்திலிருந்து நிர்வாகம் மேற்கொள்வது சிரமமாகையால் உள்ளூராட்சி பிரதேசங்களை நிர்வகிக்க தனியான ஒரு நிர்வாக அமைப்புக் காணப்பட்டது.

உ + ம் : வசப மன்னன் யாழ்ப்பாண / வடபகுதியிலுள்ள தீபகற்பத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட ரிஷிகிரி எனும் அமைச்சர் பிரியங்க திஸ எனும் விகாரையை அமைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. (வல்லிபுர பொற்சாசனம்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்திய நிர்வாகத்திற்காக பத்து கிராமங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் "தசகம் எத்தன்" எனும் தலைவர்களைக் கொண்ட சபைகள் இருந்தன.

☞. களுதிய பொக்குண கல்வெட்டில் 10 கிராமத்தலைவர்கள் ஒன்று கூடி (விகாரைக்குத் தானம் வழங்குகையில் பிரச்சினை ஏற்பட்டால்) பிரச்சினை தீர்க்கப்படல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**04. பண்டைய காலத்தில் சுகாதாரத்துறையின் வளர்ச்சி பற்றித் தருக.**

☞. பொதுவாக பண்டைய மன்னர்கள் சுகாதாரத் துறை பற்றி ஆர்வம் காட்டியிருந்தனர்.

☞. புத்ததாஸ மன்னன் (கி.பி. 340 - 368) பல் வைத்திய சாலைகளை நிர்மாணித்தமை. இம்மன்னன் "சாரணார்த்த சங்கிரஹய" என்ற வைத்திய நூலையும் எழுதியிருந்தான்.

☞. பண்டுகாபய மன்னன் அநுராதபுரத்திலும், முதலாம பராக்கிரமபாகு பொலனறுவையிலும் வைத்திய சாலைகளை நிர்மாணித்தனர்.

☞. பொலனறுவை ஆலாஹனா பிரிவெனா கட்டிடங்களுக்கு இடையில் வைத்தியசாலையின் இடிபாடுகளும், அதனுள் வைத்திய உபகரணங்கள், மருந்து ஓடம் என்பன காணப்பட்டன.

☞. கண்டெடுக்கப்பட்ட உபகரணங்களுள் சத்திர சிகிச்சை உபகரணங்களும் அடங்குகின்றன.

☞. 5ம் மகிந்தன் நாடு முழுவதும் காணப்பட்ட வைத்தியசாலைகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்திருந்தான்.

☞. 4ம் காசியப்பன் உபசக்க எனும் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களுக்கான "உபசக்கரோக நாச" எனும் வைத்தியசாலையை நிறுவியிருந்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. பண்டைய இலங்கை மன்னர்களின் வெளியுறவுக் கொள்கை பற்றி எழுதுக.

☞. இலங்கையானது இந்திய, சீன, அரேபியா, கலிங்கம் போன்ற நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு வைத்திருந்தது.

☞. வர்த்தகம, சமயம், திருமணம், அரசியல் முதலிய காரணங்களுக்காகவே இலங்கை சர்வதேச ரீதியான தொடர்புகளை மேற்கொண்டனர்.

☞. 1ம கஜபாகு மன்னன் சேரன் செங்குட்டுவனுடன் தொடர்பு கொண்டு பத்தினித் தெய்வத்திற்கு விழா எடுத்தான்.

☞. கனிஸ்ட திஸ்ஸ மன்னன் ருவான் வெலிசாய தாது கோபத்துக்கு பூஜை செய்வதற்கு தேவையான கண்ணாடி மணிகளைப் பெறுவதற்காக ரோமாபுரிக்கு தூதுவர்களை அனுப்பியமை.

☞. 6ம் அக்கிரபேதி மன்னன் காலத்தில் சீனாவுடன் தொடர்புகள் ஏற்பட்டமை.

☞. 1ம் விஜயபாகு கலிங்க இளவரசியை மணந்ததுடன் தங்கை மித்தாவை பாண்டிய இளவரசனுக்கு மணம் முடித்துக் கொடுத்தமை.

06. புராதன காலப் பொருளாதார முறை பற்றித் தருக.

☞. விவசாயம் ☞. கைத்தொழில்

☞. வர்த்தகம்

07. விவசாயத்தின் இரு பிரிவுகளை எழுதுக.

☞. சேனைப்பயிர்ச் செய்கை

☞. நெற்பயிர்ச் செய்கை

08. சேனைப்பயிர்ச் செய்கை பற்றிய தகவல்களை எழுதுக.

☞. காட்டின் ஒரு பகுதியை தீயிட்டு கொழுத்தி அந்த இடத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்வது சேனைப் பயிர்ச்செய்கை எனப்படும்.

☞. குரக்கன், வரகு, திணை, உழுந்து, சோளம், கொள்ளு, ஓமம், பயறு, கரும்பு போன்றவை பயிரிடப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞. கல்வெட்டுக்கள் "பிட்ட பிம்", என்றும் உம்மக்க ஜாதகத்தில் "சேன" என்றும் சேனைப்பயிர்ச்செய்கை பெயரிடப்பட்டுள்ளது.

☞. "புத்சரண" என்ற இலக்கியத்தில் "செஹென" என்ற சொல் இதற்கு பயன்படுத்தப்பட்டது.

☞. மன்னர்கள் சிலர் சேனை விவசாயிகளிடமிருந்து இரண்டு வரிகளை அறவிட்டனர். அவை கெதி அட, கெடு கனக எனப்பட்டன.

☞. தீயிடப்பட்ட மரங்களின் கம்புகளினால் சேனையைச் சுற்றி வேலி அடைக்கப்பட்டது. இந்த வேலி "தண்டு வெட்ட" என்று அழைக்கப்பட்டது.

☞. சேனைக்காலத்தில் அந்நாட்டுக்குத் தேவையான துணிகளும், சீனியும், உற்பத்தி செய்வதற்கு முறையே பருத்தியும், கரும்பும் விளைவிக்கப்பட்டன.

☞. புதிதாக தீயிடப்பட்ட காணி, நவதெனிசேனை எனவும், கைவிடப்பட்டு மீண்டும் சேனையாக்கப்பட்ட காணி கனத்த எனவும் அழைக்கப்பட்டது.

09. புராதன விவசாயத்தின் ஒரு பிரிவான நெற்செய்கை பற்றி எழுதுக.

☞. கல்வெட்டுக்கள் சிறிய நெல் வயல்களை வயல்கள் என்றும் பரந்த வயல் நிலங்களை கெத என்றும் குறிப்பிடுகின்றன.

☞. வயல்கள் பெரும்பாலும் நீர்ப்பாசன வசதியைப் பெற்று நடைபெற்று வந்தது.

☞. தோணிகல கல்வெட்டு மூன்று போகங்களில் நெற்செய்கை நடைபெற்றது என்று கூறுகின்றது.

- பெரும்போகம் - பிட்ட ஹஸ (ஒக் / பெப்)
- சிறுபோகம் - மதஹஸ (மே / செப்)
- இடைப்போகம் - அகல ஹஸ

☞. மிகப்பழைய காலத்தில் ஆற்றுநீரையும், மழைநீரையும் நம்பியே விவசாயம் மேற்கொண்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. நீர்ப்பாசனத் துறையில் மன்னர்களின் சேவை -
-களைத் தருக.

☞. தாதுசேனன் கலாவாவியையும், யோதக் கால்வாயையும் அமைத்து நீர்ப்பாசனத் துறைக்கு பெரும்பங்காற்றினான.

☞. 1ம் பராக்கிரமபாகு மன்னன் விண்ணிலிருந்து ஒரு துளி நீரையேனும் கடலில் கலக்கவிட மாட்டேன் எனும் கொள்கை கொண்டு பராக்கிரம சமுத்திரத்தை அமைத்து சேவையாற்றினான்.

☞. வசபன், மகாசேனன் முதலியோர் நீர்ப்பாசன சேவை மூலம் புகழ் பெற்ற மன்னர்களாவர்.

11. மந்தை வளர்ப்பின் முக்கிய அமசங்களைத் தருக.

☞. மாடு, ஆடு, கோழி என்பன மந்தை வளர்ப்பில் ஈடுபடுத்தப்பட்டது.

☞. மந்தை வளர்ப்பில் மாடு வளர்ப்பு சிறப்பிடம் பெறுகிறது.

☞. மாட்டை வளர்ப்பவர்கள் கோபாலகர்கள் எனவும். வளர்க்கப்படும் இடம் கோபாலகம் எனவும் அழைக்கப்பட்டது.

☞. 4ம் காசியப்ப மன்னனது கல்வெட்டில் உள்ள "கிரிகெரி" என்னும் சொல்லானது பாலைப் பெற்றுக் கொள்வதற்காக வளர்க்கும் பசுக்களைக் குறித்தது.

☞. மெதகிரியாவில் உள்ள எத்வெஹர மண்டபத்தில் உள்ள வைத்திய சாலையில் நோயாளர்களின் தேவைக்காக மரணித்த ஆடுகளினதும், கோழிகளினதும் மாமிசம் மட்டும் பயன்படுத்தப்பட்ட வேண்டும் என்பது மந்தை வளர்ப்பிற்கான குறிப்பினை எடுத்துக்காட்டுகின்றது.

☞. கிரிகண்ட சிவன் அறுவடை விழாவில் எருதுகளை நீராட்டி அலங்கரித்ததாக வரலாற்றில் குறிப்பிடப் பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞. கவந்தீசன் துட்டகைமுனுவின் பெயர் சூட்டு விழாவிற்கு 12000 பிக்குகளுக்கு பாற்சாதம் வழங்கியதாகக் கூறப்படுகின்றது.

**12. பண்டைய காலத்தில் நடைமுறையில் இருந்த கைத்தொழில்களைக் குறிப்பிட்டு எழுதுக.**

I. உலோகத் தொழில்
II. ஆபரணத் தொழில்
III. தந்தச் செதுக்கல் கைத்தொழில்
IV. மட்பாண்டத் தொழில்
V. நெசவுத்தொழில்.

**13. உலோகத் தொழில் தொடர்பான விடயங்களை எழுதுக.**

☞. உலோகத் தொழில் புரிந்தோரை "கபர" என்று கல்வெட்டுக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

☞. பொலனறுவை மாவட்டத்தில் உள்ள முதுகல்ல கல்வெட்டு கம்மாளரை "மஜ்ஜிம" என்று குறிப்பிடுகிறது.

☞. பண்டுகாபயன் "கம்மார தேவ" என்ற தெய்வத்திற்கு கோயில் கட்டினான் என்றும் குறிப்படுகின்றது.

☞. உலோகங்கள் உருக்கப்பட்டு சிலைகள் செய்யப்பட்டன.

☞. அபயகிரி அகழ்வுகளில் கிடைக்கப்பெற்ற உலோக நாணயங்கள் மூலம் செம்பு, வெள்ளீயம் என்பன போன்ற உலோகங்களும் பயன் படுத்தப்பட்டன என அறியமுடிகிறது.

**14. செம்பு, வெள்ளீயம் போன்ற உலோகங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டது?**

☞. தம்பகர ☞ டின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. பண்டைய காலத்து ஆபரணத் தொழில் பற்றி எழுதுக.

☞. தங்கக் கைத்தொழிலில் ஈடுபட்ட பொற்கொல்லர்கள் "துலாதார" என்ற பெயரால் அழைக்கப்பட்டனர்.

☞. அம்பாந்தோட்டை மண்டகல என்னும் இடத்தில் உள்ள கல்வெட்டில் "துலதரசுமண" என்னும் சொல் மூலம் பொற்கொல்லர்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

☞. அனுராதபுரம், மகாகம போன்ற இடங்களில் கிடைக்கப்பெற்ற மாலைகளும், மோதிரங்களும் அக்காலத்தில் மாணிக்கக் கைத்தொழில் நடைபெற்றதை உறுதிப்படுத்துகின்றன.

☞. மாணிக்கக் கைத்தொழிலில் ஈடுபட்டவர்கள் "மணிகர" என்று அழைக்கப்பட்டனர்.

☞. ஜேதவன அகழ்வில் நெல்மணி அளவிலான தங்கத்தில் 21 பூவேலைப்பாடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

16. கண்டி காலத்திற்குரிய வேகிரிய தேவாலயத்திற்கு அருகில காணப்பட்ட கல்வெட்டில் குறிப்பிடப்பட்டது யாது?

☞. தடிக என யானைத்தந்தத்தையும், சுமண என்ற சொல் தந்த செதுக்கல் கலைஞர்களையும் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் தந்தச்செதுக்கல் தொழில் இடம்பெற்றதை நாம் அறியக் கூடியதாகவுள்ளது.

17. பண்டைய இலங்கையின் மட்பாண்டக் கைத்தொழில் பற்றிய விபரக் குறிப்புக்களை எழுதுக.

☞. தொல்பொருள் அகழ்வின் போது பெருந் தொகையான மட்பாண்டச் சிதைவுகள் கண்டறியப் -பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞. வனைதல் தொழிலில் ஈடுபடுபவர்கள் "கும்பகார" எனக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

☞. மகாவம்சம் செங்கல் தயாரித்தவர்களை "ஒலுவ" என்று குறிப்பிடுகின்றது.

☞. திசாவாவியில் மேற்கொண்ட அகழ்வில் ஆயிரக்கணக்கான மட்பாண்டச் சிதைவுகளில் சிலவற்றில் பிராமி எழுத்துக்கள் காணப்பட்டன.

**18. புராதன காலத்தில் நெசவுத் தொழில் இடம் பெற்றமைக்கான தகவல்களை எழுதுக.**

☞. விஜயன் இலங்கைக்கு வந்த வேளையில் குவேனி நூல் நூற்றுக்கொண்டிருந்தாள் என்ற வரலாற்றுத் தகவல் இலங்கையில் பண்டைய காலத்தில் நெசவுக் கைத்தொழில் இடம்பெற்றமைக்கான சான்றாக உள்ளது.

☞. அம்பாந்தோட்டை மாவட்டத்தில் "வெஹெரகம" எனும் இடத்தில் உள்ள கல்வெட்டு நூல் நூற்பவர்களை "ததவய" என்று குறிப்பிடுகின்றது.

☞. ஹெரக்கம என்ற இடத்தில் காணப்படும் கல்வெட்டில் துணி நெய்து விற்பனை செய்வோரின் சங்கம் பற்றிய செய்தி காணப்படுகின்றது.

**19. "ஒலுவடு" என மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டவர்கள் யாவர்?**

செங்கல் ஓட்டுத் தொழிலில் ஈடுபட்டோர்.

**20. "புராதன காலத்திலிருந்தே இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளில் வர்த்தகம் முக்கிய இடம் வகிக்கின்றது" இலங்கையில் புராதன கால வர்த்தகம் தொடர்பான தகவல்களைத் தருக.**

☞. வர்த்தகர்கள் வாழ்ந்த முக்கிய நகரங்களாக அநுராதபுரம், மகாகமம் ஆகியன விளங்கியதற்கான சான்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞. சிகிரியாவின் மேற்கில் உள்ள நீர்ப்பூங்காக்களில் காணப்படும் கல்வெட்டில் "அபலவபல" என்ற வர்த்தகத்தின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. இவர் புளி வியாபாரத்தில் ஈடுபட்டதாகவும் குறிப்பிடப் -பட்டுள்ளது.

☞. அநுராதபுரத்தில் தெற்கு வாயிலில் "காலசுமண" என்ற பெயரில் வர்த்தகச் சந்தை காணப்பட்டது.

☞. அம்பாறை, அம்பாந்தோட்டையில் காணப்பட்ட பிராமிய கல்வெட்டுக்கள் மூலமாக வர்த்தகர்களை "வாணிப", "வாபர" எனும் பெயர்களால் குறிப்பிடப் பட்டுள்ளனர்.

☞. வர்த்தக சங்கங்கள் "புகய" என்றும், "நியம்கம" எனும் பெயர்களால் அழைக்கப்பட்டது.

☞. வர்த்தகர்கள் "வணிப', "வாபர" என்றும் அழைக்கப்பட்டனர்.

☞. உள்நாட்டு வர்த்தகத்தில் உப்பு, இஞ்சி, ஆடை, ஆபரணம், நறுமணப்பொருட்களும், வெளிநாட்டு வர்த்தகத்தில் யானை, யானைத்ததந்தம், முத்து, மாணிக்கம், சங்கு, கடலாமை, பருத்தித் துணிகள் ஈடுபடுத்தப்பட்டன.

☞. சுமண எனும் வர்த்தகர்களால் ஒரு கற்குகை பிக்குகளுக்கு தானமாக வழங்கப்பட்டது பற்றி "பண்ட கல" எனும் இடத்தில் காணப்பட்ட கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

☞. அநுராதபுரி நகரின் தெற்கு வாயிலில் "காலசுமண" என்ற பெயரில் வர்த்தக சந்தை காணப்பட்டது.

21. **ஹோபிட்டிகம தூண் கல்வெட்டில் காணப்பட்ட வர்த்தக சட்டங்கள் பற்றிக் குறிப்பிடுக.**

☞. வர்த்தகத்திற்காக சந்தைக்கு வருகின்ற வண்டிகளிடம் வரி வசூலிக்கக் கூடாது.

☞. சூரிய ஒளியிலிருந்து பாதுகாக்கப்பட்ட மண்டபத்திலேயே வெற்றிலை வியாபாரம் மேற்கொள்ளப்பட வேண்டும.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

☞. போயா தினங்களில் வர்த்தகம் மேற்கொள்ளப்படக் கூடாது.
☞. நோன்மதி தினங்களில் வர்த்தகம் புரிந்தோரிடமிருந்து தண்டப்பணம் வசூலிக்கப்பட்ட வேண்டும். மாறாக ஈடுபட்டோர் தண்டமாக மகியங்கனை விகாரைக்கு விளக்கேற்ற வேண்டும்.
☞. சந்தைக்கு வரும் வண்டிகளிலிருந்து அல்லது சந்தையைக் கடந்து செல்லும் வண்டிகளிலிருந்து வரி வசூலிக்கப்படக் கூடாது.

**22. தமிழ்க் கல்வெட்டுக்களில் 11ம் - 13ம் நூற்றாண்டு வரை இயங்கிய வர்த்தக சங்கங்களைக் குறிப்பிடுக.**
☞. நானா தேசிகர் ☞. வலஞ்சியர்
☞. ஐந்நூற்றுவர்.

**23. இலங்கையின் புராதன காலத்தில் சர்வதேச வர்த்தகம் மேற்கொள்ளப்பட்ட துறைமுகங்கள் எவை?**
☞. திருகோணமலை (கோகர்ண)
☞. காலி
☞. ஜம்புகோளப்பட்டினம்
☞. மாந்தை - (மகாதித்த)
☞. வெலிகம

**24. பண்டைய காலத்திலிருந்தே இலங்கை சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தமைக்கான காரணம் யாது?**
☞. இலங்கையின் புவியியல் காரணி இலங்கை சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட முக்கியமான காரணியாக அமைந்தது.
☞. இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளமை.
☞. கிழக்கு மேற்கு வர்த்தகப் பாதையின் மையமாக விளங்கியமை.
☞. பல துறைமுகங்கள் காணப்பட்டமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. வெளிநாட்டு வர்த்தகத்தின் முக்கியத்துவங்களை எழுதுக.

☞. அநுராதபுரம் ஒரு நகராக வளர்ச்சியுறுவதற்கு உதவியது,

- மேற்கில் மாந்தைத் துறைமுகமும், கிழக்காக கோகர்ண துறைமுகமும் அமைந்துள்ளமை.
- அநுராதபுரத்தின் வடக்குக்கரையில் அமைந்திருந்த ஜம்புகோளப்பட்டினத்திற்கு புனித வெள்ளரசு மரக்கிளையும், லங்கா பட்டினத்திற்கு புனித தந்த தாதுவும் கொண்டு வரப்பட்டமை.

☞. இந்தியா, பாரசீகம், உரோம போன்ற சர்வதேச நாடுகளுடன் நட்பினை ஏற்படுத்திக் கொள்ளக் காரணமாகவிருந்தது.

26. புராதன காலத்தில் முக்கியத்துவம் பெற்ற பிற தொழில்களைத் தருக.

☞. ஆசிரியர்கள் ☞. வைத்தியர்கள்
☞. வழக்கறிஞர்கள் ☞. கலைஞர்கள்
☞. கொல்லர்கள் ☞. பொற் கொல்லர்கள்.

27. புராதன கால ஆசிரியத் தொழில் பற்றிக் குறிப்பிடுக.

☞. பழைய பதிவேடுகளில் ஆசார்ய என்ற பெயரால் அழைக்கப்பட்டமைக்கான சான்றுகள் உண்டு.

☞. ஆசார்ஜ என்பவர் பல்துறைகளில் நிபுணத்துவம் பெற்றவர்களாகத் திகழ்ந்தனர்.

உ + ம் :
யானை பழக்கும் ஆசார்யா
- ஹஸ்தி ஆசார்ய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதிரை ஓட்டத்தைக் கற்பித்தோர்

- அஸ்வ ஆசார்ய

அம்பு எய்தும் கலைகளைக் கற்பிப்போர்

- தனு ஆசார்ய

☞. குருகுலக் கல்வி முறை காணப்பட்டது.

28. **புராதன காலத்தில் வைத்தியர்களைக் குறிப்பிடப் பயன்படுத்திய சொற்பதங்களை எழுதுக.**

☞. வெஜ ☞. மஹவெதனா

29. **புராதன சிகிச்சை முறைகள் இரண்டினைக் குறிப்பிடுக.**

☞. மருத்துவ ஓடங்கள் அமைத்து வைத்தியம் செய்யும் முறைமை காணப்பட்டுள்ளது.

☞. மகாசேனனின் பேரன் புத்ததாச மன்னன் "மதுகம்ப" என்ற முறையைப் பின்பற்றிச் சத்திரசிகிச்சை மேற்கொண்டான்.

30. **பண்டைய வழக்கறிஞர் பற்றிய குறிப்பினை எழுதுக.**

☞. பண்டைய வழக்கறிஞர்கள் சட்டங்கள் இயற்றுவதிலும், தீர்ப்பு சொல்வதிலும் மன்னர்களுக்கு உதவினர்.

☞. இவர் "வொஹார என்ற பெயரால் அழைக்கப் பட்டனர்.

☞. அக்கால சமூகத்தால் இவர்கள் ஆற்றலுடைய -வர்களாக மதிக்கப்பட்டனர்.

31. **குருணாகல் மெதகவில் உள்ள கல்வெட்டில் 2200 வருடங்களுக்கு முன்பு செதுக்கப்பட்ட ஒரு கல்வெட்டில் குறிப்பிடப்படுவது யாது?**

திஸ்ஸ என்ற நடனக் கலைஞர்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. ஓவியர்களைக் குறிப்பிட பண்டைய காலத்தில் பயன்படுத்தப்பட்ட பெயர்களைக் குறிப்பிடுக.
☞. சிதகர ☞. லபத

33. லபத திஸ்ஸ எனும் ஓவியர் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு யாது?
நெட்டு கந்த என்னுமிடத்தில் உள்ள ஒரு கல்வெட்டு

34. பண்டைய கால ஓவியங்களுக்கான எடுத்துக் காட்டுக்களைக் குறிப்பிடுக.
☞. அநுராதபுரம் வாயில் மண்டபத்தின் ஓவியங்கள்.
☞. கிதுல்பவ்வ, கரம்பகல முதலிய குகையிலுள்ள சித்திரங்கள்.
☞. சிகிரியாவுக்கு அருகில் உள்ள பிதுரங்கல என்னும் இடத்தில் உள்ள விகாரையிலுள்ள ஓவியங்கள்.

35. புராதன காலத்து கவிஞர்கள் பற்றிய தகவல்களைத் தருக.
☞. கவிஞர்களைக் குறிப்பதற்கு "கவி" என்ற பதம் பயன்படுத்தப்பட்டது.
☞. நெட்டுகந்த கல்வெட்டில் லபத திஸ்ஸ என்ற ஓவியருடைய மகன் சஞ்சயன் கவிஞன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
☞. சிகிரியாவில் கிறுக்கல் கவிதைகளை சாதாரண மக்களே எழுதியுள்ளனர்.
☞. அக்கிரபோதி மன்னன் காலத்தில் 12 கவிஞர்கள் வாழ்ந்துள்ளனர்.

36. பொதுவாக கலாசாரம் என்பதன் மூலம் கருதப்படுவது யாது?
கலாசாரம் என்ற சொற்பதமானது சமயம், கல்வி, இலக்கியமும் இரசனையும், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் முதலியவற்றைக் குறிக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37. இலங்கையின் பௌத்த மதம் எவ்வாறு அறிமுகமானது?

☞. பௌத்த மதமானது கி.பி. 247 இல் தேவநம்பியதீசன் மன்னனாக இருந்த காலத்தில், மகிந்ததேரர் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது.

☞. தேவநம்பிய தீசன் காலத்திலேயே பிக்கு சாசனம், பிக்குனி சாசனம் என்பன தோற்றம் பெற்றன.

38. பிக்குகளின் வாழ்விடங்களைப் பற்றிக் குறிப்பிடுக.

☞. பிக்குகள் ஆராமைகளிலும், குகைகளிலும் வாழ்ந்தனர். இலங்கையின் பல பாகங்களிலுமாக 1600 குகைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

☞. குகை தவிர பன்சாலா என்ற கட்டடங்களிலும் வாழ்ந்துள்ளனர்.

☞. பன்சாலாக்கள் ஆரம்பத்தில் மன்னால் கட்டப்பட்டு ஓலை அல்லது இலுக்குப்புல்லால் வேயப்பட்டது. பின்னர் செங்கற்கள், கற்கள் என்பன பயன்படுத்தப்பட்டன.

39. ஆராமையில் வாழ்ந்த பிக்குப் பிரிவினரைத் தருக.

☞. தலைமைப் பிக்கு - தேரர்
☞. ஏனைய பிக்குகள் - அந்தேவாசிப் பிக்குகள்
☞. மாணவப்பிக்குகள் - சதி விஹரகரிய

40. பௌத்த மதம் பரவுவதில் மன்னர்களின் பங்களிப்புக்களை எழுதுக.

☞. வலகம்பாகு மன்னன்

பௌத்த போதனைகள் மனனம் செய்வதன் மூலமே பாதுகாக்கப்பட்டன. மனனம் செய்த பிக்குகள் "பாணக" என்று குறிப்பிடப்பட்டனர். மனனம் செய்து பாதுகாக்கப்பட்ட பௌத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதனைகளை மாத்தளை அலுவிகாரையில் திரிபிடகம் எனும் நூல் வடிவத்தில் எழுதுவித்தவன் வலகம்பாகு மன்னன் ஆவான்

☞. பௌத்த சமய வளர்ச்சிக்காக மகாபராக்கிரமபாகு பொத்கும் விகாரை, தெமளமகா சாய, உத்தர ராமய, கிரி விகாரை, பளு விகாரை, கல்விகாரை முதலிய பல விகாரைகளைக் கட்டினான். திம்புலாகல தேரர் தலைமையில் நீதிமன்ற சபை அமைத்து மூன்று நிகாயாக்களையும் 1165 இல் ஒன்றுபடுத்தினான்.

☞. மகாநாம மன்னன் அட்டகதா ஜாதகக்கதைகளை பாளி மொழியில் மொழி பெயர்த்தான்.

**41. பௌத்த சமயம் பரவியதால் ஏற்பட்ட விளைவு -களைத் தருக.**

☞. ஒழுங்கான சமுதாய முறைமை தோன்றியது.

☞. சீரிய மனிதப் பண்புகள் தோன்றின. (கருணை, தயவு, தாட்சண்யம், முதியோரை மதித்தல், தானம் வழங்குதல், அன்பு, பற்றின்மை)

☞. எழுத்துக்கலை, மொழி இலக்கியம் வளர்ச்சி பெற்றமை.

☞. பிராமிய எழுத்துக்கள் அறிமுகஞ் செய்யப்பட்டு சிங்கள அரிச்சுவடி தோற்றம் பெற்றது.

☞. பிராகிருத பாளி மொழிகள் அறிமுகமானது.

☞. பொருளாதார தன்னிறைவுடைய அமைதியான சமுதாயம் உருவானது.

**42. பௌத்த சமயம் இலங்கையில் விரைவில் பரவியிருப்பதற்கான காரணங்களைத் தருக.**

☞. பௌத்த மதத்திற்கு முன்னர் காணப்பட்ட வழிபாட்டு முறைகள் வலுவுடையதாக கட்டுக்கோப்புடையதாக இல்லாமை.

☞. மன்னர்களும், உயர் வகுப்பினரும் பௌத்த மதத்தை தழுவியமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞. மக்கள் வாழ்க்கையுடன் ஒன்றிய மதமாகக் காணப்பட்டமை.

☞. மௌரிய கலாசாரத்துடன் கொண்டுவரப்பட்டமை.

**43. இலங்கையில் இந்துசமயம் பற்றிய தகவல்களைத் தருக.**

☞. அநுராதபுரத்தில் அதனை அண்டிய பகுதிகளிலும் இந்துசமயத்தைப் பின்பற்றிய பிராமணிய மக்கள் வாழ்ந்து வந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. இதனால் இந்துமதம் பிராமணிய மதம் என அழைக்கப்பட்டதனை அறிய முடிகின்றது.

☞. மகாவம்சத்தில் "சொத்திசால" என்ற இந்து மதத்தவர்களுக்குரிய கட்டிடம் பற்றி குறிப்பிடப்படுகின்றது.

☞. பண்டுகாபயன் ஆட்சியில் சிவலிங்க வழிபாடு இருந்ததாக மகாவம்ச டீ காவில் கூறப்பட்டுள்ளது.

☞. மகாவம்சத்திலுள்ள சீவகசாலா என்ற பதம் சிவலிங்கம் பிரதிஸ்டை செய்யப்பட்ட இடம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

☞. 7ம் நூற்றாண்டில் பிரதான துறைமுகங்களுக்கு அருகே தமிழர்கள் அதிகம் வாழ்ந்துள்ள மாதோட்டை துறைமுகத்துக்கு அருகே திருக்கேதீஸ்வரம் கோயிலும், திருகோணமலைக்கு அருகே திருக்கோணேஸ்வரம் கோயிலும் சிலாபத்திற்கு அருகே முன்னேஸ்வரம் கோயிலும் அமைக்கப்பட்டிருந்தன. ஜம்புகோளப்பட்டினத்திற்கு அருகே நகுலேஸ்வரமும் குறிப்பிடத்தக்கது.

☞. பொலன்னறுவையில் 1ம், 2ம் இலக்கச் சிவன் கோயில்கள் காணப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44. புராதன இலங்கையில் கிறிஸ்தவ மத வளர்ச்சி பற்றி எழுதுக.

☞. இலங்கை புராதன காலம் முதல் உரோம், கிரேக்கம் போன்ற நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்தன் காரணமாக, இங்கு கிறிஸ்தவம் வளர்ச்சியடைவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

☞. அநுராதபுரத்தில் சிலுவை அடையாளத்துடன் கூடிய புராதன கற்றூண் ஒன்று கண்டறியப் பட்டுள்ளது. இது கிறிஸ்தவ மதத்தின் ஒரு பிரிவினரான கத்தோலிக்க நெஸ்டோரியர்க்குரிய -தாகும். இதன் மூலம் புராதன காலத்திலேயே கிறிஸ்தவம் பரவியிருந்ததை அறிய முடிகின்றது.

☞. ஐரோப்பியர் இலங்கையை ஆட்சிபுரிந்ததன் விளைவாக அரச ஆதரவுடன் வளர்ச்சிய டைந்தது.

45. புராதன இலங்கையில் இஸ்லாம் செல்வாக்கு பற்றிய விபரக் குறிப்புக்களை எழுதுக.

☞. கி.பி.9ம் நூற்றாண்டின் பின் இஸ்லாம் இலங்கையில் வளர்ச்சியடைந்ததற்கான சான்றுகள் பல கிடைக்கப் பெற்றுள்ளன.

☞. அரேபியர் இலங்கையை செரண்டிப் எனக் குறிப்பிட்டுள்ளனர். இதன் மூலம் அராபியருடனான தொடர்பு பற்றியும், இஸ்லாம் மதம் பரவியது பற்றியும் அறிய முடிகின்றது.

☞. இபன் சஹ்ரியர் எழுதிய அஜாயிப் அல் ஹிந்த் என்ற நூலில் இலங்கையிலிருந்து ஒரு தூதுக்குழு அச்சமயம் பற்றி அறியச் சென்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

☞. சிவனொளி பாதமலை என்னும் உச்சியில் உள்ளது ஆதாம் நபியின் பாதச்சுவடு என்றும் நம்பிக்கை இஸ்லாமியரிடம் காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இபன்பதூதா எனும் தேசசஞ்சாரி இலங்கையில் முஸ்லிம் குடியேற்றங்கள் பற்றியும், கொழும்புத்துறை முகம் ஜலஸ்தி என்ற வர்த்தக விவகாரங்களுக்குப பொறுப்பான முஸ்லிம் கண்காணிப்பில் இருந்தது பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளார்.

**46. பண்டைய கல்வி வளர்ச்சி பற்றிய விபரங்களைத் தருக.**

☞. நீண்ட காலமாகவே இலங்கையில் கல்வி வளர்ச்சி ஏற்பட்டு வந்துள்ளது. கேள்வி ஞானத்தின் மூலமே அறிவு கைமாறப்பட்டது.

☞. புராதன சமூகத்தில் குருகுலக் கல்வி முறை நிலவியது. கல்வெட்டுக்களில் "ஆசார்ய" என்ற பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

☞. பிக்குகளே கல்வியை போதித்து வந்தார்கள்.

☞. மகாவிகாரை இந்நாட்டின் மத்திய கல்வி நிலையங்களாகத் திகழ்ந்தது.

☞. சோதிடம், போர்க்கலை, வானிலை, தர்க்க சாஸ்திரங்கள போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

☞. 4400 ஆண்டுகளுக்கு முன்பு காணப்பட்ட களிமண் ஓடக்கல்லறை, இரும்புச் சூளை போன்றன அக்கால மக்களின் அறிவுத்தன்மையைக் காட்டுகின்றது.

**47. பண்டைய இலங்கையரிடம் காணப்பட்ட இலக்கியமும், இரசனையும் பற்றி எழுதுக.**

☞. தாளத்துடன் பாடக்கூடிய ஒரு கவிதை கிரிந்த பன்சாலையில் உள்ள கற்பாறை ஒன்றில் பொறிக்கப்பட்டுள்ளது. இது புத்தர் பெருமானின் குணவியல்பைக் குறிப்பிடுகின்றது.

☞. சிகிரியாவில் உள்ள பளிங்குச் சுவரில் எழுதப்பட்ட கவிதைகள் கி.பி. 8ம் அல்லது 9ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். அறுநூறுக்கு மேற்பட்ட கவிதைகள் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞. புராதன கவிதைகளில் பௌத்த சமய போதனைகளில் அவர்கள் கொண்டிருந்த அக்கறையும், இயற்கையின் அழகை இரசிக்கும் அவர்களின் ஈடுபாட்டையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

☞. அபயகிரி விகாரையில் 9ம் நூற்றாண்டுக் கல்வெட்டு ஒன்றில் உள்ளத்தைக் கவரக் கூடிய உவமைக் கவிதை பொறிக்கப்பட்டுள்ளது. இது எளிமையான உணர்வு பூர்வமான அழகியல் உணர்வைக் கேட்போருக்கு ஏற்படுத்தவல்லது.

**48. புராதன இலங்கைச் சமூகத்தில் இனங்களுக் -கிடையேயான இணக்கப்பாடு காணப்பட்டமை பற்றி எடுத்துக் கூறுக.**

☞. பல்வேறு கலாசாரங்களைக் கொண்ட மக்கள் வாழ்ந்த போதிலும் அனைவரும் ஒற்றுமை உணர்வுடன் செயற்பட்டுள்ளனர்.

தென்னிந்தியா - தமிழர்கள்.
கிரேக்கம் - அயோனியர்கள்
ஆப்கானிஸ்தான் - காம்போஜர்கள்,
மலாக்கா - ஜாவர்கள்
ஆரியக் குடியிருப்புக்கள் மூலம் - சிங்களவர்கள்.

☞. பௌத்த சமயக் குருவாக தமிழர்கள் பதவி வகித்தமை இனங்களுக்கிடையேயான இணக்கப்பாட்டை எடுத்துக்காட்டும் சான்றாகும்.
- அபயகிரி கல்வெட்டு

☞. சிங்கள் பெண் ஒருத்தி தமிழர் ஒருவரைத் திருமணம் செய்ததாக புராதன கல்வெட்டுக் கூறுகின்றது.

☞. சிங்களவர்களே அரசாட்சி நடாத்திய போதிலும் தமிழர்களது நலன்களும் பேணப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தமிழர்கள் மட்டுமில்லாமல் இஸ்லாமியர்களுடன் நல்லுறவு பேணப்பட்டது.
- சிவனொளி பாதமலை பல்வேறுபட்ட மதத்தவர்களும் வழிபடும் புனித இடமாக விளங்கியது.
  - பௌத்தர்கள் - ஸ்ரீ பாத,
  - இந்துக்கள் - சிவனொளி பாதமலை
  - கிறிஸ்தவர்கள்,

    முஸ்லீம்கள் - ஆதாம் மலை
- அரசசபையில் தமிழ் மக்களின் நலன்களை பாதுகாக்க தமிழ் அதிகாரி ஒருவர் இடம்பெற்றார் என 4ம் மகிந்தனின் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.
- இலங்கை இராணுவத்தில் தென்னிந்தியர் இடம்பெற்றனர். 1ம் விஜயபாகு மன்னன் தென்னிந்திய படையிடம் தலதா மாளிகையின் பாதுகாப்பை ஒப்படைத்திருந்தான். அவர்களும் மன்னனிடம் விசுவாசமாக இருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 05
## இலங்கையின் புராதன விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

01. வரலாற்றுக்கு முற்பட்ட கால இலங்கையில் காணப்பட்ட விஞ்ஞான அறிவு முறைமையினை எழுதுக.

- களிமண் ஓட வடிவிலான புராதன கல்லறையானது இறந்தவர்களைத் தகனம் செய்வதற்காக பச்சைக் களிமண்ணினால் தோணி வடிவில் அமைக்கப்பட்டுள்ளமை.
- வீடமைப்புத் தொழில்நுட்பம்.
- மட்பாண்டங்களைத் தயாரிக்கும் தொழில்நுட்பம்.
- நீர் முகாமைத்துவ தொழில்நுட்பம்.

02. களி மண்ணினால் ஓடவடிவிலான புராதன கல்லறைகள் அமைக்கப்பட்டமைக்கு கையாண்ட விஞ்ஞான அறிவு முறையைத் தருக.

- பச்சைக்களி மண்ணினால் தோணி வடிவத்தில் உருவாக்கப்பட்டது.
- சிறந்த களிமண்ணைத் தெரிவு செய்தல்.
- கல்லறையின் சுவர் உயரத்தைக் குறைத்தல்.
- சுவரை நிலத்திற்கு செங்கோணமாக அமைத்தல்.
- சுவர்களின் தடிப்பிற்கும், உயரத்திற்கும் இடையிலான தொடர்பைப் பேணுதல்.
- கல்லறைச் சுவர்கள் சமபாரத்தைப் பேணுதல்.
- பச்சைக் களிமண்ணினால் செய்யப்பட்ட கல்லறை மனித எலும்புக்கூட்டை வைத்து எரிக்கும் போதே சுடப்பட்டது.
- எரிப்பதற்கு உள்ளே வளியோட்டத்தை வழங்கும் வகையில் களிமண் குழாய் பொருத்தப்பட்டிருந்தது. இதன் மூலம் சுமார் 1350 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்கள் எரிவதற்கு ஒட்சிசன் தேவை என்பதை அறிந்திருந்தமை தெரிய வருகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03 பண்டைய வீடமைப்புத் தொழில்நுட்பத்தை எழுதுக.

- வீட்டின் சுவர் நிலத்திற்கு செங்கோணமாக அமைக்கப்பட்டிருந்தமை.
- நிலத்திற்கு மேல் கருங்கல் பரப்பப்பட்டு அதன் மேல் களிமண் இட்டு தரை அமைக்கப்பட்டமை.
- வீட்டின் வரிச்சுவர்கள் களிமண்ணால் வைத்து எழுப்பப்பட்டிருந்தமை.
- மரத்திலான கதவு நிலை பொருத்தப்பட்டமைக்கான துளைகள் கண்டுபிடிக்கப்பட்டமை போன்ற தொழில்நுட்ப முறை காணப்பட்டது.

  **ஆதாரம் :**

  கி.மு. 1129 ம் ஆண்டளவில் அமைக்கப்பட்ட வீடொன்றின் சிதைவுகள் இரத்தினபுரி உடரஞ்சா மடம கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- கித்துள்கல பெலிலென அகழ்வின் போது கருங்கல் கட்டிடமொன்றின் சிதைவுகளிலிருந்து இலை, குழைகளினாலான கூரையொன்றைத் தாங்குவதற்கு ஆதாரமாக அமைந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

**04. இலங்கையின் முன்வரலாற்றுக் காலந்தொட்டு வளர்ச்சி பெற்று வந்த மட்பாண்டக் கைத்தொழிலில் பிரயோகிக்கப்பட்ட தொழில்நுட்பங்கள் எவை?**

- வனைதல் சில்லு பயன்படுத்தப்பட்டது. இது கழற்றக்கூடிய முறையில் வட்ட வடிவான பலகையில் அமைந்ததாகும்.
- தரமான களிமண்ணே மட்பாண்டத் தயாரிப்புக்குத் தேவையானபடியால் மண்ணைத் தெரிவு செய்தல், அதனைப்பதனிடல், சுடுவதற்கான சூளைகளை அமைத்தல்.
- உரிய வெப்ப நிலையில் பாத்திரங்களில் சுட்டெடுத்தல்.
- வர்ணமிடுதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. சுடப்பட்ட மட்பாண்டங்களில் அலங்கார வேலைப் -பாடுகள் செய்யப்பட்டதற்கான ஆதாரத்தினை முன் வைக்குக.

- உடரஞ்சா மடம புராதன வீட்டில் கண்டெடுக்கப்பட்ட நிறம் தீட்டப்பட்ட மட்பாண்டமாகும். அதில் வெள்ளை நிறப்பின்னணியில் செந்நிறக் கோடுகள் வரையப்பட்டிருந்தன. செந்நிறக் கற்கள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தன.

- இன்று பயன்படுத்தப்படும் பந்துக்களிக்கு (வெண்களி) இணையான தொழில்நுட்பத்தை அன்றைய மக்கள் பயன்படுத்தினர். களி மண் தண்ணீரில் கரைக்கப்பட்டு வண்டல் படிமமாக மாற்றப்பட்டே மட்பாண்ட உற்பத்தியில் பயன்படுத்தப்பட்டது.

06. நீர் முகாமைத்துவம் என்பது யாது?
நீரைச் சேமித்து அதன் மூலம் உச்ச பயன்பாட்டைப் பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் அனைத்த நடவடிக்கைகளும் நீர் முகாமைத்துவம் எனப்படும்.

07. நீா முகாமைத்துவ செயற்பாடுகளில் சிறப்புப் பெற்றிருந்த முக்கியமா்ன தொழில்நுட்ப அம்சங்களைத் தருக.

- மகாவாவிகளை அமைத்தல்.
- அணைக்கட்டுக்களை அமைத்தல்.
- அலைதாங்கிகளை அமைத்தல்.
- கலிங்கல் தொட்டிகளையும், மடைக் கதவுகளையும், சுருங்கல்களையும் அமைத்தல்.
- கால்வாய்கள் அமைத்தல்.
- நீர்ப்பூங்காக்களை அமைத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. மகாவாவிகள் உருவாக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவை?

- விவசாய நடவடிக்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்ளல்
- வெள்ளப்பெருக்கைக் கட்டுப்படுத்தல்.
- நகர, கிராம மக்களின் நீர்த்தேவையை நிறைவு செய்தல்.

09. பாரிய குளங்களை அமைப்பதில் விஞ்ஞான தொழில்நுட்ப அறிவின் பிரயோகம் தேவைப்படுவ -தற்கான காரணங்களைத் தருக.

- குளத்தில் சேகரிக்கப்பட்ட பாரிய நிலப்பரப்பின் அமுக்கத்தைக் கட்டுபடுத்துவதற்கும், உயர் தொழில்நுட்ப விஞ்ஞான அறிவுத் தேவைக்கும்.
- நீரை விநியோகிக்கும் போது ஏற்படக்கூடிய பாரிய அழிவுகளைத் தடுக்கும் வகையில் குளக்கட்டைப் பாதுகாப்பதற்கு விஞ்ஞான தொழில்நுட்ப அறிவு தேவையாகும்.

10. இலங்கையில் காணப்படும் சில பாரிய குளங்களையும் அவற்றின் பரப்பளவுகளையும் குறிப்பிடுக.

- கவுடுலுவாவி – 2357 ஹெக்டயர்
- மின்னேரியாக்குளம் – 2550 ஹெக்டயர்
- குருளுவாவி – 2125 ஹெக்டயர்
- கலாவாவி – 2125 ஹெக்டயர்
- பதவியாக் குளம் – 2537 ஹெக்டயர்

11. உலர் வலயத்தில் வாவிகள் உருவாக்கப் பட்டமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக.

- வருடத்தில் ஒரு பருவத்தில் மாத்திரம் மழைவீழ்ச்சி கிடைத்தமை.
- ஆவியாக்கம் இப்பிரதேசத்தில் அதிகளவில் உள்ளமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ வரட்சி தோன்றுகின்றமை.
➢ ஆறுகள் வற்றிப் போகும் தன்மை.
➢ ஆண்டு முழுவதும் தேவையான நீரைச் சேமித்தல்.

**12. உயர் விஞ்ஞான தொழில்நுட்ப அறிவுக்கு எடுத்துக்காட்டாக அணைக்கட்டு (குளக்கட்டு) விளங்குகிறது. அது பற்றிய விபரங்களை உதாரணங்களுடன் தருக.**

➢ நதிக்குக் குறுக்காக அணைக்கட்டுக்களை அமைக்கும் தொழில்நுட்பம், புராதன காலத்திலேயே இலங்கையிலேயே நடைமுறைப் -படுத்தப்பட்டது. கல்வெட்டுக்களில் பிராமி எழுத்துக்களில் இடம்பெற்ற "அவரண" என்ற சொல் அணைக்கட்டையே குறிக்கின்றது.

➢ குளக்கட்டு பலம் வாய்ந்ததாக இருப்பதற்காக இயற்கையான கற்பாறைகளை அத்திவாரமாகக் கொண்டே அணைக்கட்டு அமைக்கப்பட்டது.

➢ இரு எச்சக் குன்றுகளின் சுவடுகளை இணைத்து அணைக்கட்டுக்களை அமைத்ததன் மூலம் பெரிய குளங்கள் உருவாகின.

➢ இன்று பெருந்தெருக்கள் அமைக்கும் தொழினுட்பம் அன்று குளக்கட்டை அமைக்கும் போது பயன்படுத்தப்பட்டது. களிமண், சரளைமண், வெண்களி முதலியன ஒவ்வொரு அடுக்காக இடப்பட்டு அதற்கு மேலே குளக்கட்டு அமைக்கப் -பட்டது.

(i) குன்றுகளில் ஒடுங்கிய பகுதிகளின் சுவடுகளை இணைதது அணைகட்டி தடை செய்து வாவிகள் உருவாக்கப்பட்டது.

உ + ம் :

| | | |
|---|---|---|
| கலாஓயா | – | கலாவாவி |
| மல்வத்து ஓயா | – | திஸவாவி, அபயவாவி |
| குருளு ஓயா | – | குருளு வாவி |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(ii) உயரமான குன்றுகள் இல்லாதவிடத்து செயற்கையாக அணைக்கட்டுக்கள் அமைத்து வாவிகளை உருவாக்கினர்.
உ + ம் : யோதவாவி (இராட்சதக் குளம்)

(iii) எச்சக் குன்றுகளின் பாறைச் சுவடுகளை இணைத்துக் குளங்களை உருவாக்கினர்.
உ + ம் : மின்னேரியா வாவி
(குளக்கட்டு குவாசைட் பாறை பரந்துள்ள அமைப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.)
பராக்கிரம சமுத்திரம் (அணைக்கட்டு சமவுயரக் கோடுகளின் பரம்பலுக்கு ஏற்ப அமைந்துள்ளது.)

13. அலைதாங்கி எனப்படுவது யாது?
நீர் நிரம்பிய குளத்தின் மேல் மட்டத்தில் காற்றானது அழுத்தத்தைப் பிரயோகிப்பதால் அலைகள் உருவாகும். அலைகள் அழுத்தினால் அணைக்கட்டு அரிப்புறுவதைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட குளத்தின் கூறே (உறுப்பு) அலைதாங்கி எனப்படும்.

14. அலைதாங்கி எவ்வாறு அமைக்கப்படுகின்றது?
அணைக்கட்டின் உட்பகுதிச் சுவரில் கற்களால் பரப்பி பதிப்பதன் மூலம் அலைதாங்கி அமைக்கப்படுகிறது.

15. அலைதாங்கி மூலம முன்னோரின் அறிவுத்திறன் பற்றி அறியக்கிடப்பது யாது?
நீர்ச்சக்தியின் செயற்பாட்டைக் கவனத்திற் கொண்டு அதனைத் தடுக்கும் முறையொன்றினை உருவாக்குவதன மூலம் எமது முன்னோர் விஞ்ஞான அறிவுமிக்கவர்களாக விளங்கினர் என்பதனை அறிய முடிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. குளத்தின் கூறுகளில் மடைக்கதவும் ஒன்றாகும். அது பற்றிய விபரங்களைத் தருக.

- பாரிய குளங்களிலிருந்து நீரைத் திறந்து விடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள வியூகமே மடைக்கதவு ஆகும்.
- 4ம் மகிந்தனின் வெஸ்ஸகிரிய கல்வெட்டில் மடைக்கதவினைக் குறிக்கும் மொஹால், நகா என்னும் இரு சொற்கள் காணப்பட்டன. ரஜமொஹல எனும் பெயராலும் மடைக்கதவு குறிப்பிடப்பட்டுள்ளது.
- மடைக்கதவு ஈரக்கலிங்கல், உயர் கலிங்கல் என இரு வகைப்படும். குளத்தில் நீர் உயர்வாக இருக்கும் போது மேல் மட்டத்தில் அமைக்கப்படும் துவாரம் உயர் கலிங்கல் எனப்படும். குளத்தின் நீர் மட்டம் குறையும் போது நீரை விநியோகிப்பதற்கும், குளத்தின் அடியில் படிந்துள்ள சேற்றை அகற்றுவதற்குமாக ஈரக்கலிங்கல் உருவாக்கப்பட்டது.
- உயரம் கூடிய பெரிய குளக்கட்டுக்களில் ஒன்றுக்கு மேற்பட்ட மடைக்ககதவுகள் அமைக்கப்பட்டன. பருவ காலங்களில் குளத்தில் சேரும் நீரை வெளியேற்றி குளக்கட்டைப் பாதுகாக்கவே பல மடைக்கதவுகள் ஏற்படுத்தப்பட்டன.

17. மடைக்கதவுக்குக் குறுக்காக அமைக்கப்பட்டிருக்கும் கற்றூணின் பயன்பாடு யாது?

தண்ணீரைத் திறந்து விடுவதற்குப் பயன்படுவதாகும். அதனை அங்குமிங்கும் நகர்த்துவதன் மூலம் தேவையான அளவு நீரைக் கால்வாய்க்குத் திறந்து விட முடியும்.

18. கற்றூண் பற்றிக் கல்வெட்டுக்களில் கூறப்பட்டவை பற்றித் தருக.

- "தண்ணீர் விளக்கு" எனும் சொல்லினால் கற்றூண் குறிப்பிடப்பட்டுள்ளது.
- வெஸ்ஸகிரி கல்வெட்டில் "தண்ணீரைக் கட்டுப்படுத்த மடைக்கதவில் பொருததப்பட்ட கற்றூண் நான்கு முழம் (1.8 மீற்றர்) உயரமானது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. குளக் கூறான கலிங்கல் தொட்டியின் பணி யாது?

மடைக்கதவு ஊடாக நீர் வெளியே வேகமாகச் செல்லும் போது உண்டாகும் அமுக்கத்தினால் குளக்கட்டானது பாதிக்கப்படாமல் பாதுகாக்கும் பணியை கலிங்கல் தொட்டி புரிகின்றது.

20. பண்டைய காலங்களில் கலிங்கல் தொட்டி எவ்வாறு அமைக்கப்பட்டது?

- செவ்வக வடிவமாகக் கருங்கல்லால் அமைக்கப்பட்டிருந்தது.
- மேலிருந்து பார்க்கும் போது ஒரு சதுரத் தொட்டி போலக் காணப்படும்.
- கலிங்கலை ஆதாரமாகக் கொண்டே அமைக்கப்பட்டது.
- கருங்கற்களை மிக நுணுக்கமான வகையில் இணைத்து நீர் கசியா வண்ணம் அமைக்கப் -பட்டுள்ளது.

21. **இலங்கையின் புராதன காலந்தொட்டு கால்வாய் அமைத்தல் தொழில்நுட்பம் காணப்பட்டமைக்கான ஆதாரங்களைத் தருக.**

- கி.மு. 2ம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டொன்றில் கால்வாய்கள் அமைப்பதில் ஈடுபட்ட அதிகாரி ஒருவரை "அடிக" என்ற பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது.
- மகாவலி கங்கையின் கிளை நதியான அம்பன் கங்கையிலிருந்து நீரை மின்னேரி, கிரித்தல, கவுடுலு, கந்தளாய் முதலிய குளங்களுக்கு நீரைக் கொண்டு செல்ல கால்வாய் பயன்பட்டது.
- மகாவலி கங்கைக்கு குறுக்காக மினிப்பே என்னுமிடத்தில் அமைக்கப்பட்ட அணையின் மூலம் மினிப்பே கால்வாய் ஊடாக பொலன்னறுவை வரை நீர் கொண்டு செல்லப்பட்டது.
- தாதுசேனன் அமைத்த யோதக்கால்வாய் (ஜயகங்கை) மூலம் கலாவாவியிலிருந்து நீரை அனுராதபுரத்திலுள்ள திசாவாவிக்கு கொண்டு சென்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. நீர்த் தொழில்நுட்பத்திற்குரிய இன்னுமொரு அமசம் யாது?

விகாரையில் வாழ்ந்த பிக்குமாரின் பயன்பாட்டிற்காக நிர்மாணிக்கப்பட்ட குட்டம் பொய்கை, தாமரைப் பொய்கை, யானைப் பொய்கை போன்றவைகளாகும்.

23. "ஊராகெட" கிணறுகள் என்றால் என்ன?

பொதுமக்களின் நீர்ப்பாவனைக்கு தரம், குளிர்ச்சி என்பனவற்றைக் கவனத்திற் கொண்டு தொழில்நுட்ப முறைகளுடன் கூடியதாக அநுராதபுரம் போன்ற உலர் வலயப்பிரதேசங்களில் அமைக்கப்பட்ட கிணறுகள் "ஊராகெட" கிணறுகள் எனப்படும்.

24. "ஊராகெட" கிணறுகள் எவ்வாறு அமைக்கப்பட்டன.

பெரிய மட்பாண்டங்கள் பலவற்றைக் கிணற்றுக்குள் புதைத்துக் கிணற்றின் சுவரை மூடி அமைத்துள்ளனர். உலர்வலயக் கிணறுகளில் நீரின் அமிலச்சுவை அதிகமானதால் அதனைக்கட்டுப்படுத்தக் கூடியதான திட்டமிட்ட தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தியே இத்தகைய கிணறுகள் அமைக்கப்பட்டன.

25. புராதன இலங்கையின் நீர்த்தொழில்நுட்பச் சிறப்புக்கான நிர்மாணம் "சிகிரியா நீர்ப்பூங்கா ஆகும்" இப்பூங்கா பற்றிய தகவல்களைத் தருக.

- சிகிரியாவின் மேற்கு நந்தவனத்தில் எமது முன்னோரின் உயர்ந்த தொழில்நுட்பத்தை எடுத்துக்காட்டும் 4 நீர்ப்பூங்காக்கள் உள்ளன.
- நீர்ப்பூங்காவூடாக சிகிரியாக் குன்று வரையிலான பாதையின் இரு மருங்கிலும், நான்கு நீர்ப்பூமரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றின் மூலம் மேலெழும் நீரின் உயரத்தின் அளவுகளில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும.
- இந்நீர்ப்பூங்காங்கள் எளிமையான, செயற்திறன் கூடிய வகையில் அமைக்கப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சுமார் 600 அடி உயரத்திலிருந்து சமவெளியை நோக்கி ஓடும் நீரை திடீரெனத் தடுப்பதன் மூலம் அமுக்கத்தை ஏற்படுத்தி நீரை மேலெழச் செய்யும் தொழில்நுட்பம் பின்பற்றப்பட்டது.
- ஓடிவரும் நீரைத் தடுக்கும் போது அமுககம் ஏற்படும். அவ்வாறு அமுக்கம் ஏற்படும் இடங்களில் வட்டமான துளைகளிடப்பட்ட கருங்கல்லைப் பொருத்துவதன் மூலம் அத்திவாரங்கள் ஊடாக மிகக் கவர்ச்சியான முறையில் நீர் எழுந்து விசிறும.
- சிறிய துளையினூடாக செல்லும் நீர் மிக உயரத்திற்குச் செல்லும், வெளியேறும் நீர் வெவ்வேறு உயரங்களுக்கு செல்லவேண்டும் என்பதற்காக வெவ்வேறு அளவுகளில் துளைகள் இடப்பட்டன.
- சிகிரியா குன்றின் மேலிருந்து கீழாக நீரோட்டம் செல்லும் போது அதில் சேரும் வண்டல்கள் இயற்கையாக ஈர்ப்பு விசை மூலம் கீழ்ப்பகுதியினுள் சென்று படியும் வண்ணம் நீண்ட தூரத்திற்கு வாய்க்கால்கள் மூலம் வாய்க்கால்களின் சரிவு குறைவானதாக அமைக்கப்பட்டு நீரின் வேகம் குறைக்கப்பட்டுள்ளது.
- வாய்க்கால் சுருள் வடிவில் அமைக்கப்பட்டிருக்கும்
- வாய்க்கால்களில் மழைக்காலங்களில் படியும் சேற்றை நீக்கக் கருங்கற் பாறைத்துண்டங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

26. கட்டிட நிர்மாணக் கலைக்குரிய நிர்மாணங்களைக குறிப்பிடுக.

- தூபிகள்
- தூபி மனைகள்
- சிலைமனைகள்
- விகாரைகள்
- ஆராமைகள்
- தான சாலைகள்
- தியான மண்டபங்கள்
- அரசமாளிகைகள்
- கோட்டைகள்
- மருத்துவ நிலையங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. புராதன பொறியியலாளர்கள் பாரிய கட்டிடங்களை நிர்மாணம் செய்யும் போது விஞ்ஞான அறிவுடன் செயற்பட்டனர் என்பதற்கான எடுத்துக்காட்டுக்களைக் குறிப்பிடுக.

➢ ருவன்வெலிசாயாவைக் கட்டிய போது அதன் உச்சியில் இடிதாங்கியைப் பொருத்தினர். ("வஜ்ரசும்பட்ட") என இடிதாங்கி உபகரணம் அழைக்கப்பட்டது.

வஜ்ர – மின்னல், சும்பட்ட – காந்தம்)

➢ விகாரைகளை அமைக்கும் போது தற்கால கொங்றீட் தொழில்நுட்ப முறைக்குச் சமனான முறையைப் பயன்படுத்தி உறுதிவாய்ந்த அத்திவாரமாக இடுதல்.

28. ருவான்வெலிசாயவின் அத்திவார அமைப்பு முறையை எழுதுக.

➢ விகாரை கட்டுவதற்கு முன்னர் அதன் தளம் ஏழு முழம் (10.5 அடி / 3.15 மீற்றர்) ஆழத்திற்கு சுண்ணாம்புக் கற்பாறைகள் இடப்பட்டுள்ளது.

➢ உடைக்கப்பட்ட சுண்ணாம்பு கற்பாறைகளின் மீது நீரூற்றி கடினமான தோலினாலான பாதணிகள் அணியப்பட்ட யானைகள் மூலம் மிதித்து மட்டமாக்கப்பட்டது.

➢ பின்னர் வெண்ணெய்க்களி எனப்படும் களிமண் இடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது.

➢ வெண்ணெய்க்களி மண் மீது கருங்கல் படை ஒன்று இடப்பட்டது.

➢ கருங்கல் படையின் மேல் படிகக்கல் படையொன்றும் இடப்பட்டது.

➢ அதன் பின்னர் "நவநீதம்" எனப்படும் களிமண் பூசப்பட்டது.

➢ நவநீதக் களிமண் மேல் இரசாயத் திரவமொன்றினால் கரைக்கப்பட்ட விளாம்பழச்சாறு பூசிய உலோக வலையொன்று விரிக்கப்பட்டது.

➢ உலோக வலையின் மேல் நல்லெண்ணெயில் நனைக்கப்பட்ட "ரன்சிரியல்" எனப்படும் கற்கள் பரப்பப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. சிகிரியா நகர உருவாக்கம் பற்றி எழுதுக.

- மிகப்பெரிய தனிக்குன்று ஒன்றினை மையமாகக் கொண்டு நகரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- சிகிரியா குன்று அது அமைந்துள்ள சமவெளியிலிருந்து 200 அடி உயரமானது (60m)
- சிகிரியாக் குன்றின் உச்சியில் அரசமாளிகை அமைந்திருந்தது. அரசமாளிகையின் இடிபாடுகள் மூன்று ஹெக்டயர் பரப்பளவில் காணப்படுகின்றன.
- மலைக்குன்றை அடிப்படையாகக் கொண்ட கிழக்கு மேற்கு பிரதேசப் பாதைகள் முறையே நாற்பது, தொண்ணூறு ஹெக்டயர் பரப்பளவைக் கொண்டவை.
- இக்குன்று நகரைச் சுற்றி செங்கல்லினால் அமைக்கப்பட்ட பாதுகாப்பு வேலியின் நீளம் 10 கி.மீற்றர்களாகும்.
- சிகிரியாக் குன்றைச் சுற்றி அமைக்கப்பட்ட நீர் அகழி எட்டு கிலோ மீற்றர் நீளமானது.

30. புராதன மன்னர்களின் வைத்திய சேவை பற்றி எழுதுக.

- பண்டுகாபய மன்னன் பிரசவ இல்லம் அமைத்தான் என்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது.
- துட்டகைமுனு மன்னன் 18 வைத்திய சாலைகளை அமைத்ததாக வம்சக்கதைகள் கூறுகின்றன.
- புத்ததாச மன்னன் வலது குறைந்தோருக்கு வைத்தியசாலை அமைத்தான் என்று மகாவம்சம் கூறுகின்றது.
- பராக்கிரமபாகுவின் கதிகாவத்தவில் பிக்குகள் அதிகாலையில் எழவேண்டும், நடத்தல் பயிற்சி செய்ய வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னர்களில் சிலர் வைத்தியர்களாகவும், சிலர் வைத்திய கலைக்கு அனுசரணை வழங்கியவர்களாகவும் விளங்கினர்.

உ + ம் : புத்ததாச மன்னன் சாரணாத்த சங்கிரஹய எனும் வைத்திய நூலை எழுதினான்.

- 1982ல் பொலன்னறுவை ஆலாஹனா பிரினாவில் இடம்பெற்ற அகழ்வு புராதன காலத்தில் வளர்ச்சியடைந்த வைத்திய தொழில்நுட்பத்தை நன்கு எடுத்துக்காட்டக்கூடியது.
- வைத்தியத்துறையை மேம்படுத்த மூலிகைத் தோட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன.

உ + ம் : 7ம் அக்கபோதி

**31. தொல்பொருள் ஆய்வுகள் மூலம் பண்டைய சுகாதார சேவை எவ்வாறு காணப்பட்டது என எழுதுக.**

- மலசலகூடம் சம்மந்தமான தொல்பொருள்களிலிருந்து வடித்தல் முறையில் கழிவுகளை முகாமை செய்துள்ளமை தெரியவருகின்றது.
- அரண்மனையில் பயன்படுத்திய மலசல கூடங்களில் ஆழமான குழிகளுக்குள் கழிவுகளை விடுவதற்கான ஏற்படுகள் செய்யப்பட்டிருந்தன.
- பொலன்னறுவைச் சிதைவுகளில் அழுக்கு நீர் ஓடுவதற்காக அமைக்கப்பட்ட சாக்கடைத் தொகுதி ஒன்று கண்டிபிடிக்கப்பட்டது.
- ஆலாஹென பிரிவெனா பற்றிச் சூளவம்சம் குறிப்பிட்ட விடயங்களில் கட்டிடத்தின் பரப்பளவுக்கேற்ப மலசல கூடங்களும் அமைக்கப் பட்டிருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. புராதன காலத்தில் இரும்புத்தாதிலிருந்து இரும்பைப் பிரித்தெடுக்கும் தொழில்நுட்பம் பற்றிய சான்றுகளைக் குறிப்பிடுக.

- சப்பிரகமுவ மாகாணத்தில் பலாங்கொடை சமனலவெவ பிரதேசத்தில் இரும்பை உருக்கப் பயன்படுத்தப்பட்ட சூளை கண்டுபிடிக்கப்பட்டது.
- மத்திய மாகாணத்தின் சிரியாவுக்கு அண்மையிலுள்ள அலகொலவெவ தெஹிகஹ அலகந்த எனும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புராதன அடுப்பு.
- கி.மு. 2400 காலப்பகுதிக்குரிய இது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட சிதைவானது, அக்காலத்தில் இரும்பை உருக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட சூளையாகும்.

33. சமனெலவெவ எனுமிடத்தில் இரும்பு உருவாக்கப்பட்ட முறை பற்றிக் குறிப்பிடுக.

- இரும்பு உருக்கும் சூளையை மலை உச்சியில் அமைத்து இயற்கையாக வீசும் காற்றைப் பயன்படுத்தினர்.
- இச்சூளையானது பன்னிரண்டு மணித்தியாலங்கள் அணையாது எரிந்துள்ளது.
- இரும்பைப் பெற்றுக் கொள்ள இல்மனைட், ஹெமமைட் எனும் கற்கள் பயன்படுத்தப்பட்டன.
- இந்த அடுப்பை எரிக்க "மரங்" எனப்படும் மரத்தை எரித்துப் பெறப்பட்ட கரி பயன்படுத்தப்பட்டது.
- தெஹிகஹ அலகந்தப்பகுதியில் எரிவதற்கான வளி ஊதுளை எனும் கருவி மூலம் பெறப்பட்டது.

34. புராதன இலங்கையின் சிறுகதைத் தொழில்கள் பற்றிக் குறிப்பிடுக.

- **ஆபரணங்களை வடிவமைத்தல் :**
  ஜேதவனராமய அகழ்வின் போது ஆபரணத்தில் ஒரு நெல் மணி அளவிலான தங்க நகையில் 21 பூக்கள் செதுக்கப்பட்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **மட்பாண்டக் கைத்தொழில் :**
  அபயகிரி அகழ்வின் போது கண்டறியப்பட்ட நிற ஓடுகளும் உடரஞ்சா மடம் என்ற இடத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட வர்ணம் பூசப்பட்ட பாத்திரங்கள் என்பன புராதன மட்பாண்டத் தொழில்நுட்பத்தை எடுத்தியம்புகின்றது.

- **பட்டறைக் கைத்தொழில் :**
  இரும்பை சூளையில் வைத்து உருக்கி விவசாய உபகரணங்களும், வைத்திய உபகரணங்களும் உற்பத்தி செய்யப்பட்டன.

35. **உள்நாட்டு சம்பிரதாய முறைகளைத் தருக.**
- புராதன கால மக்கள் விவசாயம் சார்பான தமது தேவைகளை இறைவனிடம் பெற்றுக் கொள்வதற்காக பல்வேறு பூஜைகளை நடாத்தினர்.
- வெவ்வேறு பிரதேசங்களிலும் வேறுபட்ட தெய்வங்களுக்கு பூஜைகள் இடம்பெற்றன.
- அன்றாடப் பிரச்சனைகளை தீர்த்துக் கொள்ளும் பொருட்டும், பயிர்களுக்கு கிருமிகளால் ஏற்படும் தொல்லைகளை நீக்கவும், மாடுகளுக்கு ஏற்படும் நோய்களைத் தீர்க்கவும் பூசைகள் இடம்பெற்றன.
- பசு மாடுகளின் பாதுகாப்பிற்கும் விவசாயிகளின் வெற்றிக்குமாக பால்மாடு யாகம் எனும் பூஜையை நடாத்தினர்.
- சாந்தி பூஜை ஊவா, சப்ரகமுவ ஆகிய பகுதிகளில் அன்றிலிருந்து இன்று வரை நடைபெறுகின்றது.

36. **2009ம் ஆண்டு இடம்பெற்ற அகழ்வாராச்சியின் மூலம் பூசை பற்றிய விபரங்கள் எவ்வாறு வெளிக்கொணரப்பட்டன.**
- இரத்தினபுரி மாவட்டத்தின் கல்பான பிரதேசத்தில் தொல்பொருளாளர்கள் நடாத்திய அகழ்வின் போது கிடைத்த சான்றாதாரங்கள் மூலமாக வெளிக்கொணரப்பட்டன.
- தேவாலய இடிபாடுகள், பாத்திரங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ நெருப்புக் குவியலின் அடையாளங்கள்.

➢ நெருப்புக் குவியலின் அருகில் காளை மாடொன்றின் தாடையும், மட்பாண்டம் ஒன்றின் பகுதிகளும் எஞ்சியிருந்தமை.

**37. இலங்கையில் காணப்பட்ட பண்டைய அளத்தல் முறைகளைத் தருக.**

➢ நில அளவீட்டு முறை ➢ நிறை அளவீட்டு முறை

➢ கால அளவீட்டு முறை

**38. நில அளவீட்டு முறை பற்றி எழுதுக.**

➢ விவசாய நிலத்தை அளவீடு செய்வதற்காக நில அளவீட்டு முறையைப் பயன்படுத்தினர்.

➢ நில அளவீட்டில் முகத்தல் அளவு முறைகள் பயன்படுத்தப்பட்டன.

➢ கிரிய, அமுன (அவனம்), கரீசை, பேல்ல என்னும் தானியங்களின் முகத்தல் அளவைகள் பயன் படுத்தப்பட்டன.

➢ கரீசை எனும் போது ஒரு கரீசை அளவு விதை நெல்லை விதைக்கக்கூடிய பரப்பளவைக் கொண்ட வயல் நிலமாகும்.

➢ நில அளவைக்காக எமது முன்னோர் பின்வரும் கனவளவு அலகுகளைப் பயன்படுத்தினர்.

- 40 லாஹ - 01 1பேல்ல
- 12 பேல்ல - 01 குறுணி
- 44 குறுனி - 01 அமுண (அவனம்)
- 01 அமுன - 0.25 கரீசை
- 01 கரீசை - 8 ஏக்கர்

➢ நிலத்தை அளக்கப்பயன்படுத்திய மிகச்சிறிய அலகு பரமாணு எனப்பட்டது.

➢ சிறிய தூரம் வியத்த, அங்குலம் முதலிய அலகுகளினால் அமைக்கப்பட்டது. வியத்த என்பது இன்றைய 09 அங்குலங்களுக்கு சமமானது.

➢ நீண்ட தூரததை அளப்பதற்கு கவ்வ, பொதுன, உசக முதலிய அலகுகள் பயன்படுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. பண்டைய நீள அளவீட்டுப் பெருக்கல் வாய்ப்பாடு யாது?

- 36 பரமாணு – 01 அணு
- 36 அணு – 01 தஜ்ஜாரி
- 36 தஜ்ஜாரி – 01 ரத்தரேணு
- 36 ரத்தரேணு – 01 லிக்க
- 07 லிக்க – 01 உச்சக
- 07 உச்சக – 01 தன்னமாச
- 07 தன்னமாச – 01 அங்குல
- 12 அங்குல – 01 வியத்த

40. நிறையை அளவீடு செய்ய வேண்டியதன் காரணங்களைத் தருக.

- வர்த்தக நடடிக்கைகளின் போது சில பொருட்களின் நிறையைச் சரியாக அளக்க வேண்டியிருந்தமை.
- வியாபாரத்தின் போது முறைகேடான முறைகளைத் தடுக்க வேண்டியிருந்தது.
- முறையற்ற நிறுவைகள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனை வழங்க வேண்டியிருத்தல்.

41. சொர பொர வாவித்தூண் கல்வெட்டில் நிறையை அளத்தல் தொடர்பாகக் குறிக்கப்படுவது யாது?
அரசாங்கத்தினால் அனுமதிக்கப்படாத தராசு, படிக்கல் என்பனவற்றால் நிறுப்பது தடை செய்யப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

42. புராதன இலங்கையர் நிறையை அளக்கப் பயன்படுத்திய அளவை முறைகளைத் தருக.

- 4 வீஹ – 01 குஞ்சா
- 2 குஞ்சா – 01 மாசக்க
- 2.5 மாசக்க – 01 அக்க
- 8 அக்க – 01 தரண
- 05 தரண – 01 சுவர்ண
- 2 சுவர்ண – 01 பல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. இலங்கையில் பண்டைய காலம் முதலாகக் காலக் கணிப்பீட்டில் பின்பற்றி வந்த முறைகள் யாவை?

- நீண்ட காலத்தை கணிப்பிட வருடம் எனும் அளவு பயன்படுத்தப்பட்டது.
- வருடமானது சந்திரக் கணக்கை அடிப்படையாகக் கொண்ட மாத அளவை உடையது.
- அமாவாசையிலிருந்து பௌர்ணமி வரையிலான 15 நாட்களுக்கு, பௌர்ணமி தினத்திலிருந்து மறு அமாவாசை வரையிலுமுள்ள 15 நாட்களும் சேர்ந்து 30 நாட்களை மாதம் எனக் கொள்ளப் பட்டது.

44. பின்வரும் சொற் பதங்களுக்கான கால அளவுகளைத் தருக.

(i) வச அல்லது ஹவஜர

(ii) தீதிய அல்லது தத

(iii) மொஹுத்த

- வச அல்லது ஹவஜர : 12 மாதங்கள் / 1 வருடங்கள்
- தீதிய அல்லது தத : நாள் / தினம்
- மொஹுத்த : முகூர்த்தம் / சிறியளவு நேரம்

45. தெடிகம யானை விளக்கு பற்றித் தருக.

- மகாபராக்கிரமபாகுவின் பிறந்த ஊரான தெடிகமவில் பராக்கிரமபாகுவின் பிறப்பை நினைவுபடுத்துவதாக தெடிகம சூதிகர வைத்திய என்ற தூபி அமைக்கப்பட்டது.
- அத்தூபி அமைந்துள்ள இடம் 1951 இல் அகழ்வாராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டது. அச்சமயம் அத்தூபியின் தாது கர்ப்பத்தில் இருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்கலத்திலான யானை விளக்கு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

- அந்த யானை விளக்கின் மேல் மனித உருவங்கள் இரண்டு அமைந்துள்ளன.
- யானையின் தும்பிக்கையில் கரும்பு உள்ளது. விளக்கு எரிவதற்குத் தேவையான எண்ணெய் யானையின் வயிற்றில் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும.
- யானையின் பின்னங்கால் இரண்டிற்கும் இடையிலிருந்து விளக்கின் எண்ணெய் வற்றி தீபம் அணையக்கூடிய வேளையில் தன்னிச்சையாக யானையின் வயிற்றிலுள்ள எண்ணெய ஆனது விளக்கில் வடியுமாறு அமைக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 01
## கணிப்பீட்டுப் பயிற்சி
## வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்கள்

### பகுதி - I

➢. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. பின்வரும் கல்வெட்டுகளுள் கல்வெட்டு மூலாதாரம் என்ற தொகுதிக்குள் அடக்க முடியாததொன்றாக அமைவது.
(1) இருக்கைக் கல்வெட்டு (2). குன்றுக் கல்வெட்டு
(3) பாறைக் கல்வெட்டு (4). குகைக்கல்வெட்டு

02. நிரல் "A"யில் வரலாற்றைக் கூறும் தொல்பொருட்களும் நிரல் "B"யில் அதனுடன் தொடர்புடைய மன்னர்களின் பெயர்களும் உள்ளன.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. சிதுல்பவ்வ கல்வெட்டு | A. கீர்த்தி ஸ்ரீ மேவன் |
| 2. வல்லிபுர பொற்சாசனம் | B. மகா விஜயபாகு |
| 3. கல்பொத்த கல்வெட்டு | C. துட்டகைமுனு |
| 4. பணாக்கடுவ செப்பேடு | D. வசபன் |
| 5. தோணிகல கல்வெட்டு | E. நிஸங்கமல்லன் |

நிரல் A க்கு அமைவாக நிரல் B ஐ ஒழுங்குப்படுத்தினால் பெறப்படும் விடை.
(1). B,C,D,A,E (2). C,D,E,B,A
(3). C,D,E,A,B (4). D,C,E,B,A

03 குளோடியஸ் தொலமி வாழ்ந்த நகரமாக அமைவது.
(1). அலெக்சாந்திரியா (2). கிரேக்கம்
(3). பாரிஸ் (4). எதென்ஸ்

04 இலங்கை பற்றிய தகவல் கூறும் ஒரு வெளிநாட்டு இலக்கியம்.
(1) கவிசிலுமின (2). குத்தில காவியம்
(3). இராஜதரங்கினி (4). தலதாசிரித


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. மகாநாம தேரரால் எழுதப்பட்டதாகக் கருதப்படுவது.


(1). தீபவம்சம்
(2). மகாவம்ச டீ காவ
(3). மகாவம்சத்தின் 1ம் பாகம்
(4). மகாவம்சத்தின் 2ம் பாகம்

06. மிகச்சிறந்த வரலாற்று மூலாதாரமாக அமைவது.

(1). உள்நாட்டு இலக்கியங்கள்
(2). வெளிநாட்டு இலக்கியங்கள்
(3). தொல்பொருட்கள்
(4). நாட்டார் கதைகள்

07. உருவில் காட்டப்பட்டுள்ள கல்வெட்டின் பெயர் யாது?

(1). மிகிந்தலைக் கல்வெட்டு
(2). பதுளைக் கல்வெட்டு
(3). பிராமி கல்வெட்டு
(4). கல்பொத்த கல்வெட்டு



08. உருவில் காட்டப்படும் காதலர் சிலை அமைந்துள்ள விகாரை எது?



(1). அபயகிரி
(2). இசுறுமுனி
(3). தூபாராம
(4). ஜேதவனாராமய

09. றொபட் நொக்ஸ் இலங்கை வந்து இறங்கிய இடத்தையும் இலங்கையில் எவ்விடத்தினூடாக தப்பிச் சென்றார் என்பதை முறையே காட்டும் விடைத்தொகுதி.

(1). கோகர்ண - காலி
(2). அரிப்பு - ஜம்புதோனி
(3). கொட்டியாரம் - அரிப்பு
(4). அரிப்பு - காலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. இலங்கையின் புத்த சாசன வளர்ச்சி பற்றி எழுதப்பட்டுள்ள இலக்கிய மூலாதாரம்.
(1). தாதுவம்சம் (2). மகாவம்சம்
(3). நிகாய சங்கிரஹய (4). சூளவம்சம்

11. கோட்டை முதல் கண்டி வரையான காலப்பகுதியில் புகழ் காவியத்திற்கு உதாரணமாக குறிப்பிடக் கூடிய நூல்.
(1). சீதாவாக்கை சட்டன (2). மயூர சந்தேசய
(3). செலலிகினி சந்தேசய (4). பெரகும்ப சிரித

12. அநுராதபுரக் காலத்தில் எழுதப்பட்ட ஏராளமான கல்வெட்டுக்கள்.
(1). குன்றுக் கல்வெட்டு (2). தூண் கல்வெட்டு
(3). குகைக் கல்வெட்டு (4). சுவர்க் கல்வெட்டு

13. பண்டைய காலத்தில் கஹபண, தரண போன்ற சொற்களால் அழைக்கப்பட்டது.
(1). வர்த்தக நகரங்கள் (2). உலோகங்கள்
(3). ஆராமைகள் (4). நாணயங்கள்

14. இலங்கைப் பற்றிய பயணக் குறிப்புக்களை எழுதிய பாகியன் தேரர தங்கியிருந்த விகாரை.
(1). தூபாராம (2). ஜேதவன
(3). அபயகிரி விகாரை (4). மிரிசுவெட்டிய

15. மகாவம்சத்தின் சிறப்பம்சமாகக் கருதப்படுவது.
(1). மகாவிகாரைக்கு உதவி செய்த மன்னர்கள் பற்றி குறிப்பிடுவது
(2). இலங்கையின் வரலாறு தொடர்ச்சியாக எழுதப்பட்டமை.
(3). பௌத்த மதத்தினை மிகைப்படுத்தி கூறுகின்றமை.
(4). நீர்வள நாகரீக கால மன்னர்கள் காவிய நாயகர்களாகச் சிறப்பித்தமை.

16. இலங்கையின் மிகப் பெரிய கல்வெட்டான கல்பொத்த கல்வெட்டை நிர்மாணித்தவர்.
(1). நிஸங்கமல்லன் (2). 4ம் காசியப்பன்
(3). மகாசேனன் (4). துட்டகைமுனு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. பொலன்னறுவைக் காலத்தில் பயன்படுத்தப்பட்ட செப்பு நாணயம்.

(1). கம்பமஸ்ஸ (2). கஹபண

(3). சுவாஸ்திகா (4). தரண

18. எழுத்துக்களால் எழுதப்பட்ட மரத்தூண்கள் காணப்படும் இடம்.

(1). தம்பதெனியா (2). லங்காதிலக

(3). எம்பக்க (4). குருணாகல்

19. நிரல் "A" யில் நபர்களும் நிரல் "B" யில் நாடுகளும் தரப்பட்டுள்ளன.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. பாகியன் | A. ஒல்லாந்து |
| 2. இபன்பதூதா | B. சீனா |
| 3. றிபைரோ | C. பிரித்தானியா |
| 4. பிலிப்ஸ் பொல்தெவுஸ் | D. போர்த்தக்கல் |
| 5. றொபர்ட் நொக்ஸ் | E. அரேபியா |

நிரல் A ஐ நிரல் B யுடன் ஒப்பிடும் போது பெறப்படும் ஒழுங்கு முறை

(1). B,E,D,A,C (2). B,E,A,D,C

(3). B,E,C,D,A (4). D,E,C,B,A

20. இலங்கையில் சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழி எழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்கு மிகச் சிறந்த உதாரணம்.

(1). மிகிந்தலைக் கல்வெட்டு

(2). கடலாதெனியகல்வெட்டு

(3). பதுளைக்கல்வெட்டு

(4). கல்பொத்த கல்வெட்டு

21. வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் பற்றி அறிய உதவும் முக்கிய மூலாதாரம் எது?

(1). நாணயங்கள் (2). கல்லாயுதங்கள்

(3). கல்வெட்டுக்கள் (4). புராதன கட்டிடங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. முதலாம் விஜயபாகு மன்னன் சித்தரும்பி புத்த நாயக்கவுக்கு பரிசுகள் , சலுகைகள் வழங்கியமை பற்றி குறிப்பிடும் கல்வெட்டு.
(1). பணாக்கடுவ செப்பேடு
(2). சிதுல்பவ்வ கல்வெட்டு
(3). தோணிகல கல்வெட்டு
(4). பதுளைத்தூண் கல்வெட்டு

23. கம்பளை முதல் கோட்டை வரையிலான காலப் பகுதிக்குரிய அரசியல் தகவல்களை உள்ளடக்கிய நூல் எது?
(1). பூஜாவலிய (2). தாதுவம்சம்
(3). இராஜாவலிய (4). மகாவம்சம்

24. கற்பீலிகளின் அருகில் எழுதப்பட்ட கல்வெட்டுக்கள் எனப்படுவது.
(1). குகைக்கல்வெட்டு (2). சுவர்க்கல்வெட்டு
(3). தூண்கல்வெட்டு (4). பாறைக்கல்வெட்டு

25. புராதன கால பெண்களின் ஆடை, ஆபரணங்கள், கூந்தல் அலங்காரங்கள் என்பவற்றை அறிய உதவுவது.
(1). லங்காதிலக விகாரை சிற்பங்கள்
(2). சிகிரியா ஓவியங்கள்
(3). எம்பக்க தேவாலய செதுக்கல்
(4). தலதா மாளிகை ஓவியங்கள்.

26. சிதைவுகள் மூலம் அறிந்து கொள்ள முடியாதது.
(1). கட்டடத்தொழிநுட்பம் (2). நீர்ப்பாசன தொழிநுட்பம்
(3). வர்த்தகத் தொடர்புகள (4). கலாசாரங்கள்

27. "எதா ஹெலதிவ" என்ற நூலை எழுதியவர்.
(1). தர்ம புத்ரதேரர் (2). மார்க்கோபோலா
(3). றிபைரோ (4). றொபர்ட் நொக்ஸ்

28. இலங்கையின் அழகை வர்ணித்த ஜோன் டி மாறிஞொலி எந்நாட்டைச் சேர்ந்தவர்.
(1). ஒல்லாந்து (2). இத்தாலி
(3). இங்கிலாந்து (4). போர்த்துக்கல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢. கீழே தரப்படுகின்ற நூல்களை அடிப்படையாகக் கொண்டு 29-33 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.

A - ரகுவம்சம்
B - யானகி கிரன
C - சரஜோதிமாலை
D - குத்தில காவிய
E - இராஜாவலிய
F - தீபவம்சம்
G - மகாவம்சம்
H - வம்சத்தவாகினி
I - பரகும்பாசிரித
J - சீதாவாக்க சட்டன

29. மேலே வழங்கப்பட்டுள்ள நூல்களுள் போர்க் காவியமாக விளங்குவது.
(1). H (2). J (3). I (4). B

30. மேலே உள்ளவற்றில் பாளி மொழி நூல்களாக விளங்குபவை.
(1). AB (2). FG (3). DE (4). IJ

31. சிங்கள மொழி மூல இலக்கியங்களாக உள்ளவை.
(1). DE (2). AG (3). EF (4). HI

32. "G" என்ற நூலுக்கு விளக்கவுரையாக விளங்குவது.
(1). B (2). J (3). H (4). E

33. மகாசேன மன்னன் வரையிலான வரலாற்றினை அறிந்து கொள்ள உதவுகின்ற நூல்கள் அடங்கும் தொகுதி.
(1). FG (2). AB (3). DE (4). FG

34. இலங்கையில் கிடைக்கப்பெறும் பிராமிக் கல்வெட்டு எது?
(1). பெரிமியன் குகைக்கல்வெட்டு
(2). திரியாயக் கல்வெட்டு
(3). தம்புள்ள கல்வெட்டு
(4). ரிட்டிகல கல்வெட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. இராசரட்டைகால வரலாற்றினை அறிந்து கொள்ள உதவும் இலக்கிய மூலாதாரங்களின் தொகுதி.

(1). போதிவம்சம், தூபவம்சம், தாதுவம்சம், பூஜாவலிய

(2). தீபவம்சம், மகாவம்சம், அர்த்தசாஸ்திரம், மயூர சந்தேசய

(3). இராஜதரங்கினி, நிசர சந்தேசய, செலலினி சந்தேசய, டிமுண்டோ

(4). இங்கிரி சட்டன, மகாவம்சம், நிகாய சங்கிரஹய, இராஜவலிய

36. ஒரு நாட்டின் நிகழ்வுகள் அதன் இறந்த காலத்தின் மீது கட்டியெழுப்பப்படுவதாகக் குறிப்பிட்டவர்.

(1). திரிவிலியன்
(2). ஸ்டுவட்பீகொட்
(3). ஜவஹர்லால் நேரு
(4). பிராட்லி

37. நிகழ்காலத்தை விளங்கிக் கொள்வதற்கான திறவுகோலாக கடந்த காலத்தை புரிந்து கொள்ள வேண்டும் எனக் கூறியவர்.

(1). E.H.கார்
(2). அரிஸ்டோட்டில்
(3). ஹெரடோரஸ்
(4). பேர்க்ஹார்ட்

38. இலங்கையின் நீர்வள நாகரீகக் காலத்தின் சந்தை -யொன்றின் சட்டதிட்டங்கள் மற்றும் சம்பிரதாயங்கள் பற்றி குறிப்பிடுவது.

(1). மிகிந்தலைக் கல்வெட்டு

(2). சங்கபாலக் குகை கல்வெட்டு

(3). பதுளைத் தூண் கல்வெட்டு

(4). களுதியபொக்குண கல்வெட்டு

39. புராதன இலங்கையைப் பற்றி மிகவும் ஆதார பூர்வமான செய்திகளை குறிப்பிட்ட வெளிநாட்டவர்.

(1). மெகஸ்தனிஸ்
(2). பிளினி
(3). இபன்பதூதா
(4). குளோடியஸ் தொலமி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40. முதலாம் பராக்கிரமபாகுவிற்கும், இரண்டாம் கஜபாகுவிற்கு -மிடையே ஏற்பட்ட வரலாற்று ரீதியான சமாதான உடன்படிக்கை பற்றிக் குறிப்பிடுவது.

(1). சங்கமு விகாரைச் சாசனம்

(2). கல்பொத்த சாசனம்

(3). தெவனகலச் சாசனம்

(4). சிதுல்பவ்வ சாசனம்

41. புராதன காலத்தின் இலக்கிய, சமய தகவல்கள், வம்சக் கதைகள் என்பன எழுதப்பட்டிருப்பது.

(1). ஓலைகளிலான ஏட்டுச்சுவடிகளில்

(2). கற்பலகைகளில்

(3). கற்குகை நீர்வடி விளிம்புகளில்

(4). தங்க, செப்பேடுகளில்

42. தனது அநுபவத்திலிருந்து கண்டி இராச்சியம் தொடர்பான தகவல்களைக் கொண்ட நூல் ஒன்றை எழுதியவர்.

(1). பல்டியஸ் (2). றிபைரோ

(3). றொபர்ட் நொக்ஸ் (4). குவேரோஸ் அடிகளார்

43. இலங்கையின் தேசிய மரபு ரீதியான தொல்பொருட்களை எந்தக் காரணத்திற்காக பாதுகாக்க வேண்டும்.

(1). எதிர்காலச் சந்ததியினருக்குக் காட்ட வேண்டும் என்பதால்

(2). இலங்கையின் தனித்துவத்தை எடுத்துக் காட்டக் காரணமாக அமைந்துள்ளதனால்

(3). சுற்றுலாத் துறையின் முன்னேற்றத்திற்குக் காரணமாக அமைவதனால்

(4). கடந்தகால ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதால்

44. இலங்கைக்கு வருகை தராமலே கி.பி. 629ல் இந்தியாவில் இருந்து இலங்கை பற்றி தமது அறிக்கையில் குறிப்பிட்டவர்

(1). பாகியன் தேரர் (2). ஜோவாவோ றிபைரோ

(3). ஹியுங்சாங் (4). பிலிப்பஸ் பொல்தவுஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45. இலங்கையின் வர்லாற்றுக்கு முற்பட்ட காலம் பற்றிய தகவல்களைத் தேடும் ஒருவருக்கு முக்கியமான மூலாதாரம் பின்வருவனவற்றில் எது?

(1). கல்வெட்டுக்கள் (2). கிராமியக் கதைகள்
(3). குகை ஓவியங்கள் (4). கற்கருவிகள்

46. இலங்கையின் புத்தசாசன வரலாற்றைக் கற்கும்போது முக்கியமானதாய் அமையும் இலக்கிய மூலாதாரம்.

(1). இராஜவலி (2). நிக்காய சங்கிரக
(3). தர்மபிரதீபிகா (4). சத்தர்மரத்னாவலி

47. பௌத்த சமயம் இலங்கையில் பரவிய அநுராதபுரகால ஆரம்பத்தில் பரவலாகக் காணக்கூடியது

(1). தூண் கல்வெட்டுக்கள்
(2). குகைக்கல்வெட்டுக்கள்
(3). பாறைக் கல்வெட்டுக்கள்
(4). துண்டு கல்வெட்டுக்கள்

48. இலங்கையின் மிகப் பழைய வரலாற்று நூலாகக் கருதப்படுவது.

(1). மகாவம்சம் (2). தூபவம்சம்
(3). தீபவம்சம் (4). போதிவம்சம்

49 இலங்கையின் வரலாற்றை உருவாக்கம் செய்யும்போது கலவெட்டுக்கள் மிக முக்கியதுவம் பெறக் காரணம், அவை,

(1). சுருக்கமானதும் தொடர்ச்சியானதுமான வரலாற்றுத் தகவல்களை வழங்குவதனாலாகும்.
(2). நம்பகத்தன்மையுடையனவாகவும் நிகழ்வுகளின் சமகாலத்தனவாகவும் இருத்தலினாலாகும்.
(3). சமூக, பொருளாதாத் தகவல்கள் அதிகமாக உள்ளதனால் ஆகும்..
(4). பௌத்த வழிபாட்டுத் தலங்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான தகவல்கள் கிடைக்கின்றமையினாலாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்குரிய தொல்பொருள் சான்றுகள் கிடைக்கும் இடமாவது.

(1). மிகிந்தலை (2). சித்துள்பவ்வ

(3). ரிட்டிகல (4). பாகியன்கல

51. இலங்கை தொடர்பான தகவல்களை வழங்கிய வெளிநாட்டு எழுத்தாளர்கள் சிலரின் பெயர்கள் நிரல் "A" யிலும் அத்தகவல்களை உள்ளடக்கிய நூல்கள் நிரல் "B" யிலும் தரப்பட்டுள்ளன. நிரல்களை பொருத்தமாக்கும் போது சரியான விடையொழுங்காக அமைவது.

| நிரல் A | நிரல் B |
| --- | --- |
| 1. அரிஸ்டோட்டல் | A. நெச்சுராலிஸ் ஹிஸ்டோரியா |
| 2. தொலமி | B. டிமுண்டோ |
| 3. கௌடில்யர் (சாணக்கியன்) | C. அர்த்தசாஸ்திரம் |
| | D. பூகோள சாஸ்திர அறிமுகம். |

(1). A,B,D (2). A,C,D (3). B,C,D (4). B,D,C

52. கடந்தகாலத்தில் இலங்கை தொடர்பான தகவல்களை வழங்கிய யாத்திரிகர்களின் குறிப்புக்களில் கூடுதலாக அடங்கியுள்ளது.

(1). இலங்கை அயல் நாடுகளுடன் சமயத் தொடர்பு -களைப் பேணியது என்பதாகும்.

(2). பல்வேறு திறமைகளைக் கொண்ட கலைஞர்கள் இங்கு இருந்தனர் என்பதாகும்.

(3). இலங்கைக்கும் வெளிநாடுகளுக்கும் இடையில் வர்த்தகத் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன என்பதாகும்.

(4). வெளிநாடுகள் இலங்கையுடன் இராஜதந்திரத் தொடர்புகளை பேணின என்பதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53. குருவிட்ட பட்டதொம்பலன, புளத்சிங்கள, கித்துள்கல பெலிலென ஆகிய இடங்கள் இலங்கை வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் முக்கியத்துவம் பெறுவது அவை,

(1). அநுராதபுர யுகத்தில் பாதுகாப்பான இடங்களாக உபயோகப்பட்டமையாலாகும்.

(2). பிராமி எழுத்துக்களுடன் கூடிய கல்வெட்டுக்கள் கிடைத்த இடங்களாகையாலாகும்.

(3). வரலாற்றுக்கு முந்திய மனிதர்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கின்றமையாலாகும்.

(4). பண்டைய துறவி மடங்கள் பற்றிய தகவல்கள் கிடைக்கின்றமையாலாகும்.

54. "வரலாற்று ஆதாரம் என்ற வகையில் இலங்கை வரலாற்றைப் படித்துக்கொள்வதில் சாசனங்கள் மிக முக்கியத்துவம் பெறுகின்றன" மேல்வருவனவற்றுள் இக்கூற்றுடன் பொருந்தாதது எது?

(1). கல்வெட்டுக்கள் மூலம் இலங்கையின் தொடர்ச்சியான அரசியல் வரலாற்றை உருவாக்கலாம்.

(2). இலக்கிய மூலாதாரங்களிற் காணப்படும் செய்திகள் சாசனங்கள் மூலம் உறுதியாகின்றன.

(3). சாசனங்கள் குறிப்பிடும் விபரங்கள் அவை எழுதப்பட்ட காலத்திற்குரியவை

(4). இலங்கையில் வாணிபம், நீதிபரிபாலன நடவடிக்கைகள் என்பன பற்றிய செய்திகள் சாசனங்களில் காணப்படும்.

55. இலங்கை பற்றிய தகவல்களை வழங்கிய வெளிநாட்டு எழுத்தாளர்கள் சிலர் பெயர்கள் நிரல் "A" யிலும் அவர்களுடைய நாடுகள் நிரல் "B" யிலும் தரப்பட்டுள்ளன. நிரல்களை பொருத்தமாக்கும் போது சரியான விடையொழுங்காக அமைவது.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. இபன்பதூதா | A. அரேபியா |
| 2. பாகியன் தேரர் | B. இந்தியா |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கௌடில்யர் | C. பர்மா (மியன்மார்)
D. சீனா

(1). A,D,B (2). C,D,A
(3). A,C,B (4). D,A,B

56. அநுராதபுர காலத்தில் மடாலய (ஆராமை) நிர்வாகம் பற்றிய தகவல்கள் பின்வரும் எதில் இடம்பெறுகின்றன.
(1). பதுளைத் தூண்சாசனம்
(2). சிதுள்பவ்வ சாசனம்
(3). மிகிந்தலை பலகை சாசனம்
(4). கொடவாய தூண் சாசனம்

57. "இலங்கைத் தீவுடனான ஒரு வரலாற்றுத் தொடர்பு" என்ற நூலின் ஆசிரியர்,
(1) பர்னாவோ டிகுவோரோஸ்
(2) றொபர்ட் நொக்ஸ்
(3) பிலிப்பஸ் பொல்தவுஸ்
(4) மார்க்கோபோலோ

58. "இலக்கியத்தின் உரைகல்" என்னும் பெயரால் அழைக்கப்படும் தொல்பொருள் மூலாதாரமாக அமைவது.
(1) நாணயங்கள் (2) சிற்பங்கள்
(3) சித்திரங்கள் (4) கல்வெட்டுக்கள்

59. அநுராதபுர யுகத்தின் இலக்கியமாகக் கருதப்படுவது,
(1) இரசவாகினி (2) தம்பியா அட்டுவா
(3) சசதாவத (4) கவிசிலுமின

60. ஒனெசி கிரிட்டசின் இலக்கிய மூலாதாரம்,
(1) கிரேக்க மூலாதாரம்
(2) உரோம மூலாதாரம்
(3) போர்த்துக்கேய மூலாதாரம்
(4) அரேபிய மூலாதாரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அலகு 02
## கணிப்பீட்டுப் பயிற்சி
## இலங்கையின் குடியேற்றங்கள்

➢. பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

01. வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் பற்றி அறிய உதவும் முக்கிய ஆதாரம் எது?
(1). கல்வெட்டுக்கள் (2). நாணயங்கள்
(3). இலக்கியங்கள் (4). கல்லாயுதங்கள்

02. இலங்கையில் கற்காலம் பற்றிய ஆதாரங்கள் கிடைத்த இடங்களாவன.
(1). இரத்தினபுரி, கதிர்காமம்
(2). இரத்தினபுரி, மகாகம
(3). இரத்தினபுரி, இரணைமடு
(4). தம்பபன்னி, தீகவாவி

03. உருவில் உள்ள அம்சம் அகழ்தெடுக்கப்பட்ட இடம்.



(1). பொத்தான
(2). பலாங்கொட
(3). பாகியன்கல
(4). உடரஞ்சமடம்

04. ஆரியர் குடியேற்றங்களுக்கு முற்பட்ட தொல்பொருள் மூலாதாரங்களுடன் மட்டும் கட்டமைக்கப்பட்ட காலம் எவ்வாறு அழைக்கப்படும்.
(1). வரலாற்றுக் காலம்
(2). முன்வரலாற்றுக் காலம்
(3). வரலாற்றுக்கு முற்பட்டகாலம்
(4). நவீன காலம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

05. இலங்கையில் முன்வரலாற்றுக் காலம் பற்றிய தகவல்கள் எங்கிருந்து அதிகம் கிடைக்கப்பெற்றன.

(1). மயானங்களிலிருந்து

(2). குகைகளிலிருந்து

(3). கல்வெட்டுக்களிலிருந்து

(4). இலக்கியங்களிலிருந்து

06. இலங்கையில் கற்கால மனிதன் வாழ்ந்த தாழ்நில ஈரவலய குகையில் ஒன்று.

(1). புத்தல (2). பதி ராஜவெல

(3). அலிகல (4). பட்ட தொம்பலன

07. முன்வரலாற்றுக் கால தொழிநுட்பம் பற்றி தெளிவுபடுத்தக்கூடிய ஆதாரங்கள் கிடைக்கப்பெற்ற இடம் எது?

(1). கம்பளை (2). உடரஞ்சாமடம்

(3). பொலன்னறுவை (4). பூநகரி

08. தாழ்நில ஈரவலய மக்கள் உணவுக்காக அதிகம் பயன்படுத்தியது.

(1). இறைச்சி (2). தாவர உணவுகள்

(3). நத்தைகள் (4). மீன்கள்

09. கற்கால மனிதன் (முன்வரலாற்றுக் காலம்) உணவாக உட்கொண்ட மீனினம்.

(1). திமிங்கலம் (2). கெளுத்தி

(3). தித்தயா (4). வெளவால்

10. பின்வரும் வரலாற்று முக்கியம் பெறும் இடங்களுள் மிகவும் பழமையான தகவல்களைத் தருவது.

(1). சீகிரிய அலிகல (2). சீகிரிய பொத்தான

(3). உடமல்ல (4). பாகியன்கல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. வரலாற்றுக்கு முற்பட்ட (12,500 வருடங்களுக்கு முன்) மனிதன் காட்டுப்பலாவின் விதைகளை தீயில் சுட்டு சாப்பிட்டுள்ளான் என்பதற்கான ஆதாரம் கிடைத்த இடம்.
   (1). பாகின்கல குகை
   (2). தம்மன்ன
   (3). கித்துல்கல பெலிலெனகுகை
   (4). அலிகலகுகை

12. நிரல் "I" உடன் நிரல் "II" ஐ இணைக்கும் போது சரியாக அமையும் விடைத் தொகுதி.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. வட்டகீ காம | A. மீனவர் வாழ்ந்த கிராமம் |
| 2. கும்பகார காம | B. தச்சர் வாழ்ந்த கிராமம் |
| 3. கேவட்ட காம | C. விவசாயிகள் வாழ்ந்த கிராமம |
| 4. சுசீகார காம | D. குயவர் வாழ்ந்த கிராமம் |

   (1). B,D,C,A (2). B,D,A,C
   (3). A,C,B,D (4). B,A,D,C

13. மக்களால் கைவிடப்பட்ட குளக் கிராமம் எவ்வாறு அழைக்கப்படும்.
   (1). பட்டானகம (2). ஒலகம்
   (3). வாவிகம (4). நியம்கம்

14. பாகியன்கல எனும் குகை காணப்படும் இடம்.
   (1). அம்பாந்தோட்டை (2). இரத்தினபுரி
   (3). களுத்துறை (4). அம்பலாங்கொட

15. பரிகித்த கம என்பதன் கருத்து.
   (1). குளத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமம்
   (2). வர்த்தக நகரத்தை அடிப்படையாகக் கொண்ட கிராமம்
   (3). துறைமுகத்தை அண்மிய கிராமம்
   (4). வேலியிட்டு பாதுகாக்கப்பட்ட கிராமம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. ஊவா மாகாணத்தில் முன் வரலாற்றுக்கால இரு மயானங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள்.
   (1). ஹரல்துமுல்ல, பெரகல
   (2). பாகியன்கல, எல்லவல
   (3). குருவிட்டபட்ட தொம்பலன, கித்துல்கல பெலிலென
   (4). புத்தல, பாகியன்கல

17. பெல்லன் பதி பெலஸ்ஸவில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக் கூடுகளின் எண்ணிக்கை.
   (1). 15 (2). 30
   (3). 20 (4). 12

18. பிரபுக்களால் பயன்படுத்தப்பட்ட மயானம் காணப்படும் இடம்.
   (1). இப்பன்கட்டுவ (2). சித்துல்பவ்வ
   (3). பெரகல (4). ருவன்வெல்ல

19. அநுராதபுரத்தை "நுருபுரம்" என்றழைத்த சாசனம்.
   (1). மிகிந்தலைக் கல்வெட்டு
   (2). பனாகடுவ செப்பு சாசனம்
   (3). வல்லிபுர பொற்சாசனம்
   (4). களுதிய பொக்குண கல்வெட்டு

20. "புரம்" என்ற சொல் குறிப்பது.
   (1). குளக்கிராமம்
   (2). சிறிய கிராமம்
   (3). பெரிய நகரக் குடியிருப்புக்கள்
   (4). துறைமுகக் குடியிருப்புக்கள்

21. பின்வருவனவற்றுள் களி மண் ஓட மயானங்களுள் ஒன்றாக அல்லாதது எது?
   (1). பெரகல மயானம்
   (2). யட்டிகல் பொத்த
   (3). ஹல்துமுல்ல மயானம்
   (4). உடரஞ்சமட மயானம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. கல்வெட்டுக்களில் குடும்பத் தலைவன் எவ்வாறு அழைக்கப்படுகின்றான்.
    (1). கிராமிக (2). கமிக (3). குர்ஹபதி (4). பருமக

23 முன்வரலாற்றுக் கால மனித நடத்தையில் அடிப்படை மாற்றம் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்தது.
    (1). நெருப்பைக் கண்டுபிடித்தமை.
    (2). இரும்புப் பாவனையின் ஆரம்பம்
    (3). நிரந்தர குடியிருப்பு ஏற்பட்டமை.
    (4). உணவுக்காக வேட்டையாடல்

24. துளையிடப்பட்ட மண்டை ஓடு கிடைக்கப்பெற்ற இடம்
    (1). குருவிட்ட பட்ட தொம்பலன
    (2). பாகியன்கல
    (3). அலிகல குகை
    (4). இராவண எல்ல குகை

25. திஸ்ஸமகாராம குளத்தை அமைத்த மன்னன்.
    (1). மகாசேனன் (2). தாதுசேனன்
    (3). இளநாகன் (4). அபயன்

26. திஸ்ஸமகாராமவில் வலகம்பத்து எனும் கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட எச்சம்.
    (1). 20 நபர்களின் எலும்புக் கூடுகள்
    (2). துளையிடப்பட்ட மண்டை ஓடு
    (3). சிவப்பு நிறம் பூசிய எலும்புகள்
    (4). கி.பி 3ம் நூற்றாண்டைச் சேர்ந்த வீட்டின் எச்சம்

27. **கற்காலத் தொழில்நுட்பத்திற்கு தகுந்த சான்றாக விளங்குவது,**
    (1) சுத்தியல்
    (2) திரினை
    (3) கேத்திரகணித வடிவிலான கல்லாயுதம்
    (4) களிமண் தட்டுக்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 03
## கணிப்பீட்டுப் பயிற்சி
## இலங்கையின் அரசியல் அதிகார வளர்ச்சி

01. பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

வரலாற்றுக் காலத்தில் அரசனுக்கு வழங்கப்பட்ட இன்னொரு பெயராக அமைவது.

(1). பருமக (2). மபுறுமுகா (3). பதகு (4). அமெத

02. மபுள்ளை பிரதேச விகாரைக் கல்வெட்டொன்றில் அவ்விகாரைப் பிக்குகளுக்கு தானம் வழங்குவதில் ஏதும் பிரச்சினைகள் நேர்ந்தால் 10 கிராமப் பிரதானிகள் சேர்ந்து அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் எனக் கூறும் கல்வெட்டு.

(1). அம்பகமுவ கல்வெட்டு
(2). மிகிந்தலை கல்வெட்டு
(3). சொரபொர கல்வெட்டு
(4). களுதிய பொக்குண கல்வெட்டு

03. குகை ஒன்றை பிக்குகளுக்கு தானமளித்த பருமக எப்பெயரால் அழைக்கப்பட்டனர்.

(1). ரஜக (2). போஜக
(3). போசனி (4). தொட்ட போஜக

04. எல்லாள மன்னன் காலத்தில் பலநாட்டு வர்த்தகர்களும் வந்து சென்ற சர்வதேச துறைமுகமாக இருந்தது.

(1). மகாகம (2). மாதோட்டம்
(3). கோகர்ண (4). ஜம்புகோளப்பட்டினம்

05. தொட்ட போஜக எனும் பதவிப் பெயரால் குறிப்பிடப்பட்ட நபர்.

(1). கிராம நிர்வாகப் பொறுப்பாளர்
(2). கட்டடக் கலைஞர்
(3). நகரப் பொறுப்பாளர்
(4). படகுத்துறை அதிகாரி


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

06. வெவ்பிரபாதனய என்ற சொல் எதனைக் குறிக்கின்றது?
(1). கிராமம்
(2). குளத்தொகுதி
(3). கைவிடப்பட்ட குளம்
(4). சிதைவடைந்த விகாரைகளின் தொகுதி

07. முதலாம் விஜயபாகுவின் இளமைப் பெயராக அமைந்தது.
(1). காமினி (2). தீசன் (3). கீர்த்தி (4). விஜய

08. புராதன கிராமம் ஒன்றில் செல்வந்தராக விளங்கியவர்.
(1). கமிக (2). ராஜன் (3). போஜக (4). பருமக

09. இல்லத்தலைவர்கள் தொடர்பான கல்வெட்டொன்று கண்டெடுக்கப்பட்ட இடங்களில் ஒன்று.
(1). தம்புள்ள (2). கண்டமலைப் பகுதி
(3). எம்புல் அம்பேப் பகுதி (4). பெரிய புளியன் குளம்

10. வரலாற்றுக் காலத்தில் அரசனுக்கு நிர்வாகத்தில் பணிபுரிந்த அலுவலர்கள் நிரல் "A" யிலும் அவர்களின் பதவிப் பெயர்கள் நிரல் "B" யிலும் உள்ளன. நிரல்களை பொருத்தமாக்கும் போது சரியான விடையொழுங்காக அமைவது.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. யானைப் பிரிவின் தலைவன் | A. அஸஅதெக |
| 2. நகர கட்டட நிர்மாணி | B. நகரகுத்திக |
| 3. காசு அச்சிடும் பிரிவின் தலைவர் | C. ரூப அதெக |
| 4. குதிரைப் பிரிவின் தலைவர் | D. ஹதி அதெக |
| 5. நகர பரிபாலகன் | E. நகரவடிக |

(1). D,E,A,C,B (2). E,D,A,B,C
(3). D,E,C,A,B (4). A,D,C,B,E

11. முதலாம் விஜயபாகு பொலன்னறுவையைத் தலை நகரமாகத் தெரிவு செய்தமைக்கான முக்கிய காரணமாக அமைந்தது.
(1) மாதோட்ட துறைமுகத்தின் முக்கியத்துவம் அதிகரித்தமை.
(2). கிழக்கு நாடுகளை தொடர்பு கொள்ளும் வசதியுடைய கோகர்ண துறைமுகம் அருகில் அமைந்திருந்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3). பொலன்னறுவையில் அதிக விகாரைகளும், வளம் மிக்க விவசாயப் பிரதேசங்களும் அடங்கியுள்ளமையால்.
(4). பொலன்னறுவை பாதுகாப்பான பிரதேசமாக அமைந்திருந்தமையால்.

2. கிராமங்களில் வாழ்ந்த தலைவர்கள் மக்களுடன் நல்லுறவுடன் வாழ்ந்தார்கள் என்பது பற்றிய ஆதாரங்கள் கிடைக்கப்பெற்ற இடம்.
(1). இபன்கட்டுவ (2). அரிப்பு
(3). சிதுல்பவ்வ (4). மகாநாகுல

3. குளத்தொகுதியை நிர்வகித்தவனுக்கு வழங்கப்பட்ட பெயர்.
(1). குர்ஹபதி (2). கமிக (3). பருமக (4). மபுருமுகா

4. அநுராதபுரத்தை எல்லாளன் ஆட்சி செய்தபோது வடமேற்கு கரையோரத்தில் உள்ள முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச வர்த்தக துறைமுகமாக விளங்கியது.
(1). மகாதித்த (2). கோகர்ண
(3). ஊராத்தோட்டை (4). ஜம்புகோளப்பட்டினம்

5. உலர்வலய மக்கள் எதற்காக எல்லங்காவ எனும் சொல்லைப் பிரயோகித்தார்கள்.
(1). சேனைப் பயிர்ச்செய்கை முறையை குறிப்பதற்கு
(2). குளத்தொகுதியொன்றினைக் குறிப்பதற்கு
(3). குளக்கிராமமொன்றினைக் குறிப்பதற்கு
(4). சமதரைப்பிரதேசத்தை குறிப்பதற்கு

6. இலங்கையில் அதிகாரம் குவிக்கப்பட்ட (மத்தியமயப் படுத்தப்பட்ட) அரசாங்க முறைமையை வளர்த்த முக்கிய இரு அரசர்கள்.
(1). இராஜ இராஜன், எல்லாளன்
(2). துட்டகைமுனு, கவந்தீசன்
(3). 1ம் விஜயபாகு, துட்டகைமுனு
(4). தாதுசேனன், மகாசேனன்

Class No: 900
Acc.No 531

7. கிராமத்து இல்லத் தலைவர்களில் இருந்து தெரிவு செய்யப்படுபவரே "கமிக" என சமந்த பாசதிகா நூலில் குறிப்பிட்டவர்.
(1). மகாநாம தேரர் (2). புத்த புத்ர தேரர்
(3). புத்தகோச தேரர் (4). தர்ம கீர்த்தி தேரர்

Irasady Public Library
Municipal Council
Batticaloa.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

18. இலம்பகர்ண வம்சத்தை தோற்றுவித்த மன்னன்.

(1). தாதுசேனன் (2). தேவநம்பியதீசன்

(3). வலகம்பாகு (4). வசபன்

19. இலங்கை வரலாற்றில் முதன் முதலில் குளத்தை அமைத்தவன் எனப்பெயர் பெற்ற மன்னன்.

(1). தாதுசேனன் (2). வசபன்

(3). பண்டுகாபயன் (4). மகாசேனன்

20. தாதுசேசனனின் பட்டத்து இராணியின் மகனாக விளங்கியவன்.

(1). காசியப்பன் (2). முகலன்

(3). வங்க நாசிகன் (4). தப்புலன்

21. மகாவம்சத்தின் படி இலங்கையின் முதலாவது மன்னன்.

(1). பண்டுகாபயன் (2). மானவர்மன்

(3). தேவநம்பியதீசன் (4). இளநாகன்

22. நிரல் "I" இல் உள்ளவற்றை நிரல் "II" உடன் தொடர்புபடுத்தினால் வரும் சரியான விடையொழுங்கு.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. மின்னேரிய தெய்வம் | A. நிஸங்கமல்லன் |
| 2. காலிங்க சக்கரவர்த்தி பெருமாள | B. Iம் காசியப்பன் |
| 3. அலகபய மகாராஜா | C. குட்ட கண்ண அபயன் |
| 4. நரேஸ்வர (மனிதர்களின் கடவுள்) | D. மகாசேனன் |

(1). A,B,C,D (2). D,B,A,C

(3). B,A,D,C (4). D,A,B,C

23. வசப மன்னனின் யாழ்ப்பாண பிரதேச நிர்வாகம் பற்றி குறிப்பிடும் சாசனம்.

(1). பனாகடுவ செப்புசாசனம்

(2). மிகிந்தலை சுவர்க்கல்வெட்டு

(3). வல்லிபுர பொற்சாசனம்

(4). ரிஷிகிரி செப்பேடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. அநுராதபுரத்திலுள்ள ரூவான்வெலிசா ... மாபெரும பூஜை ஒன்றை நடத்திய மன்னன்.
   (1). பண்டுகாபயன் (2). 1ம் ... தயன்
   (3). பாதிகாபயன் (4). பண்டுவாசுதேவன்

25. எமது நாட்டில் பாரிய குளங்களை அமைப்பதற்கு முன்னோடியாக விளங்கிய மன்னன்.
   (1). மகாசேனன் (2). மகாபராக்கிரமபாகு
   (3). தாதுசேனன் (4). வசபன

26. தனது தந்தையான தாதுசேனனைக் கொலை செய்து ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட மன்னன்.
   (1). முகலன் (2). தாதுசேனன்
   (3). காசியப்பன் (4). அக்போ

27. பிரபுத்துவ குடும்பங்களின் ஆடம்பர வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் மாலையின் மணிகள் கண்டுபிடித்த கல்லறைகள் காணப்படும் இடமாக விளங்குவது.
   (1). பொதான (2). இப்பன்கட்டுவ
   (3). புத்தல (4). அலிகல

28. புனித வெள்ளரசு மரம் நாட்டும் வைபவத்திற்கு தேவநம்பியதீசனால் எப்பிரதேசத்தலைவர்கள் அழைக்கப் -பட்டனர்.
   (1). அநுராதபுரம், பொலன்னறுவை
   (2). கதிர்காமம், அநுராதபுரம்
   (3). மாகம, சந்தனகம
   (4). கதிர்காமம், சந்தனகாமம்

29. மாத்தளை "எம்புல் அம்போ" எனும் இடத்தில் காணப்படும் கல்வெட்டில் குறிப்பிடப்படும் விடயம்.
   (1). கிழக்குப் பிரதேச போசணி அரசன் எனும் பிராந்திய நிர்வாக அதிகாரி பற்றியது.
   (2). புராதன கிராமத் தலைவர்கள் பற்றியது.
   (3). நீரைப் பெறக்கூடிய இடங்கள்
   (4). பிக்குமார்களுக்கு கற்குகை ஒன்றைத் தானமளித்த இல்லத் தலைவன் பற்றியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. வடமேற்கு கிழக்கு பிரதேசங்களில் வாழ்ந்த ஆரியக் குழுக்களை இணைத்து ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்த மன்னன் யார்?

(1). 1ம் விஜயபாகு (2). பண்டுகாபயன்

(3). மகாபராக்கிரமபாகு (4). வசபன்

31. இலங்கையின் மன்னர்களாக வருபவர்கள் போதிசத்துவர்களே எனக் குறிப்பிடும் கல்வெட்டு.

(1). பணாகடுவ செப்பு சாசனம்

(2). ஜேதவன கற்பலகை சாசனம்

(3). தோணிகல கல்வெட்டு

(4). களுதிய பொக்குண கல்வெட்டு

32. நிரல் "A" இல் மன்னர்களின் பெயர்களும் நிரல் "B" இல் அவர்கள் சூடிக்கொண்ட சிறப்பு பெயர்களும் தரப்பட்டுள்ளன. பொருத்தமான முறையில் அவற்றைத் தொடர்பு படுத்தி பெறப்படும் விடையின் ஒழுங்கின் கீழ் கோடிடுக.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. குட்டகண்ண அபயன் தெய்வம் | A. மின்னேரி |
| 2. முதலாம் காசியப்பன் மகாராஜா (இந்திரலோகங்களின் ராஜா) | B. அலகபய |
| 3. நிஸங்கமல்லன் (மனிதர்களின் கடவுள்) | C. நரேஸ்வர |
| 4. மகாசேனன் | D. கீர்த்தி |
| | E. காலிங்க சக்கரவர்த்திப் பெருமான் |

(1). A,B,C,D,E (2). C,B,E,A

(3). C,E,B,A (4). C,A,B,E



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 04
## கணிப்பீட்டுப் பயிற்சி
## பண்டைய சமூகம்

➢. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. இலங்கையில் புராதனகாலத்தில் நீண்ட காலமாக தலைநகரமாக இருந்தது
   (1) கோட்டை (2) அநுராதபுரம்
   (3) தம்பதெனியா (4) குருணாகல்

02. "பசவந்தி நாமசால" எனக்குறிப்பிடப்படும் கட்டிடம் பண்டைய இலங்கையின்
   (1) காய்ச்சல் நோயால் பீடித்தோரை பராமரிக்க அமைக்கப்பட்டது
   (2) கர்ப்பிணித் தாய்மார்களின் தேவைக்காக அமைக்கப்பட்டது
   (3) கண்சத்திர சிகிச்சைக்காக அமைக்கப்பட்டது
   (4) பிக்குமார்களின் உடல் நல பராமரிப்பிற்காக கட்டப்பட்டது

03. தேவநகர, மாதித்த, கோகர்ண போன்ற பண்டைய இடங்கள் தொடர்பான சரியான கூற்று.
   (1) இவை பண்டைய உள்நாட்டு விவசாய வர்த்தக நிலயங்களாக இருந்தமை.
   (2) வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்ட ஓடத்துறைகளாகும்.
   (3) பண்டைய குடியிருப்புகள் அதிகம் வாழ்ந்த இடங்களாகும்.
   (4) திராவிட சமூகங்கள் வாழ்ந்துள்ளார்கள் என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ள இடங்களாகும்

04. ஹோப்பிட்டிகம தூண்கல்வெட்டு குறிப்பிடும் விடயம்
   (1) பிக்குமார்களின் தானம் தொடர்பாக
   (2) சந்தை நிர்வாகம் தொடர்பாக
   (3) நீதி மன்ற தண்டனை தொடர்பாக
   (4) அக்கால விவசாய போகம் தொடர்பாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05 1ம , 2ம் இலகக சிவன்கோயி... காணப்படுவது

(1) திருகோணமலை (2) பொலன்னறுவை

(3) கண்டி (4) கோட்டை

06. சேனைப்பயிர்ச் செய்கையின் போது அறவிட்ட வரிகளை நீக்கிய அரசன்

(1) நிஸ்ஸங்க மல்லன் (2) மகாபராக்கிரமபாகு

(3) தாதுசேனன் (4) மகாசேனன்

07 கீழே நிரல் "A" யில் மொழியும் நிரல் "B" யில் இலக்கியங்களின் பெயர்களும் வழங்கப்பட்டுள்ளன அவற்றினைத் தொடர்புபடுத்திப் பெறப்படும் விடையின் ஒழுங்கு முறையை எழுதுக.

| நிரல் "A" | நிரல் "B" |
|---|---|
| 1. பாளி | A. விசுத்திமார்க்கய |
| 2. சமஸ்கிருதம் | B. தம்பியா அட்டுவா கந்தபதய |
| 3. சிங்களம் | C. ஜானகிசரண |

(1) ABC (2) BAC (3) ACB (4) CAB

08. பின்வருவனவற்றுள் 3ம் உதய மன்னனது ஹோப்பிட்டிகமவில அரசாங்க வர்த்தக நிலையத்திற்குரிய சட்டங்கள் அடங்கும் விடைத்தொகுதி

A - அரச அதிகாரிகளால் அளவு குறிக்கப்படாத தராசுகள் கொண்டு வியாபாரம் செய்யக்கூடாது

B - வர்த்தகத்திற்காக வருகின்ற வண்டிகளிடம் வரி வசூலித்தல் வேண்டும்

C - போயாதினங்களில் விசேட பொருட்கள் மாத்திரம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும்

D - வெற்றிலை பாக்கு விற்பனைக்கு ஒதுக்கப்பட்ட இடத்திலேயே விற்பனை செய்ய வேண்டும்

(1) Aயும் Bயும் (2) Bயும் Cயும்

(3) Bயும் Dயும் (4) Aயும் Dயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. பண்டைய இலங்கையுடன் ஏனைய நாடுகள் உறவுகளை மேற்கொள்ளப் பிரதான காரணமாக அமைவது.

(1) பண்டைய இலங்கையர் ஆட்சியாளர் திறன்

(2) இலங்கை ஓர் தீவாகக் காணப்பட்டமை

(3) இயற்கை அனர்த்தங்கள் குறைவாகக் காணப்பட்டமை

(4) இலங்கையின் புவியியல் முக்கியத்துவம்

10. பண்டைய காலத்தில் இலங்கையில் விருத்தியடைந்த வெளிநாட்டு வர்த்தகம் நிலவியமைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது

(1) நாட்டின் எல்லைப் பகுதிகளிலும் குடியேற்றங்கள் பரவலடைந்தமை

(2) குடியிருப்புக்களை இணைக்கும் வகையில் பாதைகள் அமைக்கப்பட்டமை

(3) பிரதான நகரங்களில் வர்த்தக நிலையங்கள் நிறுவப்பட்டிருந்தமை

(4) முக்கிய நதிகளுக்கு அருகில் துறைமுக நகரங்கள் அமைந்திருந்தமை

11. புராதன காலத்தில் சர்வதேச வர்த்தகத்தின் மையமாக இலங்கை வளர்ச்சியடைவதற்குப் பங்களிப்புச் செய்த காரணிகளில் முக்கியத்துவம் வாய்ந்த காரணியாக அமைவது

(1) கிழக்கு - மேற்குக்கடல் வணிகப்பாதையின் மையத்தில் அமைந்திருப்பது

(2) தென்னிந்தியாவிற்கு அண்மையில் அமைந்திருப்பது

(3) நாட்டை சூழ இயற்கை துறைமுகங்கள் அமைந்திருப்பது

(4) இந்து சமுத்திரத்தில் ஒரு தீவாகக் காணப்படுவது

12. புராதனகாலத்தில் முக்கியம் பெற்ற தொழில்கள் புரிந்தோரை நிரல் "A" யிலும் அவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர் என நிரல் "B" யிலும் மாறிக் கொடுக்கப்பட்டுள்ளன அவற்றின் சரியான விடை ஒழுங்கைத் தெரிவு செய்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| நிரல் "A" | நிரல் "B" |
|---|---|
| 1. ஆசிரியர்கள் | (A) லபத் |
| 2. வழக்கறிஞர்கள் | (B) வெஜ |
| 3. வைத்தியர்கள் | (C) வொஹார |
| 4. சித்திரக் களஞர் | (D) ஆசார்ய |

(1) A, B, C, D (2) D, B, C, A
(3) D, C, B, A (4) D, B, A, C

13. சட்ட நிர்வாகத்துறை கி.பி.9ம் நூற்றாண்டில் அழைக்கப்பட்ட முறை.
(1) மஹலே (2) சபாவ (3) எக்தென்சமிய (4) சமிதி

14. புராதனகால உள்ளூராட்சி நிர்வாகம் தொடர்பாக "தசகம் எத்தன்" என்பது யாரைக் குறிப்பிடுகிறது.
(1) சுகாதார நிர்வாகப் பணிப்பாளர்கள் பத்துப் பேர் கொண்ட குழுவினை.
(2) சட்டம் தொடர்பான நிர்வாக அதிகாரிகளை
(3) பிராந்திய நிர்வாகத்திற்காக பத்து கிராமத்துப் பிரதி நிதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சபையினரை
(4) மன்னருக்கு நிர்வாகத்தில் துணைப் புரியும் பத்துபேர் கொண்ட சபையினரை.

15. இலங்கையில் முதலாவதாக வைத்தியசாலை அமைத்ததாக மகாவம்சத்தில் கூறப்படுகின்ற மன்னன்.
(1) பண்டுகாபயன் (2) புத்ததாசன்
(3) முதலாம் உபதிஸ்ஸன் (4) நான்காம் காசியப்பன்

16. நான்காம் காசியப்ப மன்னன் காய்ச்சலால் பீடிக்கப் -பட்டவருக்கு வைத்தியசாலையை அநுராதபுரத்திலும், பொலன்னறுவையிலும் நிறுவினான். அது அழைக்கப்பட்ட முறை.
(1) சொத்திசால (2) உபசக்க ரோகநாச
(3) சங்கிரஹய (4) திம்பிரிகே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. பின்வரும் கூற்றுக்களுக்கிணங்க மன்னர்களின் வெளிநாட்டுத் தொடர்புகளைக் கருதுக.

A. இலம்பகர்ண மன்னன் முதலாம் கஜபாகு பத்தினி தெய்வ விழாவுக்கு சேரன் செங்குட்டுவனுடன் தொடர்பு கொண்டமை.

B. கனிஸ்டதிஸ்ஸ மன்னன் ருவான்வெலிசாவுக்கு கண்ணாடி மணிகளைப் பெற உரோமுக்கு தனது தூதுவர்களை அனுப்பினான்.

C. ஆறாம் அக்கபோதி மன்னன் சீன உறவுகளைப் பலப்படுத்தினான்.

இக்கூற்றுக்களில் சரியான கூற்றுக்களாக அமைவன.

(1) A மட்டும் (2) Aயும் Bயும்
(3) A,B,C யாவும் (4) Aயும் Cயும்

18. பின்வரும் வெளிநாட்டுடனான திருமணத் தொடர்புகளில் தவறானக் கூற்று/கூற்றுக்கள் எது?

(1) முதலாம் விஜயபாகு மன்னன் கலிங்க இளவரசி திரிலோக சுந்தரியை திருமணம் செய்தான்.

(2) நிஸங்கமல்லன் பாண்டிய இளவரசி கல்யாணவதியைத திருமணம் செய்தான்.

(3) முதலாம் பராக்கிரமபாகு லீலாவதியைத் திருமணம் செய்துக்கொண்டான்.

(4) முதலாம் விஜயபாகுவின் சகோதரி மித்தா சோழநாட்டு இளவரசனைத் திருமணம் செய்தான்.

19. பின்வரும் கூற்றுக்களில் ஒன்று தவறானது. இனம் காண்க.

(1) புத்சரண இலக்கிய நூலில் சேனைப்பயிர்ச்செய்கை "செஹேன்" என்றழைக்கப்பட்டது.

(2) சிங்கள உம்மகக் ஜாதகத்தில் சேனைப் பயிர்ச்செய்கை "சேன" எனக்குறிப்பிடப்பட்டிருந்தது.

(3) சேனையை வனவிலங்குகளிடமிருந்து பாதுகாக்க தற்காலிகமாகக் கட்டப்பட்ட வேலி "தண்டுவெட்ட" எனக் குறிப்பிடப்பட்டது.

(4) சேனைப் பயிர்ச்செய்கைக்காக அறவிடப்பட்ட வரிகள் "கெத்" எனக் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. நான்காம் காசியப்பனின் கல்வெட்டில் குறிக்கப்பட்டிருப்பது.

(1) பால்பெற்றுக் கொள்ள வளர்க்கும் பசுக்கள் "கிரிகெரி" என்று குறிப்பிடப்பட்டது.

(2) மரணித்த ஆடுகளினதும், கோழிகளினதும் மாமிசம் மட்டுமே வைத்தியசாலையிலுள்ள நோயாளிகளின் தேவைகளுக்குப் பயன்படுத்த வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

(3) காட்டிலுள்ள மரங்களை வெட்டக் கூடாது.

(4) குகை ஒன்றினைத் தானமளிக்க சபாவின் பிரதிநிதிகள் சென்றனர்.

21. தவறானக் கூற்றினைத் தெரிவு செய்க.

(1) தந்தச் செதுக்கல் தொழிலில் ஈடுபடுவோர் "தடிக" என அழைக்கப்பட்டனர்.

(2) நூல் நூற்பவர்கள் அம்பாந்தோட்டை வெஹெரக கல்வெட்டில் "ததவய" என அழைக்கப்பட்டனர்.

(3) செங்கல் ஓட்டுக் கைத்தொழிலில் ஈடுபட்டவர்கள் "ஒலுவடு" என அழைக்கப்பட்டனர்.

(4) மந்தை வளர்ப்பவர்கள் "கெடுகனக" எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

22. நிரல் "A" இல் கைத்தொழில்களும் நிரல் "B" இல் அத்தொழில்புரிவோர் அழைக்கப்பட்ட முறையும் வழங்கப்பட்டுள்ளன. தொடர்புபடுத்தி பெறப்படும் சரியான தொடர்புகளின் ஒழுங்குமுறையின் கீழ் கோடிடுக.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. இரும்புக் கைத்தொழில் | A. கபர |
| 2. செம்புக் கைத்தொழில் | B. கும்பகார |
| 3. தங்கக் கைத்தொழில் | C. தம்பகர |
| 4. மாணிக்கக் கைத்தொழில் | D. துலாதர |
| 5. மட்பாண்டத்தொழில் | E. மணிகர |

(1). A,C,D,B,E (2). A,D,C,E,B

(3). A,C,D,E,B (4). A,E,D,C,B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. தீபவம்சத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது.
   (1) உபதிஸகமவில் "அந்தராப்பண" என்ற பெயரில் சந்தை இருந்தது பற்றி.
   (2) சிறிய வர்த்தக நகரங்கள் "நிகம" அல்லது "நியம்கம" எனும் பெயர்களால் குறிப்பிப்பட்டது பற்றி.
   (3) அநுராதபுர நகரின் தெற்கு வாயிலில் "காலகமண" என்ற பெயரில் வர்த்தக சந்தை காணப்பட்டது பற்றி.
   (4) "சுபலவபல" என்ற புளி வியாபாரியைப் பற்றி.

24. காலியில் கண்டெடுக்கப்பட்ட மும்மொழிக் கல்வெட்டு தெரியப்படுத்துவது.
   (1) நானாதேசிகா, வலஞ்சியர், ஐந்நூற்றுவர் போன்ற வர்த்தக நிறுவனங்கள் காணப்பட்டமை பற்றி.
   (2) காம்போஜகர்களின் வர்த்தக அமைப்பு காணப்பட்டமை பற்றி வெளிப்படுத்துகிறது.
   (3) சீன வர்த்தகச் செல்வாக்கினை எடுத்துக்காட்டுகிறது.
   (4) அரேபிய, பாரசீகம் தொடர்பான வெளிநாட்டு வர்த்தகம் பற்றியது.

25. வங்காளத்தில் தாமிரலிப்தியுடன் வர்த்தகத் தொடர்பினை மேற்கொண்ட துறைமுகம்.
   (1) மகாதித்த (2) ஊராத்தோட்ட
   (3) ஜம்புகோளப்பட்டினம் (4) கோகர்ண

26. "பதி விஹகரிய" எனக் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுவோர.
   (1) ஆராமைகளிலுள்ள தலைமைப் பிக்குக்கள் ஆவர்.
   (2) பௌத்த போதனைகளை மனனம் செய்த பிக்குகள்.
   (3) தலைமைப் பிக்குகளை அண்டி வாழும் மாணவர்கள்.
   (4) வைதுல்ய பௌத்த வாதத்திற்கு அமைய ஒழுகும் பிக்குகள்.

27. "சொத்திசால" எனப்படுவது,
   (1) பிராமணர்கள் வழிபாடுகளை மேற்கொள்ள அமைக்கப் -பட்ட இடம்.
   (2) பிராமணர்கள் வாழும் இல்லம்.
   (3) சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்ட இடம்.
   (4) சிவலிங்கக் கோயில்களின் இடுபாடுகள் உள்ள இடம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. "அஜாயிப் அல்ஹிந்த்" என்ற நூலில் முகம்மது நபி காலத்தில் செரண்டிப்பிலிருந்து "இலங்கையிலிருந்து" ஒரு குழுவினர் அவரது சமயத்தைப் பற்றி அறிய வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூலின் ஆசிரியர்கள்.

(1) இபன்பதூதா (2) அல்மகதசி

(3) இபன் சப்ஹிரியர் (4) பாகியன்

29. "குருமஹநத்தமன்" என்ற இடத்தில் உள்ள கல்வெட்டில் குறிப்பிட்டப்படி கெலேகம என்ற இடத்தை மஹிந்தராம எனும் பிக்குணிகளின் ஆராமைக்கு அன்பளிப்பு செய்ய மெனின் கழுவே உதய, நிகாவெல்வே சேன ஆகிய அதிகாரிகள் பிரதிநிதித்துவம் செய்தது.

(1) சபாவைப் பிரதிநிதித்துவப்படும் பிரதிநிதிகளின் வருகையையும், சட்ட ரீதியான செயற்பாட்டையும் காட்டுகிறது.

(2) பருமர்களின் செல்வாக்கினாலும், அவர்களின் அனுமதி பெறுவதையும் காட்டுகிறது.

(3) அரசுக்குச் சொந்தமான நிலத்தை இன்னொருவருக்கு உரித்தாகும் போது நீதிமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் உத்தியோகத்தர் வருகை அவசியமானது.

(4) விடை (1)ம் (2)ம் சரியானது.

30. கி.பி. 9ம் நூற்றாண்டுக் கல்வெட்டில் உள்ள சூரியன், சந்திரன் எடுத்துக் கூறுவது.

(1) அரசின் செங்கோலையும், கொடியையும்

(2) அரசின் கொடுப்பனவின் தூய்மையை

(3) அரசின் நிலையான தன்மையினை

(4) அடுத்த பிறவியில் எடுக்கும் பிறப்புக்கள்.

31. ஹேமமாலா இளவரசியாலும், நந்த இளவரசனாலும் தந்ததாது கொண்டுவரப்பட்ட துறைமுகம்.

(1) ஜம்புகோளப்பட்டினம் (2) லங்காபட்டினம்

(3) மகாதித்த (4) மகாகம


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

32. கல்வெட்டுக்களில் கூறப்பட்ட பின்வருவனவற்றுள் தவறான தொடர்பு எது?

(1) யானையைப் பழக்கும் ஆசிரியர்கள் - ஹஸ்தி ஆசாரிய
(2) குதிரை ஓட்டத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் - அஸ்வ ஆசாரிய
(3) அம்பு எய்யும் கலையைக் கற்பிப்போர் - தனு ஆசார்ய
(4) ஆடல் கலையைக் கற்பிப்போர் - பரத ஆசார்ய

33. "பாணக" எனக் குறிப்பிடப்படுவது.

(1) பௌத்த போதனைகளை மனனம் செய்த பிக்குகள்
(2) ஆராமையில் தங்கியிருந்த மாணவப் பிக்குகள்
(3) ஆராமையின் தேரர்களை
(4) அனைத்தும் சரியானவை

34. நெஸ்டோரியர்கள் பின்பற்றிய மதம்.

(1) பௌத்தம் (2) கத்தோலிக்கம்
(3) இஸ்லாம் (4) புரட்டஸ்தாந்து

35. "சரணார்த்த சங்கிரஹய" என்னும் வைத்திய நூலை எழுதிய மன்னன்.

(1) புத்ததாஸ (2) ஐந்தாம் மகிந்தன்
(3) நான்காம் காசியப்பன் (4) முதலாம் உபதிஸ்ஸன்

36. "எக்தன் சமிய" எனக் குறிப்பிடப்படும் நிறுவனம்,

(1) சபாவ
(2) சட்டங்களை வகுப்பதும், நிறைவேற்றுவதுமான சபை
(3) நீதி மன்றம்
(4) தேவாலயப்பராமரிப்பு

37. தென்னிந்திய கூலிப்படைகளின் உதவியை முதன்முதலாகப் பெற்றுக் கொண்ட மன்னர்,

(1) இளநாக - அபய நாக
(2) 5ம் முகலன்
(3) 2ம் இளநாக - உதய
(4) அபய நாக - நிஸங்கமல்லன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலகு 05
## கணிப்பீட்டுப் பயிற்சி
## இலங்கையின்
## புராதன விஞ்ஞானமும் தொழிநுட்பமும்

➤ மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01. இலங்கையில் முதன் முதலாகப் பாரிய அளவிலான குளங்கள் அமைக்கும் பணி எம்மன்னன் ஆட்சிக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது.
(1) பண்டுகாபயன் (2) வசபன்
(3) மகாசேனன் (4) தாதுசேனன்

02. பண்டைய காலத்தில் இரும்பைப் பிரித்தெடுப்பதற்கு இயற்கையாக வீசும் காற்றினைப் பயன்படுத்தும் தொழில்நுட்பம் காணப்பட்டமைக்கு ஆதாரமாக விளங்கும் இரும்புச்சூளை கண்டுபிடிக்கப்பட்ட இடம்.
(1) சமனலவெவ (2) பெரகல
(3) தெவஹிகஹ (4) அலிகல

03. பண்டையகால நீர்ப்பாசனத் தொழிநுட்பவியலாளர்கள் அமுக்கத்தின் காரணமாக குளக்கட்டுக்கு ஏற்படும் ஆபத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும் நீரைப் பிரதான கால்வாய்க்கு திறந்து விடுவதற்காகவும் அமைத்தது.
(1) அலைதாங்கி (2) மடைக்கதவு
(3) கலிங்கல் தொட்டி (4) வெளி வான் கதவு

04. பண்டையகாலத்தில் கவ்வ, யொதுன, உசக முதலிய அலகுகள் மூலம் அறியப்பட்டது.
(1) நேரத்தை அளப்பதற்கான அலகு
(2) நீண்ட தூரத்தை அளப்பதற்கான அலகு
(3) நிறையை அளப்பதற்கான அலகு
(4) குறுகிய காலத்தை அளப்பதற்கான அலகு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. பண்டைய காலத்தில் நிலத்தை அளப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட அலகு.

(1) கவ்வ, உசக (2) கிரிய, வீஹ

(3) குறுணி, பேல்ல (4) அணு, அங்குல

06. எமது பண்டைய தொழினுட்பவியலாளர்கள் கால்வாயின் மேலதிக நீரை வெளியேற்ற அமைக்கப்பட்ட குளக்கூறு.

(1) உள்வான் கதவு (2) ஈரக்கலிங்கல்

(3) கலிங்கல் (4) வான் கதவு

07. பண்டைய காலத்தில் நீளத்தை அளப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட அலகானது.

(1) பரமாணு (2) குஞ்சா (3) சுவர்ண (4) குறுக்கி

08. ஒரு குளத்தின் மிகையான நீரை வெளியேற்றும் நீர்ப்பாசன உறுப்பு பின்வருவனவற்றுள் யாது?

(1) வான் கதவு (2) மடைக்கதவு

(3) உயர்கலிங்கல் (4) ஈரக்கலிங்கல்

09. புராதன சேனைப்பயிர்ச்செய்கையின் கீழ் "தானியங்கள் செழித்துவளரும் சேனை நிலத்தை" கீழ்தரப்பட்டுள்ள எப்பெயரால் குறிப்பிடப்படுகிறது.

(1) கனத்த (2) நவதெனி

(3) தண்டு செட்ட (4) நவதெனிசேன

10. புராதன நீர்ப்பாசன வல்லுனர்கள் கலா ஓயாவுக்கு குறுக்கே அணையிட்டுக் கட்டிய குளம்.

(1) கலாவாவி (2) மகா விலாக்கிய வாவி

(3) குருளு வாவி (4) நாச்சத்துவ வாவி

11. பண்டையகால வைத்தியத்துறையின் தொழினுட்பத்திற்கு சிறந்த சான்றாக அமைவது.

(1) மருத்துவ ஓடம்

(2) உலோகக் கத்தரிக்கோல்

(3) வெண்கல விளக்கு

(4) இரும்புச்குளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பண்டைய காலத்தில் நீளத்தை அளவிடப் பயன்படுத்தப்பட்ட மிகச்சிறிய அலகு பின்வருவனவற்றுள் யாது?
(1) கவ்வ (2) அமுண (3) பரமாணு (4) தரண

13. புராதன கல்வெட்டுக்களில் "ரஜ மொஹால்" என அழைக்கப்படுவது.
(1) மடைக்கதவு (2) கலிங்கல் தொட்டி
(3) அணைக்கட்டு (4) அலைதாங்கி

14. நிரல் "A" இல் உள்ளவற்றை நிரல் "B" இல் உள்ளவற்றுடன் தொடர்புபடுத்திப் பெறப்படும் சரியான விடை ஒழுங்கின் மீது கோடிடுக.

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1. அம்பன் கங்கையிலிருந்து மின்னேரியா, கந்தளாய்க்குளம் கபர கவுடுலு ஆகிய குளங்கள் அமைக்கப்பட்ட கால்வாய் | A. ஆகாய கங்கை கால்வாய் |
| 2. கலா வாவியிலிருந்து திஸா வாவிக்கு அமைக்கப்பட்ட கால்வாய் | B. ஜயகங்கை கால்வாய / ஜோத கால்வாய் |
| 3. மகாவலியிலிருந்து மகாவலியின் இடது கைப்பிரதேசத்திற்கு அமைந்த கால்வாய் | C. எலகரக் கால்வாய் |
| 4. அம்பன் கங்கையிலிருந்து பராக்கிரம சமுத்திரத்திற்கு அமைத்த கால்வாய் | D. மினிப்பே கங்கை |

(1) C,B,D,A (2) B,C,D,A
(3) A,D,B,C (4) B,C,A,D

15. குளத்தில் சேரும் மேலதிக நீரை வெளியேற்ற உதவுவது.
(1) சுருங்கை (2) கலிங்கல்
(3) அலைதாங்கி (4) மடைக்கதவு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. பண்டைக்கால நீர்ப்பாசனத் தொழிநுட்பவியலாளர்கள் அழுக்கத்தின் காரணமாக குளக்கட்டுக்கு ஏற்படும் ஆபத்தைக் கட்டுப்படுத்துவதற்காகவும், நீரைப் பிரதான கால்வாய்க்கு திறந்து விடுவதற்காகவும் அமைத்த குளக்கூறு.
(1) அலைதாங்கி (2) வான்கதவு
(3) மடைக்கதவு (4) கலிங்கல் தொட்டி

17. பண்டைக் காலத்தில் ''கலந்த'' என்பதன் மூலம் அறியப்பட்டது.
(1) தூரத்தை அளப்பதற்கான அலகு
(2) நேரத்தை அளப்பதற்கான அலகு
(3) நீரை அளப்பதற்கான அலகு
(4) நிறையை அளப்பதற்கான அலகு

18. மகாவலி கங்கையை மறித்துக் கட்டப்பட்ட அணை.
(1) மினிப்பே (2) அங்கமடில்ல
(3) ரிதிபெந்தி (4) ஆகாய கங்கை

19. சமவுயரக் கோட்டுக்கு இசைவாக கட்டப்பட்ட வாவி.
(1) இராட்சத குளம் (2) மின்னேரியா வாவி
(3) பராக்கிரம சமுத்திரம் (4) கந்தளாய் குளம்

20. குளத்தின் வான்கதவினால் ஆற்றப்படும் பணி.
(1) குளக்கட்டை நீரரிப்பிலிருந்து பாதுகாத்தல்
(2) குளத்துக்குள் சேரும் அடையல் உக்கல்களைத் தடுத்தல்
(3) குளத்தின் மேலதிக நீரை வெளியேற்றல்
(4) குளத்தின் நீரை கால்வாய்க்கு விடுத்தல்

21. இலங்கையில் அமைக்கப்பட்ட மிகப்பெரிய தூபி
(1) ஜேத்தவனராமய (2) அபயகிரி
(3) மிரிசுவெட்டிய (4) ருவான்வெலிசாய

22. களிமண் ஓடக்கல்லறையின் அதிமிகு விஞ்ஞானத் தொழிநுட்பம் என நீர் கருதுவது.
(1) சிறந்த களிமண்ணைத் தெரிவு செய்தல்
(2) கல்லறைச் சுவரின் உயரத்தைக் குறைத்தல்
(3) சுவரை நிலத்திற்கு செங்கோணமாய் அளத்தல்
(4) வளியோட்டம் வழங்குவதற்காக களிமண் குழாய் பொருத்தப்பட்டிருத்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. கி.மு. 1129ம் ஈண்டளவில் தொழினுட்பங்களுடன் கூடிய வீடு அமைக்கப்பட்டதற்கான சான்று கண்டுபிடிக்கப்பட்ட இடம்.

(1) பெல்லன் பதி பெலஸ்ஸ (2) உடரஞ்சாமடம்

(3) கித்துள்கல பெலிலென (4) வெல்லவாய

24. தண்ணீரைத் திறந்து விடுவதற்காக மடைக்கதவில் அமைக்கப்பட்ட "தண்ணீர் விளக்கு" எனும் பதத்தால் குறிப்பிடப்பட்ட கற்றூண் நான்கு முழம் உயரமானது எனக்குறிப்பிடும் கல்வெட்டு.

(1) தோணிகல கல்வெட்டு

(2) வெஸ்ஸகிரி கல்வெட்டு

(3) புளியன் குளக்கல்வெட்டு

(4) மிகிந்தலைக் கல்வெட்டு

25. கி.மு.2ம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டில் கால்வாயினை அமைப்பதில் ஈடுபட்ட ஒருவரை எவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

(1) தடிக (2) சுமண (3) அடிக (4) கால

26. குட்டம் பொய்கை, யானைக் பொய்கை, தாமரைப் பொய்கை போன்ற நிர்மாணங்கள் அமைக்கப்பட்டதன் பிரதான நோக்கம்.

(1) மக்களின் நீர்த்தேவையை நிறைவேற்றுவதற்காக

(2) சுற்றாடலின் குளிர்ச்சிக்காக

(3) பிக்குகளின் பயன்பாட்டிற்காக

(4) அரசர்கள் நீர் விளையாட்டில் ஈடுபடுவதற்காக

27. உலர்வலயப் பிரதேசங்களில் பெரிய மட்பாண்டங்களைப் புதைத்து வெட்டப்பட்ட குடிநீர்க் கிணறுகளை அமைப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பதம்.

(1) பொக்குண (2) ஊராகொட

(3) பிஸோ கொட்டுவ (4) ரஜமொஹால்

28. "வஜ்ரகும்பட்ட" எனும் பதம் குறிப்பது.

(1) இடிதாங்கி

(2) கலிங்கல் தொட்டி

(3) வீட்டின் உறுதியான அத்திவாரம்

(4) தாபிகள் அமைப்பதற்கு உருவாக்கிய கலவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29. "நவநீதம்" எனும் களிமண் பயன்படுத்தியதாக அறியப்பட்ட தூபி.

(1) ஜேத்தவனராமய (2) மிரிசுவெட்டி

(3) ருவன்வெலிசாய (4) அபயகிரி விகாரை

30. கி.மு. 180 - கி.பி. 200 வரையில் ஊதுலை மூலமாக வெளியினைப் பெற்று இரும்புச் சூளை எரிய விடப்பட்டதற்கான ஆதாரம் கிடைக்கப்பெற்ற இடம்.

(1) உடரஞ்சாமடம் (2) சமனலவெவ

(3) தெஹிகஹ அலகந்த (4) சிகிரியா

31. ஒரு நெல்மணி அளவிலான தங்க நகையில் 21 பூக்களைக் கொண்ட ஆபரணம் எவ் அகழ்வின் போது கிடைக்கப்பெற்றது?

(1) ருவான்வெலிசாய (2) அபயகிரி

(3) ஜேத்தவனராமய (4) சிகிரியா

32. இன்று இரண்டு ஏக்கருக்குச் சமனான அன்றைய கால அளவீடு.

(1) ஒரு அவமை (2) ஒரு குறுணி

(3) ஒரு கரிசை (4) ஒரு பேல்ல

33. திஸ்ஸ எனும் விகாரைக்கு எட்டுக் கரீசை வழங்கப் - பட்டதாகக் குறிப்பிடும் கல்வெட்டு.

(1) ஹொரிவெவ கல்வெட்டு (குட்டகண்ண அபயன்)

(2) கல்பொத்த கல்வெட்டு (நிஸங்கமல்லன்)

(3) மிகிந்தலைக் கல்வெட்டு (மகிந்தன்)

(4) ஹோபிட்டிகம கல்வெடடு (4ம் உதயன்)

34. பன்னிரண்டு மாதங்களைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட சொல.

(1) வச (2) ஹுவஜர (3) தத (4) திதிய

35. மகாபராக்கிரமபாகு மன்னன் பிறப்பை நினைவு கூறும் முகமாக புங்காகமவில் (தெடிகம) உள்ள "தெடிகம சூத்திர சைத்திய" எனும் விகாரையின் அகழ்வில் கண்டெடுக்கப்பட்டது.

(1) தங்கமாலை

(2) யானை விளக்கு

(3) அவலோக புத்தர் சிலை

(4) நிறந்தீட்டப்பட்ட மட்பாத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. "மங்கர" என்னும் உள்நாட்டுத் தெய்வத்தை முன்னிலைப்படுத்தி மாடுகளின் பாதுகாப்புக்காகவும், விவசாய நடவடிக்கையின் வெற்றிக்காகவும் மேற்கொள்ளப்பட்ட சாந்தி பூசை.

(1) பால்மடு யாகம் (2) பயிர்மடு யாகம்

(3) மகா யாகம் (4) அசுவமேத யாகம்

37. அநுராதபுர மன்னர்களான புத்ததாச, 5ம் மகிந்தன், 4ம் காசியப்பன் ஆகியோர் எத்துறையில் சேவையாற்றியதால் சிறப்புப் பெறுகிறார்கள்.

(1) விவசாயம் (2) வைத்தியம்

(3) சமயம் (4) இலக்கியம்

38. வைத்தியசாலையும், வைத்திய உபகரணங்களும் அகழ்ந்தெடுக்கப்பட்ட இடம்.

(1) அநுராதபுரம் ருவன்வெலிசாய

(2) மிகிந்தலை கண்டக சைத்தியம்

(3) பொலன்னறுவை ஆலாஹனப் பிரிவெனா

(4) இரத்தினபுரி உடரஞ்சமடம்

39. கி.மு. 2400 வருடங்களுக்கு முன்னர் இரும்பு உருக்கும் தொழில் தொழில்நுட்பத்தைப் பண்டைய இலங்கையர் அறிந்திருந்தனர் என்பதற்கு ஆதாரம் காணப்பட்ட இடம்,

(1) பெரகல (2) தோணிகல

(3) ஆலாஹனப்பிரிவெனா (4) இப்பன்கட்டுவ

40. அமுக்கப் பிரயோகம் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பம்,

(1) வனைதல் சில்லைக் கொண்டு களிமண்ணைப் பதப்படுத்தல்

(2) கற்பாறைகளிலிருந்து கற்பாளங்களைப் பிரித்தெடுத்தல்.

(3) சுவரை நிலத்திற்கு செங்கோணமாக அமைத்தல்.

(4) கல்லறையில் எலும்புக்கூட்டை எரிப்பதற்கு ஒட்சிசனைப் பெறுவதற்காக களிமண் குழாய் பொருத்தல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணிப்பீட்டுப் பயிற்சிகளுக்கான விடைகள்.

## அலகு 01

### வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. 3 | 02. 2 | 03. 1 | 04. 3 |
| 05. 3 | 06. 3 | 07. 4 | 08. 2 |
| 09. 3 | 10. 3 | 11. 4 | 12. 3 |
| 13. 4 | 14. 3 | 15. 2 | 16. 1 |
| 17. 1 | 18. 3 | 19. 1 | 20. 2 |
| 21. 2 | 22. 1 | 23. 3 | 24. 1 |
| 25. 2 | 26. 3 | 27. 4 | 28. 2 |
| 29. 2 | 30. 2 | 31. 1 | 32. 3 |
| 33. 1 | 34. 1 | 35. 1 | 36. 3 |
| 37. 1 | 38. 3 | 39. 4 | 40. 1 |
| 41. 1 | 42. 3 | 43. 2 | 44. 3 |
| 45. 4 | 46. 2 | 47. 2 | 48. 2 |
| 49. 3 | 50. 4 | 51. 4 | 52. 3 |
| 53. 2 | 54. 1 | 55. 1 | 56. 3 |
| 57. 2 | 58. 4 | 59. 2 | 60. 1 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 02
## இலங்கையின் குடியேற்றங்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 4 | 02. | 3 | 03. | 4 | 04. | 3 |
| 05. | 2 | 06. | 4 | 07. | 2 | 08. | 3 |
| 09. | 3 | 10. | 4 | 11. | 3 | 12. | 2 |
| 13. | 2 | 14. | 3 | 15. | 4 | 16. | 1 |
| 17. | 2 | 18. | 1 | 19. | 2 | 20. | 3 |
| 21. | 2 | 22. | 3 | 23. | 2 | 24. | 4 |
| 25. | 3 | 26. | 4 | 27. | 3 | | |

## அலகு 03
## இலங்கையின் அரசியல் அதிகார வளர்ச்சி

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 02. | 4 | 03. | 4 | 04. | 2 |
| 05. | 4 | 06. | 2 | 07. | 3 | 08. | 1 |
| 09. | 4 | 10. | 3 | 11. | 2 | 12. | 3 |
| 13. | 3 | 14. | 1 | 15. | 2 | 16. | 3 |
| 17. | 3 | 18. | 4 | 19. | 3 | 20. | 2 |
| 21. | 1 | 22. | 4 | 23. | 3 | 24. | 3 |
| 25. | 4 | 26. | 3 | 27. | 2 | 28. | 4 |
| 29. | 1 | 30. | 2 | 31. | 2 | 32. | 2 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 04
## பண்டைய சமூகம்

| | | | |
|---|---|---|---|
| 01. 2 | 02. 2 | 03. 2 | 04. 2 |
| 05. 2 | 06. 1 | 07. 3 | 08. 4 |
| 09. 4 | 10. 3 | 11. 1 | 12. 3 |
| 13. 3 | 14. 3 | 15. 1 | 16. 2 |
| 17. 3 | 18. 4 | 19. 4 | 20. 1 |
| 21. 4 | 22. 3 | 23. 1 | 24. 3 |
| 25. 3 | 26. 3 | 27. 1 | 28. 3 |
| 29. 4 | 30. 3 | 31. 2 | 32. 4 |
| 33. 1 | 34. 2 | 35. 1 | 36. 2 |
| 37. 1 | | | |

## அலகு 05
## இலங்கையின்
## புராதன விஞ்ஞானமும் தொழிநுட்பமும்

| | | | |
|---|---|---|---|
| 01. 2 | 02. 1 | 03. 3 | 04. 2 |
| 05. 3 | 06. 4 | 07. 1 | 08. 1 |
| 09. 4 | 10. 1 | 11. 1 | 12. 3 |
| 13. 1 | 14. 1 | 15. 1 | 16. 4 |
| 17. 4 | 18. 2 | 19. 3 | 20. 4 |
| 21. 1 | 22. 4 | 23. 2 | 24. 2 |
| 25. 3 | 26. 3 | 27. 2 | 28. 1 |
| 29. 3 | 30. 3 | 31. 3 | 32. 1 |
| 33. 1 | 34. 1/2 | 35. 2 | 36. 1 |
| 37 2 | 38. 3 | 39. 1 | 40. 3 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று விளக்கப்படங்களும் குறிப்புக்களும்.

காவற்கல்



- இவை பொலன்னறுவை, அநுராதபுரம், கம்பளை ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.
- விகாரைகளுக்கு ஏறிச் செல்லும் பாதையில் வெளிப்புறமாக இருபக்கமும் இச்சிலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- இக்காவற்கல் முருகல் எனவும் அழைக்கபபடுகின்றது.

- காவற்கல் பிரதானமாக நான்கு வகைப்படும். அவை,
    1. செதுக்கல்கள் வெளிப்படுத்துபவை.
    2. புன்கலத்துடன் கூடியவை.
    3. தாமரை உருவங்களுடன் கூடியவை.
    4. மனித உருவங்களுடன், பாம்பின் அமைப்பு காணப்படுவன. புராதன கால மன்னர்கள் அரண்மனைக் காவலுக்கு நாக குலத்தவரை வைத்திருந்தனர். எனவே வீரம்மிக்க அவர்களின் உருவ அமைப்புக்கு காவற்கல்லும், மேலும் பல்வேறு அமைப்புக்களையும் நிர்மாணித்துள்ளனர்.

- இக்கல்லில் புன்கலசம், நிறைகுடம், ஏழுதலை பாம்பு, விமான உருவம், நாகப்பட உருவம், துவாரபாலகர் போன்ற உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

- கி.பி. 3ஆம் நூற்றாண்டில் நிர்மாணிக்கப்பட்ட ரத்ன பிரசாத் காவற்கல் ஆசியாவிலேயே சிறப்பான கலைப்படைப்பாக கருதப்படுகின்மை குறிப்பிடத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- இச்செதுக்கல் அநுராதபுர மாவட்டத்தில் தேவநம்பியதீச மன்னனால் அமைக்கப்பட்ட இசுறுமுனி விகாரையில் காணப்படுகின்றது.
- 6 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வட இந்திய குப்தர் கால மரபில் இச்சிற்பம் அமைந்துள்ளது. இதனை கஸ்ஸப்பஹரி எனவும் அழைப்பர்.
- இச்சிற்பத்தை சிலர் சிவன் பார்வதி எனவும், சிலர் சித்தார்த்தர் யசோதரை எனவும், சிலர் சாலிய அசோகமாலா எனவும் குறிப்பிடுகின்றனர்.
- இது ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து உயிரோட்டம் பெறும் லௌகீக சிற்பமாகக் காணப்படுகின்றது.
- இதிலுள்ள பெண் செதுக்கலில் பெண்ணிற்கேயுரிய மென்மை, நாணம், முகபாவம், அபிநயம் மற்றும் அங்கலட்சணங்கள் வடிக்கப்பட்டுள்ளதோடு ஆணின் செதுக்கலிலும் ஆணுக்கே உரிய வீரம், ஆண்மை, விவேகம் என்பனவும் மிகச்சிறப்பாக காட்டப்பட்டுள்ளன.
- தலைவனின் உடலில் பூநூலும், அரித்தபதாக மயூர நாட்டிய முத்திரைகள் இருவரிடமும் காணப்படுவதை சுட்டிக்காட்டி இவர்களை சிவனும் பார்வதியும் என ஆனந்த குமார சுவாமி தனது "சிவநடனம்" எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரவட்டக்கல்



➢. பொலன்னறுவை ஆலாஹறண பகுதியிலும், அநுராதபுரத்தின் பிசோ மாளிகையிலும் காணப் -படுகின்றது.

➢. இவை 13ஆம் நூற்றாண்டுககுரியதாகவும் குப்த சிற்பமரபை பிரதிபலிப்பனவாகவும் உள்ளன.

➢. சமயச் சார்பான கட்டடங்கள், தாது கோபங்கள், விகாரைகள் ஆகியவற்றின் வாசற்படிகளில் அரைவட்ட வடிவில் அமைக்கப்பட்டுள்ளன.

➢. இவை பல வகைகளாகக் காணப்படுகின்றன். இதில் சிலவற்றில் எருதின் உருவமும், அன்னத்தின் உருவமும் நீக்கப்பட்டுள்ளன.

➢. சில சந்திரவட்டக்கல்களில் அரை வட்டத்தாமரை வடிவமும், இலை கொடி அலங்கார வடிவமும், யானை, குதிரை, சிங்கம், எருது ஆகிய மிருக உருவங்களும் இறுதியில் தீச்சுடரும் காணப்படுகின்றது.

➢. சிலவற்றில் முதல் வரிசையில் தீச்சுடர், இரண்டாவது வரிசையில் அன்னப் பட்சி. மூன்றாவது வரிசையில் யானைகள், நான்காவது வரிசையில் குதிரைகள் என இவை அனைத்தும் தனித்தனி வரிசைகளாகக் காணப்படுகின்றன.

➢. மனிதர்களின் பிறப்பு, பூப்பு, வியாதி, மரணம் என்பவற்றையே சந்திரவட்டக்கல்களில் வடித்துள்ளனர் என பேராசிரியர் பரணவிதாரன கூறியுள்ளார்.

உதாரணமாக.

| | | |
|---|---|---|
| 1. தாமரை | - | மனித வாழ்வு நிலையற்றது. |
| 2. தீச்சுடர் | - | தீமைகள் அழிக்கப்பட வேண்டும். |
| 3. அன்னம் | - | நன்மை தீமை கொண்ட மனித வாழ்வில் நன்மைகளை மட்டும் தேடிப்பெற வேண்டும் |
| 4. கற்பனைக் கொடி | - | மனித வாழ்வு சிக்கலானது |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹாஸ்எபு நாணயம்



- இலங்கையில் பயன்படுத்தப்பட்ட புராதன நாணயமாகும்.
- இது வட இந்திய வர்த்தகர்களால் இங்கு கொண்டுவரப்பட்ட வெள்ளி நாணயமாகும்.
- இவை இலங்கை இந்திய வர்த்தக நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளன.
- வட்டம், சதுரம், நேர் பக்கங்களுடைய வடிவினைக் கொண்ட இந்த நாணயங்களில் பல்வேறு இலச்சினைகள் பொறிக்கப்பட்டுள்ளன.

வல்லிபுர பொற்சாசனம்



- யாழ்ப்பாணம் வடமராட்சிப் பிரதேசத்தில் வல்லிபுரம் பகுதியில் உள்ள விஷ்ணு கோவில் வளாகத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இது வல்லிபுர தங்க ஓலை எனவும் அழைக்கப்படுகின்றது.
- இச் சாசனத்தில் வசபன், ரிஷிகிரி என்ற அமைச்சர் மூலம் யாழ்ப்பாணத்தில் தனது ஆதிக்கத்தை நிலை நாட்டியமையும், யாழ்ப்பாணத்தை நகதிவ எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருகுணை முத்திரை



➢. இம்முத்திரை திஸ்ஸமகராமவில் உள்ள மாகம எனும் நகரத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

➢. இது உருகுணை இராசதானிக்குரிய களிமண்ணால் செய்யப்பட்ட முத்திரையாகும்.

➢. உருகுணை ஆட்சியாளர்களால் உபயோகிக்கப்பட்ட குறியீடுகள் பலவும் இம்முத்திரையில் காணப்படுகின்றன.

மனிதனும் குதிரை முகமும்
(கி.பி.7ம் அல்லது 8ம் நூற்றாண்டுக்குரியது.



➢. இக்கலை வடிவமானது அநுராதபுர மாவட்டத்திலுள்ள இசுறுமுனிய எனும் விகாரையில் அமைந்துள்ளது.

➢. இச்சிற்பமானது 7ம் நூற்றாண்டுக்குரிய பல்லவகால மரபை வெளிபடுத்துகின்றது.

➢. குதிரை முகம் அக்கினிக் கடவுளையும், மனிதத் தலை மழைக்கு அதிபதியான வருணனையும் குறிக்கிறது.

கொறவக்கல்




➢. கொறவக்கல்லானது தாது கோபத்தில் ஏறிச் செல்லும் படிக்கட்டில் இருமருங்கிலும் அமைக்கப் -பட்டிருந்தது.

➢. இது கருங்கல் மற்றும் சுண்ணாம்பு கொண்டு அமைக்கப்பட்ட கைப்பிடி வரிசையாகும்.

➢. இதில் சிங்கரூப, லியவெல, புன்கலம், மகர தோரணை, மகரரூபம், கொடி அலங்காரம் போன்ற அம்சங்களை உள்ளடக்கிய வடிவமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்பொத்த கல்வெட்டு
(கி.பி. 12ம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டு)



- இக்கல்வெட்டு பொலன்னறுவையில் கீர்த்தி ஸ்ரீ நிசங்கமல்ல மன்னனால் அமைக்கப்பட்ட தொல்பொருள் மூலாதாரமாகும்.
- பிராமி வடிவ எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட இக் கல்வெட்டானது 8 மீற்றர் நீளமும் 4.3 மீற்றர் அகலமும் கொண்டதாகும்.
- இலங்கையில் உள்ள மிகநீண்ட கல்வெட்டாகும்.

இபன்பதூதா



- அராபிய தேசத்தவரான இவர் கி.பி.1344 ஆம் ஆண்டு சிவனொளிபாத மலையைத் (செரண்டிப் சிகரம்) தரிசிக்கும் நோக்குடன் இலங்கைக்கு வந்த தேசசஞ்சாரி என கூறப்படுகிறது.
- இவர் தனது நாட்குறிப்பில் வடக்கின் ஆரியச் சக்கரவர்த்தி மன்னர்களை "இலங்கையின் சுல்தான்கள்" என குறிப்பிட்டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளோடியஸ் தொலமி



- இவர் கி.மு. 2ம் நூற்றாண்டளவில் முதன் முதலில் உலகப்படத்தை வரைந்த கிரேக்க நாட்டவராவார்.
- இவரின் முதல் உலகப்படத்தில் இலங்கையை "தப்ரபேன்" என குறிப்பிட்டுள்ளார்.
- இவரின் நூல்களில் புகழ் பெற்ற நூலாக "பூகோள சாஸ்திரப் பிரவேசம்" விளங்குகிறது.

அரிஸ்டோட்டில்



- கிரேக்கம் ஸ்ட்டாக்ரா நகரத்தை தாயகமாக கொண்ட இவர் பிளேட்டோவின் சீடர் ஆவார்.
- கி.மு. 348-322 வரையான காலப் பகுதியில் இவர் வாழ்ந்ததாக அறியமுடிகிறது.
- இவரின் தத்துவக் கல்லூரி எதென்ஸ் நகரில் அமைந்துள்ளது.

மெகஸ்தனிஸ்



- இவர் சந்திரகுப்த மௌரியின் தூதுவராக பணியாற்றிய கிரேக்க நாட்டவராவார்.
- இவரின் "இண்டிக்கா" எனும் இந்தியா பற்றிய நூலில் இலங்கை பற்றிய விடயங்களையும் குறிப்பிட்டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றொபர்ட் நொக்ஸ்



➢. கி.பி. 1641-1720 காலப்பகுதியில் வாழ்ந்த இங்கிலாந்து நாட்டவராவார்.

➢. 1658 ஆம் ஆண்டு இந்தியாவில் இருந்து பாரசீகம் நோக்கி பயணித்த இவர்களது கப்பல் விபத்துக்குள்ளாகி இலங்கையின் திருகோணமலைக் கரையை வந்தடைந்தது.


➢. இவர்கள் இலங்கை வந்த போது இவரும் இவரது நண்பர்களும் இரண்டாம் இராஜசிங்க மன்னனால் சிறைப்பிடிக்கப்பட்டனர்.

➢. இவர் பத்தொன்பது ஆண்டுகால சிறைவாசத்திற்கு பின் சிறையிலிருந்து தப்பி மன்னார் அரிப்பு பிரதேசத்தில் ஒளிந்து கொண்டார்.

➢. பின்பு மாந்தையிலிருந்து பத்தேவியாவிற்கு சென்று அங்கிருந்து தனது தாயகம் சென்றடைந்தாரர்.

➢. இவர் இஙகிலாந்து சென்று இலங்கை பற்றிய தகவல்களை உள்ளடக்கி "இலங்கைத் தீவுகளுடனான வரலாற்றுத் தொடர்புகள்" என்ற நூலை வெளியிட்டார்.

பனாகடுவ செப்பேடு




➢. முதலாம் விஜயபாகு மன்னனால் எழுதப்பட்ட பணாக்கடுவ செப்பேடு இதுவாகும்.

➢. இது தனக்கு உதவி செய்த சித்தறும்பி புத்தநாயக என்னும் அதிகாரிக்கு நன்றிக் கடனாக வழங்கப்பட்ட பரிசுகளும் சலுகைகளும் பற்றி அறியக்கூடிய ஆவணமாக அமைந்துள்ளது.

➢. கி.பி 11-12 ஆம் நூற்றாண்டுக்குரிய வரலாற்றை அறிய இது பெரிதும் உதவியாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகியன்கல குகை



- இக்குகை வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்களின் வாழ்விடமாகக் கருதப்பட்டது.
- இது களுத்துறையில் உள்ள புளத்சிங்கள எனும் இடத்தில் உள்ள யட்டகம்பிடிய கிராமத்தில் அமைந்துள்ளது.
- இங்கு 35,000 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் மனிதன் வாழ்ந்திருந்தனர்.
- இக்குகையிலே வெவ்வேறு காலப்பகுதிகளுக்குரிய ஒன்பது மனித எலும்புக்கூடுகள் கண்டுப்பிடிக்கப்பட்டன.
- இலங்கையின் தாழ்நில ஈரவலயக் குகைகளில் மிகப் பிரதானமானதாகவும் மிகப் பெரியதாகவும் விளங்குகிறது.
- இங்கு நத்தை ஓடுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.


கேத்திர கணித வடிவிலான கல்லாயுதம்



- இலங்கையின் மத்திய காலத்திற்குரிய கேத்திர கணித வடிவிலான கல்லாயுதங்களாகும்.
- இவை நிலக்கண்ணாடி எனும் பளிங்கு (குவாட்ஸ்) கற்பாறையால் உருவாக்கப்பட்டுள்ளன.
- இக்கல்லாயுதங்கள் அக்கால தொழில்நுட்பத்தினை சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடரஞ்சாமடவில் உள்ள வீடு



- இது உடரஞ்சாமட எனுமிடத்தில் அமைந்திருந்த வீட்டின் வரைபடமாகும்.

- அகழ்வின் போது கிடைத்த அத்திவாரத்தை அடிப்படையாக கொண்டு கற்பனையில் வரையப் பட்டதாகும்.

- இவ்வீட்டிலிருந்து உடைந்த மட்பாண்டத் துண்டுகள், சமையலறை உபகரணங்கள், கல்லாயுதங்கள், விலங்குகளின் எலும்புகள், களிமண் மணிகள், பெண்கள் கண்ணுக்கு மையிடப்பயன்படுத்திய குச்சிகள் போன்றவை அகழ்வின் போது கிடைக்கப்பட்டவையாகும்.

பாதிகாபய மன்னன் உருவச்சிலை



- இவனின் உருவச்சிலை ருவன்வெலிசாயவின் முற்றத்தில் காணப்படுகிறது.

- இவன் ருவன்வெலிசாய விகாரையை அலங்கரிப்பதற்காக உரோமாபுரியிலிருந்து கண்ணாடிகளையும், பளிங்குகளையும் கொண்டுவந்தான் என வரலாறுகள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடரஞ்சாமட கல்லறை



- இக்கல்லறையானது இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள உடரஞ்சாமட அரசினர் பாடசாலையில் 2007 ஆம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது.
- இது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துடன் தொடர்புபட்டது எனக் கருதப்படுகிறது.
- 3350 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்களால் பயன்படுத்தபபட்டது.

மணிமாலை



- இம்மணிமாலை இப்பன்கடுவ கல்லறை மயானத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இம்மாலை கி.மு.700 - கி.மு.450 ஆண்டளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

- இது பிரபுக்கள் மற்றும் பருமகர்களின் ஆடம்பர வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றது.
- இம்மாலையை உருவாக்க தேவையான மணிகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை என வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன

இப்பன்கட்டுவ கல்லறை




- இக்கல்லறை தம்புள்ள கவேவல பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- மெகாலிதிக் யுகம் எனும் கி.மு.700 - கி.மு.450 ஆம் நூற்றாண்டுக்குரியது என நம்பப்படுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் முத்திரை



➢. இம் முத் திரைகள் திஸ்ஸமகராமவில் உள்ள நகரக் கட்டிடமொன்றில் கண்டுபிடிக்கப்பட்டது.

➢. அரச அதிகாரிகளால பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் இம்முத்திரைகள் கண்டெடுக்கப்பட்ட போது இதில் எவ்வித எழுத்துக்களும் காணப்படவில்லை.

புராதன மடைக்கதவு



➢. இது மதுறு ஓயா நீர்தேக்க அணைக்கருகில் குளத்திலிருந்து நீரை வெளியேற்றுவதற்காக அமைக்கப்பட்ட நீர்ப்பாசன அமைப்பாகும்.

➢. இம்மடைக்கதவு மகாசேன மன்னன் காலத்தில் காணப்பட்ட நீர்ப்பாசனப் பொறிமுறைத் தொழினுட்பத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

கருங்கல் பாலம




➢. அது காணப்படும் இடம் அநுராதபுரம் ஆகும்.

➢. இப்பாலமானது அநுராதபுர மாவட்டத்திலுள்ள மல்வத்து ஓயாவைக் கடப்பதற்காக அமைக்கப்பட்டது.

➢. இங்கு அடிப்படை விஞ்ஞான அறிவின் தொழிநுட்பம் பயன் -படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராதன இரும்புருக்கு சூளை



- இரும்புத் தாதிலிருந்து இரும்பு பிரித்தெடுக்கும் நுட்ப முறையினை இது எடுத்துக்காட்டுகின்றது.
- சப்பிரகமுவ மாகாணத்திலுள்ள சமனலவெவ எனும் இடத்திலும், அலகொல வெவ தெஹிகஹ அலகந்த எனும் இடத்திலும் இவ் இரும்புருக்கு சூளை கண்டுபிடிக்கப்பட்டது.
- இச் சூளையானது இயற்கையான காற்று சக்தியை பயன்படுத்தி இயக்கப்பட்டுள்ளது.


புராதன வைத்தியசாலை




- இவ் வைத்தியசாலையானது 2000 ஆண்டுகள் பழமையானதாகும.
- இது இரண்டாம் சேன மன்னனால் நிர்மாணிக்கப்பட்டதாக அறியமுடிகிறது.
- இங்கு பரந்த உடபகுதியும், வெளிப்பகுதியும் காணப்படுவதுடன் பெரிய மற்றும் சிறிய அளவிலான அறைகளும் காணப்படுகின்றன.
- சிகிச்சை பெறுபவர்கள், ஓய்வு பெறுபவர்கள் மற்றும் பிக்குகளுக்கென பிரித்தியேகமான இடங்களையும் கொண்டு இவ்வைத்தியசாலையானது மிகவும் நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற வேலைப்பாடுகளுடன் கூடிய மட்பாண்டம்





- இது உடரஞ்சாமட எனும் கிராமத்தில் புராதன வீடு ஒன்றில் கண்டெடுக்கப்பட்ட நிற வேலைப்பாடுகளுடன் கூடிய மட்பாண்டமாகும்.
- இப்பாத்திரம் "மடக்கு" என்ற பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது.
- இப்பாத்திரத்தில் வெள்ளை நிறப் பின்னணியில் சிவப்பு நிறக் கோடுகள் சம அளவு இடைவெளியில் வரையப்பட்டுள்ளன.
- மேலும் இதில் வெளிப்புறமும், கீழ்ப்புறமும் அலங்கரிக்கப் -பட்டுள்ளதோடு மட்பாண்ட அச்சு ஒன்றின் மூலம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.
- ஆதிகாலம் தொட்டு வனைதல் தொழினுட்பம் இலங்கையிலிருந்து வந்ததற்கு இது ஓர் உதாரணமாகும்.

தெடிகம யானை விளக்கு




- இவ்விளக்கானது கேகாலை மாவட்டத்தில் கொட்டவெகர தெடிகம எனும் இடத்தில் 1951 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.
- இது வெண்கலத்தால் செய்யப்பட்ட விளக்காகும்.
- இவ்விளக்கு எரிவதற்கு தேவையான எண்ணெய் யானையின் வயிற்றில் நிரப்பப்பட்டிருக்கும். யானையின் பின்னங்கால்களில் இரண்டிற்கும் இடையிலிருந்து எண்ணெய் வற்றி தீபம் அணையப் போகும் சந்தர்ப்பத்தில் தானாக எண்ணெய் வருமாறு அமைக்கப்பட்டுள்ளது.
- விளக்கில் எண்ணெய் மீள் நிரப்பப்படும் செயல் முறை அசையா நீர் விஞ்ஞான முறை எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவ ஓடம்




➢ இது நோயாளர்களை மூலிகை நீரில் அமிழ்த்தி சிகிச்சை மேற்கொள்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

➢ 2.5 மீற்றர் நீளமும் 1 மீற்றர் அகலமும் கொண்ட இம் மருத்துவ ஓடம் பொலன்னறுவை ஆலாஹன பிரிவெனாவில் காணப்படுகிறது.

➢ புதைபொருள் ஆணையாளர் H.C.P.பெல் என்பவரால் 1896 ஆம் ஆண்டு தூபாராம அகழ்வின் போது கண்டு பிடிக்கப்பட்டது.

➢ இது அநுராதபுரம், அபயகிரிவிகாரை, மெதிரிகிரியவிகாரை, மிகுந்தலை ஆகிய இடங்களிலும் காணப்படுகின்றது

சிகிரியா



➢ இது கி.பி. 5ஆம் நூற்றாண்டில் இயற்கைச் சூழலில் நிர்மாணிக்கப்பட்ட பாதுகாப்பு அரணாகும்.


➢ தனது சகோதரன் முகலன் மீண்டும் படை எடுத்து வருவான் என்ற அச்சத்தாலும், எதிரிகளிடமிருந்து தன்னை பாதுகாத்துகொள்வதற்காகவும் முதலாம் காசியப்பன் இவ்விடத்தினை தெரிவு செய்து ஆட்சியமைத்தான்.

➢ கடல் மட்டத்திலிருந்து 180 மீற்றர் உயரத்தில் அண்சமவெளியில் அமைந்துள்ள எச்சக்குன்று இதுவாகும்.

➢ இங்கு நீர்ப்பூங்காக்கள், ஓவியங்கள், உயரமான குன்றின் உச்சியில் அமைந்துள்ள அரசமாளிகைகள் என்பன சிறப்பு சேர்ப்பனவாகவுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராதன முதலாம் இலக்க சிவாலயம்



➢. இது சோழர்களால் பொலன்னறுவையில் அமைக்கப்பட்ட முதலாம் இலக்க சிவாலயமாகும்.

➢. இவ்வாலயம் 12 ஆம் நூற்றாண்டில் பாண்டியர் கால சிற்ப மரபையொட்டி அமைக்கப்பட்டுள்ளது.


➢. சோழர்களின் இந்து மதவழிபாட்டுக்காக நிர்மாணிக்கப் பட்டதாகும்.

➢. ஆலயம் தனிகருங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் கோபுரமானது செங்கற்களால் அமைக்கப் பட்டுள்ளதால் அவை இன்று அழிவடைந்துள்ளன.

➢. சிறிய வாசல் ஒன்று சேதமடைந்த நிலையில் காணப்படுவதோடு அதில் சிறிய அலங்கார வேலைப்பாடுகளும் காணப்படுகின்றது.

➢. தூண்கள் மிக நுணுக்கமாக கட்டப்பட்டுள்ளது இதன் சிறப்பம்சமாகும்.

தாமரைத் தடாகம்




➢. முதலாம் பராக்கிரமபாகுவினால் பொலன்னறுவையில் அமைக்கப்பட்ட நீர்த் தடாகமாகும்.

➢. இந்நிர்மாணம் தாமரை வடிவில் இருப்பதால் இதனை தாமரைத் தடாகம் என்றழைக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமாரப் பொய்கை




➢. இது முதலாம் பராக்கிரம - பாகுவினால் பொலன்னறுவையில் அமைக்கப்பட்ட மற்றுமொரு நீர்த் தடாகமாகும்.

➢. கருங்கல்லைக் கொண்டு நாறசதுர வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

➢. இதனை வம்சக்கதைகளில் "சீலம்பொககரணி" என்ற பெயர் கொண்டும் அழைக்கின்றனர்.

மிருசவெட்டி தூபி




➢. இது துட்டகைமுனு மன்னனால அநுராதபுரத்தில் அமைக்கப் -பட்ட மற்றுமொரு தாதுகோபுரம் ஆகும்.

➢. இத்தூபி குடம் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது.

➢. துட்டகைமுனு மன்னன் புத்தரின் சின்னங்களை ஓரிடத்தில் வைத்துவிட்டு திசாவாவியில் குளிப்பதற்கு சென்று திரும்பி வந்து எடுக்க முயற்சித்தபோது அதை அசைக்க முடியவில்லையாம். எனவே அவ்விடத்திலேயே தாதுகோபுரம் கட்டப்பட்டதாக ஓர் வரலாற்றுக் கதையும் உண்டு.

குட்டம் பொய்கை



➢. முதலாம் அக்போ மன்னனால் அநுராதபுரத்தில் அமைக்கப்பட்ட நீர்த் தடாகமாகும்.


➢. அபயகிரி விகாரைக்கு அருகில் இத்தடாகம் அமைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிக்குகளின் நீர்த்தேவையை நிறைவு செய்வதற்காக செப்பமிடப்பட்ட கருங்கல்லினால் அமைக்கப்பட்டுள்ளது.
- இரண்டு தடாகங்கள் ஒன்றுடன் ஒன்று இணைத்து நிர்மாணிக்கப்பட்டதால் இதனை குட்டம் பொய்கை/ யமக்க பொக்குண என்றழைக்கின்றனர்.
- வடக்குப் பகுதியில் வேதாளம் ஒன்றின் முகத்துக்குள் இருந்து நீர் வருவதாக அமைக்கப்பட்டுள்ளது.
- கற்காலத்தில் ஐந்து நாகபாம்புகளின் தலைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

Municipal Council Public Library

நிஸ்ஸங்க லதா மண்டபம்



- இது கீர்த்தி ஸ்ரீ நிஸ்ஸங்கமல்ல மன்னனால் பொலன்னறுவையில் அமைக்கப்பட்ட மண்டபமாகும்.
- நிஸ்ஸங்கமல்ல மன்னனால் அமைக்கப்பட்ட மண்டபம் எனபதால் இதனை "நிஸ்ஸங்கலதா மண்டபம்" என்கின்றனர்.
- இம்மண்டபம் 34 அடி 8 அங்குலம் நீளமும், 28 அடி 8 அங்குலம் அகலமும், 8 அங்குலம் தடிப்பும் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- இதன் மத்தியில் 7 அடி உயரமான 8 தூண்கள் தாமரைத் தண்டின் வடிவில் அமைந்துள்ளன. இவை மூன்று வளைவுகளைக் கொண்டவை.
- இதன் கீழ் மனிதர்கள் வணங்குவது போல் செதுக்கல் காணப்படுவதுடன் நீர்க்குமிழி வடிவில் தாகபையும் காணப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகிரியா நீர்ப்பூங்கா

900
531
Acc



➢. சிகிரியாவின் மேற்கு நந்தவனத்தில் காணப்படும் சிறப்பான நிர்மாணமே நீர்ப்பூங்காவாகும்.

➢. இக்குன்றை சுற்றி அமைக்கப்பட்ட நீர் அகழி எட்டு கிலோ மீற்றர் நீளமானதாகும்.

➢. மேற்கு நீர்ப்பூங்காவின் ஊடாக சிகிரியா குன்று வரையான பாதையின் இரு மருங்கிலும் நான்கு நீர்ப்பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன.


➢. 600 அடி உயரத்திலிருந்து வாய்க்கால் ஒன்றின் மூலம் சமவெளியை நோக்கி ஓடும் நீரை திடீரெனத் தடுக்கப்பட்டு கணிசமான அளவு அமுக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் மேலெழச் செய்யும் தொழினுட்பம் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

➢. அமுக்கம் ஏற்படும் இடங்களில் பொருத்தப்பட்ட வட்டவடிவிலான துளைகளிடப்பட்ட கருங்கல் துவாரங்கள் ஊடாக தண்ணீர் மேலெழுந்து விசிறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

➢. கருங்கல் துவாரங்களின் விட்டத்தின் அளவு வேறுபாட்டிற்கேற்ப மேலெழும் தண்ணீரின் உயரத்தில் வேறுபாடுகள் ஏற்படுகிறது.

Arasady Public Library
Municipal Council
Batticaloa

ருவன்வெலிசாய தாதுகோபம்



➢. அநுராதபுரத்தை ஆட்சி செய்த துட்டகைமுனு மன்னனால் கி.மு.137 ஆம் ஆண்டளவில் அமைக்கப்பட்ட தாதுகோபுரம் இதுவாகும்.

➢. நீர்க்குமிழி வடிவமுடைய இத்தூபியானது 300 அடி உயரமும், 950 அடி சுற்றளவும் கொண்ட உலகின் மிக உயரமான கட்டுமானச் சின்னங்களுள் ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இது மகாதூபம், மகாசாய, சுவர்ணமாலி சைத்திய, ரத்னமாலி தாகபா போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகின்றது.

- இலக்கிய மூலாதாரங்களில் பண்டைய காலத்தில் அமைக்கப்பட்ட கட்டடமொன்று பற்றிய நீண்ட விபரங்கள் எழுதப்பட்டிருப்பது ருவன்வெலிசாய தூபிக்கு மட்டுமேயாகும்.

- ருவன்வெலிசாயவின் அத்திவாரம் ஏழு முழம் ஆழத்திற்கு அகழப்பட்டு அதில் பலமான மனிதர்களை கொண்டு சுண்ணாம்புக் கல் இடப்பட்டது.

- சுண்ணாம்புக் கற்பாறைகளுக்கு நீர் ஊற்றி கடின தோலிலான பாதணிகள் அணிந்த யானைகளினால் அக்கலவை மிதித்து மட்டமாக்கப்பட்டு அதில் வெண்ணெய்க்களி எனப்படும் களிமண் இடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டது.

- மேலும் அதின் மேல் கருங்கல் படையொன்றும் சரளைக்கல் படையொன்றும் இடப்பட்டு அதன் மேல் "நவநீதம்" எனப்படும் களிமண் பூசப்பட்டது.

- உலோக வலையொன்று அதன் மேல் விரிக்கப்பட்டு அவ்வலையின் மேல் நல்லெண்ணெயில் நனைக்கப்பட்ட ரன்சிரியஸ் எனப்படும் கற்கள் பரப்பபட்டன.

- இவ்வாறாக ருவன்வெலிசாயவின் அத்திவாரமானது நவீன கொங்கிரீட் தொழிநுட்பத்திற்கு சமமான முறையொன்றின் மூலம் அமைக்கப்பட்டுள்ளது.

- பண்டைய பொறியியலாளர்கள் இவ்விகாரையின் உச்சியில் ஓர் இடிதாங்கியை பொருத்தியுள்ளனர். வரலாற்று மூலாதாரங்களில் அவ்வுபகரணம் "வஜ்ரசும்பட்ட" என்ற பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

- இத்தாது கோபுரத்தின் அடிக்கல் நாட்டல் விழாவுக்காக காஸ்மீர் மற்றும் பல்லவம் ஆகிய நாடுகளிலிருந்து பிக்குகள் வரவழைக்கப்பட்டதாக வரலாற்று மூலாதாரங்கள் கூறுகின்றன.

- இந்திரகுப்த என்னும் தேரர் இவ்விகாரையில் புத்தப் பெருமானின் வாழ்க்கை வரலாற்றை வரைந்தவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Class No : 900
Acc No 531
Arasady Public Library
Municipal Council
Batticaloa.
531



pbd
101003039
VARALARU G-10 PART -1
(SIRUKURIPU)
Rs. 200.00

பூபாலசிங்கம் புத்தகசாலை
202, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொ.பே.எண் : 011 2422321, 0112435713
மின்னஞ்சல் : Poobalasingham202@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org